n.6(அ).4398

சிவமயம். VIII.A.6(அ)

திருச்சிற்றம்பலம்.

# கந்தபுராணச் சங்கிரகம்.

இது

காஞ்சிபுரம் - ஐயன்பேட்டை

காளப்பமுதலியாரவர்கள் குமாரர்

வித்வான்

## சூரப்பமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

இந்நூலாசிரியர் குமாரர்

காளப்பமுதலியாரவர்களால்

சென்னை

பண்டித மித்திர அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விளம்பி௵ தைமீ 1899

MAHAMAHOPADHYAYA

Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

GF
Q23,3P
சிறப்பு

# தற்சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியர் குமாரர்

ம-ா-ா-ஸ்ரீ -. காளப்பமுதலியாரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உசிதமணிப்பொதுவினடமியற்றுமுக்க ணுடையான்றனுளங்களிக்
கப்பொருளளித்தோன், விசிதமணியறுமுகன்சூர்வென்றயின்
னோர்வேந்தனரசெய்தவன்விருப்பமிக்க, சசிமிடற்றினால்காத்
தோனுடற்கந்தப் புராணச்சங்கிரகமிசைத்தான்சான்றோர்யா,ஸிசிக
டியுமதியுடையானையன்பேட்டைநகரில்குரப்பநாவலவேரே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

காஞ்சிபுரம்

மஹாவித்வான்-ஸ்ரீலஸ்ரீ-நமச்சிவாயமுதலியாரவர்கள்

குமாரர்

ம-ா-ா-ஸ்ரீ-வித்வான்-பூ. கந்தசாமிமுதலியாரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கஞ்சமலர்த் தடம்புடைசூ ழையன் பேட்டைக்
காளப்ப வள்ளலருந் தவத்திற் போந்து
செஞ்சொன்மிகுந் தமிழ்க்கடற்கோர் வங்க மாகிச்
சிவபெருமா னெம்பெருமான் றேவர்க் காக
கஞ்சமயின் றவனுதற்கட் புலிங்கத் துற்றோ
னறுங்கமலத் தாட்கன்பாய் நவின்ற சீர்சா
றஞ்சமார்கு ரப்பன்கந் தப்பு ராணச்
சங்கிரகத் தின்றகைமை சாற்றற் பாற்றே.

காஞ்சிபுரம்

ப்ரீசர்ச்மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ம-ா-ா-ஸ்ரீ-பு. கனகசபைநாயகரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செந்நென்மலி தரும்பணைசூ ழையன் பேட்டைச்
செங்குந்தர் திருமரபிற் சிறப்புற் றோங்குங்
கன்னனெனுங் காளப்ப வண்ணன் மேன்மைக்
கான்முளையாய்க் கற்றவர்கண் மணியா யாரும்
பன்னலுறுஞ் குரப்ப னெனுநா மத்தோன்
பச்சைமயில் வாகனற்கே பத்த னாகித்
தன்னமரன் பியற்றுங்கந் தப்பு ராணச்
சங்கிரகத் தின்பெருமை சாற்றொ ணாதே.

ம-௱-௱-ஸ்ரீ, வித்வான்

## வந்தவாசி - தருமராயமுதலியாரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிகரமலிமாடநிறையையன்பேட்டை திகழ்சூரப்பக்கோமான் சேர்ந்திங்கான்பா, னிகரவொளிர்பாவாற்கந்தப்புராணச் சங்கிரகமெ னவொருநூனிகழ்த்தலோர்ந்தே, சுகரனையகச்சியப்பமறையோன் கச்சிச் சுயஞ்சோதியுருவானுன்றுகளில்சேர்த்தி, பகருஞ்சம்பந்தசர ணாலயன்மெய்ப் பரம்பொருளின்சரணடைந்தான்பகரின்மாதோ.

மஹாவித்வான்

ஐயன்பேட்டை-குமாரதேவையரவர்கள் குமாரர்

## ம-௱-௱-ஸ்ரீ வித்வான் - சிவப்பிரகாச ஐயரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செம்மைபெறுந்தர்ப்பணத்தின்சிற்றுருக்குட் டிகழ்பலவாம்பெரு ருக்கடெரிதன்மான, வம்மையப்பனின்றகுகனுடனுட்டு மரும்பெரு ங்காதையைச்சுருக்கியறிஞர்யாரு, மெம்மையினுங்காணுமென்றி றும்பூதெய்த வெழிற்கந்தபுராணச்சங்கிரகந்தன்னை, யிம்மையினிற் றவம்வாய்த்தவையன்பேட்டைக் கிறைசூரப்பகவிஞனிசைத்தான் மன்றே.

வித்வான் - ஐயன்பேட்டை

முனிவீரப்பமுதலியாரவர்கள்

குமாரர்

## ம-௱-௱-ஸ்ரீ, சாரங்கபாணிமுதலியாரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விண்ணவருமண்ணவருமுயமெய்ந்நூலின்
விமலனடிப்பூசனைசெய்காமக்கண்ணி
யண்ணலுஞ்சேர்திருக்காஞ்சியையன்பேட்டை
யணிகிளர்காளப்பவேடவத்திற்றோன்றி
யெண்ணருங்கந்தப்புராணச்சங்க்ரகப்பே
ரியைதமிழ்நாவலர்செவிக்கின்னமுதமாக
நண்ணவியற்றினன்மதுரைச்சங்கப்பாட
னய்வுரைசெய்சூரப்பநாவலோனே.

இந்நூலாசிரியர் மாணாக்கர்
ம-ா-ா-ஸ்ரீ இராஜாம்பேட்டை
இரத்தினமுதலியாரவர்களியற்றிய
எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவபெருமா னுதல்விழியிற் றோன்றித் தேவர்
சிறைதவிர்த்த வாறுமுகச் செம்மல் சீர்த்தி
நவசந்தப் புராணச்சங் க்ரகஞ் சூரப்ப
னாவலர்க ளுளங்களிப்ப நானி லத்தி
லவநாம மடைந்துழல்புன் கவிகள் வெள்கி
யகன்றோட வறிஞரெலா மன்பி னோதிப்
பவசாக ரம்பாற்றிக் குமரன் செய்ய
பதமலரை நித்தமுறப் பகர்ந்தான் மன்னோ.

## சென்னை

மஹா வித்வான்.
காஞ்சீபுரம் - இராமசாமிநாயுடு அவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சூர்முதலைத்தடிந்தநெடுஞ்சுடரிலைவேலோன்காதைநூற்கடலினைந், தேர்முதலவொலிகந்தப்புராணச்சங்கிரகமென விசைத்துச்சீர்த்திப், பேர்முதலபடைத்தவையன்பேட்டையிற்காளப்பவள்ளல் பெருந்தவத்தின், சீர்முதலாயுருத்தவெழிற்சூரப்பநாவலர்கோன்றிகழ்ந்திட்டானே.

வித்வான் - திருமயிலை - சண்முகம்பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ட்டியினிற்கொக்கவித்தசரவணன்றன்காதையைச்சங்கிரகமாகப், பொட்டுநுதலுமையிஞ்சனறம்வளர்த்தவெழிற்காஞ்சிபுரக்கோர்தேத்தா, விட்டிலகுமணிமாடத்தையன்பேட்டையிற்றமிழ்க்கோர்விளக்கேயென்னத், தொட்டசட்டுலகுரைக்குஞ்சூரப்பநாவலவன்றொகுத்தானம்மா.

ம-ா-ா-ஸ்ரீ, திருமழிசை - கந்தசாமிமுதலியாரவர்கள் குமாரரும்,
சொர்க்கபுரம் - இராமலிங்கத் தம்பிரானவர்கள் மாணாக்கருமாகிய
வடிவேலுமுதலியாரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஐயனகரத்தலைமையார்கம்பற்குமரற்கர்மமுதக்காந்தத்
தையனகரத்தலக்கச்சியப்பர்செய்யுட்குடங்கடமிலார்த்தார்பின்னர்
மையனகரத்தருசம்பந்தசரணாலயர்தாம்வகுத்தார்வெண்ணெ
யையனகரத்தறிஞன்சூரப்பனதையிழுதாயளித்தான்மாதோ.

அஷ்டாவதானம்

## பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வலம்பரவு புலவருள மகிழ்ந்தெஞ் ஞான்றும்
வயங்குசண் முகக்கடவுண் மகிமை சூழ்ந்து
நலம்பரவு கற்பனையோ டலங்கா ரத்தி
னயமனைத்து மாங்காங்கு நலக்கத் தீட்டிப்
புலம்பரவு முயர்கவிஞ ரிறும்பூ தெய்தப்
புகழ்கந்த புராணச்சங் கிரக மென்னுந்
தலம்பரவச் சொற்றனனல் லையன் பேட்டை
தங்கிவாழ் சூரப்ப நாவ லோனே.

இந்நூலாசிரியரிடத்துத் தணிகைப்புராணம் பாடங்கேட்டவரும்
தமிழ்ப்பண்டிதருமாகிய

## கோ - இராமலிங்கத்தம்பிரானவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குமரவேள்புகழுரைகந்தப்புராணங் குவலயத்திற்சங்கிரகமாக
வீந்தந்தா, னிமயமகடழுவுதலாற்குழையேகம்ப ரிலகுதிருக்காஞ்சி
யைச்சேரையன்பேட்டை,யமருமொருகாளப்பவள்ளல்செய்தவருந்
தவத்தினங்குமாமுளைத்தமேலோன், றமனையெற்குந்தணிகைப்
புராணமாதி சாற்றியசூரப்பநாவலவரேறே.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்,
தமிழ்ப்பண்டிதரும்,
பண்டிதமித்திரயந்திரசாலைக்கதிபருமாகிய

## ஈக்காடு - இரத்தினவேலுமுதலியாரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கச்சிநகரநந்தழுவுதொண்டைநாட்டிற் கவிஞரெனுஞ்சோலை
செறிதருக்கடம்மு, ளச்சிதையையன்பேட்டைவருசூரப்ப வொண்பு
லவனெனுந்தருவினுதித்துவல்லோர், மெச்சுகந்தச்சங்கிரகக்கனி
யையுண்டு மெய்ப்புலவாசிரமசைத்துமனங்களிக்க, விச்சகத்திற்பு
ன்கவிகளெட்டாதோட வியமபவரும்புகழ்படைத்தநிலவிற்றன்றே

வாழ்

வரந்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கந்தபுராணச்சங்கிரகம்.

## பாயிரம்.

### விநாயகர்துதி.

திருவளர்கயிலைச்சைலமீதிருக்குந்தேவனாறம்பகத்துதித்து, மரு
வளர்பொய்கைச்சரவணந்தன்னின்வளர்ந்துபினசுரனைவதைத்துத்,
தருவளரிமையோர்சிறைதவிர்த்தாண்டசண்முகன்காதையைப்புகல
வொருவளத்தவளக்கோடுடைக்கடவு ளுயர்பதமுளத்தில்வைத்திடு
வாம். (௧)

### கைலாயநாதர்.

சீர்கொண்டவண்கைலைக்கீசனாகிச்செழுங்கமலவிதியரிக்குமரி
யானாகி, யேர்கொண்டமுமலையினுருவமாகியெண்ணில்சராசரங்க
ளுக்குமுயிரதாகிப், பேர்கொண்டதந்திமுகன்குகனைத்தந்தபெருங்
கருணைக்கமலாட்சிக்கிறைவனாகிக், கார்கொண்டபொழிலையனகரின்
மேவுங்கைலாயநாதனடிகருத்துள்வைப்பாம். (௨)

### இதுவுமது.

தானொன்றும்விரும்பாமற்றனங்களீட்டித்தனயருக்கேவைக்கு
மொருதாதைபோல, வானொன்றுசுவர்க்காதியுலகுண்டாக்கிவளா
பொருள்களாங்காங்குமலியச்செய்து, நானொன்றும்பெறுகிலனென்
னடியார்க்கென்றேநான்மறையாற்பறையறைவித்தருவாற்கு, மா
னொன்றுகரதலத்தான்கருணைதன்னைமறவாமலெந்நாளும்வழுத்திவா
ழ்வாம். (௩)

### கமலாட்சி.

ஏரணிகொண்மலையிறைவன்மகளதாகியிருங்கைலைக்கிறைவனை
ருட்டேவியாகிச், சீரணிகொளுலகமெலாமீன்றுந்தாழாச்சிறுகுமரி
யெனும்பெயருமுடையாளாகிப், பேரணிகொள்சிகாழிமன்னனுய்ய
ப்பெருஞானவமுதீந்ததனத்தாளாகிக், காரணிகொள்பொழிலையன
கரின்மேவுங்கமலாட்சியம்மையடிகருத்துள்வைப்பாம். (௪)

### இதுவுமது.

அறமெண்ணான்கிலவுயிர்தழைக்கவாற்றியரனையுயர் மாவடிக்
கீழருச்சித்தேத்தி, மறமெண்ணாவருகம்பைபெருகக்கண்டுவெரதனை

மார்புறத்தழுவிவளைத்தழும்புந், திறமெண்ணுவலர்க்கமுதமீய திருத்தனத்தழும்புமுறச்செய்தெப்போதும், புறமெண்ணுவடிய கமலமேவும்பூவைகாமாட்சிபதம்போற்றிவாழ்வாம்.

### விநாயகர்.

திருத்துளபமாலையணிசெங்கண்மாலுஞ்செழுங்கமலமீதுறையும் விதியுந்தேடிக், கருத்துறவந்தனஞ்செய்யக்காணற்கெட்டாக்கஞ்சமலரடிமுடிகொள்கடவுட்கோவாய், மருக்கமழ்பூங்கோதைகமலாட்சியென்னுமடப்பிடியைமணந்துள்ளமகிழ்வாலீன்ற, தருக்கிவளர்குஞ்சரக்கன்றிணைத்தாள்போற்றித் தாழ்ந்துவினைதீர்ந்துநிதம்வாழ்வமாதோ. (௬)

### சுப்பிரமணியர்.

அந்தமிகுமமரர்குலக்கமலநீடவசுரர்குலக்கருங்குவளைவாடிவீடச், சந்தமிகும்புவியினிடைவந்தபானுதாதுகுதார்க்கடம்புபுனைகந்தனெந்தை, கந்தமிகுமலர்க்குழலாள்கருணைநாட்டக்கமலாட்சியம்மையருள்பருதிவேலோன், றந்தமிகுந்தந்திமுகற்கிளையசெவ்வேடரத்தைநயனகர்முருகன்றாடுதிப்பாம். (௭)

### இதுவுமது.

ஒருவரையடக்கியொருவரையிடங்கொண்டொலிகொள்பேரலையெறிகடலைத், திருவயிறடக்கித்தமிழ்க்கடல்விடுக்குந்திடமுடைக்குடமுனியகத்தி, னிருளறஞானச்சுடர்விளக்கேற்றமிணையிலிகுரவனெம்பெருமான், றிருவிளையாட்டினியலுணர்ந்தெமதுதீவினையாட்டினைச்சிதைப்பாம். (௮)

### நந்திதேவர்.

வேறு.

அண்ணலாரடியைப்போற்றுமமரர்கண்மகுடகோடி
மண்ணியமணிகள்சிந்திவழிபடப்பிரம்பாற்றாக்கி
நண்ணியவன்பர்நாளுநலவலகிடுதற்காக்கும்
புண்ணியவடிகணந்திபூங்கழற்கன்புசெய்வாம். (௯)

### சரச்சுவதி.

வேறு.

திருக்கிளர்தென்பொதியவரையதன்கட்டோன்றித்திகழ்சங்கப்பலகையெனுந்தொட்டிலேறி, மருக்கமழுமலர்க்கமலவேதன்வேதம்வளர்த்ததிருச்செந்நாவும்வளங்கொண்மென்றோட், டிருக்கிளர்வெண்டாமரையுங்காணியாக்கொண் டுணர்வுடையபுலவர்களுள்ளத்தும்

வாழ்வுற், றிருக்குமொருகலைமகளைவெள்ளைமானையெனதுளத்தும் வரந்தருமேமேத்தல்செய்வாம். (க0)

### வீரவர்ததேவர்.

பொன்னெனுமின்னுரங்கொண்டபுத்தேணேடும் பூங்கமலோனருடந்தியானனத்தான்,பின்னவற்குப்பின்னவனுப்பிறங்குமேணிப்பெருங்கருணைக்கமலாட்சிபாதப்போதின், மன்னுமணிச்சிலம்பினவதாரஞ்செய்தவரைசெறிநவவீரர்தம்மையெண்ணின், முன்னவனுவுரைக்கவருவீரவாகின்முண்டகத்தாளிணையையென்றன்முடிமேல்வைப்பாம். (கக)

### திருஞானசம்பந்தசுவாமிகள்.

வேறு.

வானநாட்டினுயர்மயிலைப்பதி, கானமாமயிலென்னக்கடந்தை, யூனமற்றவெலும்பையுருச்செயு, ஞானசம்பந்த னற்பதம்போற்றுவாம். (கஉ)

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

செப்பருஞ்சிவமில்லெனுந்தீயர்கண், மைப்பெருந்திரையிற்கலின்மாட்டிட, வொப்பிலப்பனையுன்னிக்கரையுறு, மப்பனற்பதமன்புடனேத்துவாம். (கங)

### சுந்தரமூர்த்திசுவாமிகள்.

ஆதியாகுமரன்கயிலாயனைப்,பாதஞ்சேப்பப்பரவையிடத்தினிற், றூதுவிட்டநற்சுந்தரன்சேவடி, காதலானிதங் கைதொழுதேத்துவாம். (கச)

### மாணிக்கவாசகசுவாமிகள்.

நாட்டிலுள்ளநரிபலநற்பரிக், கூட்டமாகவுங்கூடலிறையக,ேனு டுசேவகனுகவுமுற்றிட, வீட்டுசெந்தமிழ்ழோனடியேத்துவாம். ()

### அறுபத்துமூன்றுநாயன்மார்கள்.

வேறு,

முத்திதருவெண்ணீறுமணியும்பூண்டு முதல்வனெழுத்தைந்தினையுமுறையாலோதிப், பத்திதரும்வழிபாடுபலவாறாற்றிப்பணிவிடையின்வைராகசித்தங்கொண்டு,சித்திதருசிவானுபவச்செல்வராகிச்சிவலோகந்தங்களுக்கேயிடமாநண்ணி,யத்தனடிசார்ந்தவோரறுபான்மூவரடியிணைகண்முடியணியாயணிந்துவாழ்வாம். (கரு)

### ஞானசாரியர்.

ஆதிசிவவேதியர்தங்குலத்துட்டோன்றியருமறைகள்சிவாகமங்களாய்ந்துதேறிச்,சாதியறுதொழிலினுஞ்சீர்வாய்ந்ததென்றேதன்னி

கரில்சிவார்ச்சனையேபணியாக்கொண்டு, சோதிதிகழேகம்பமுடை
யான்பூசைதொன்றுதொட்டுவழிவழியேபுரியுநீரார், கோதிலாவைய
னகர்வாழ்வாரெங்கள்குடிக்குமுதற்குருவானார்குலத்தாள்போற்றி.()

### மரபாசிரியர்.

வேறு.

மணிப்புயவீரர்தமைப்புவிவிடுத்துமற்றவர்வழிபடுமாறு, ளை
ணித்திருக்கச்சிநகர்வயினந்தியெழின்மரபுதித்தநற்குருவா, நணிக்
குகனிருந்தவழிவழிவந்தோனவவீரர்மரபினர்க்கெல்லா, மணிக்குல
குருவாங்கச்சபாலையனேடருஞ்சட்டநாதன்றன்மரபே. (கஅ)

### போதகாசிரியர்.

வேறு.

அக்கரத்தின்குறிசிறிதுமறியாநாயேற் கஃதறிவித்திலக்கியத்தி
னருமைகாட்டித், தக்கவிலக்கணநுட்பமுணர்த்தியேமதகுகலை ந
ுறியவுணர்வளித்தமேலோன், மிக்கபுகழையனகர்மேவியொழுப்வீரு
நவவீரர்கடங்குலத்துத்தோன்றித், தொக்கபுகழ்முனிவீரபூபன்பொ
ற்முட்டுணைமலரென்முடிமீதுசூடினேனால். (கக)

### கச்சியப்பசிவாசாரியர்.

வேறு.

வடமொழியின்வியாதமுனிவகுத்தகாந்தக்
கடலதனைச்செந்தமிழாற்கரைந்தோன்காஞ்சித்
தடநகர்வாழ்மறைமுனிவர்தவத்தில்வந்த
புடவிபுகழ்கச்சியப்பன்பொற்ருள்போற்றி. (உ0)

### அவையடக்கம்.

வேறு.

எழுத்தறியாச்சிறுகுழவிதங்தையத்தப்புத்தகத்தையெழுத்துநோ
க்கி, விழுத்தகவைத்திசைகூட்டிவிளம்பவதைவியந்திடுவர் வெகுளா
ரன்றே, பழுத்தமொழிப்பெரியோர்முன் பண்பிலாப்புன்மொழி
யேன்பகர்ந்தபாட, விழுக்குடையதெனவிகழாதெடுத்தாள்வரென்
பதுகொண்டிசைத்திட்டேனால். (உக)

### இநுவுமது.

குன்றினிருஞ்சிறகரிந்தகூர்வைரப்படைசுமந்தகுவவுத்தோளா
ன், றன்றிருநல்லரசுரிமைதானெய்தத்தானவர்கோனரசுமாளச், து
ன்றுகதிர்வேலெடுத்தவித்தகன்சீர்க்காந்தமதைச்சுருக்கும்பெற்றி, ய
ன்றரக்கனெடுத்தமலையெறும்பெடுக்கமுயலுதலையடுக்குமாதோ. ()

### இதுவுமது.

வேறு.

நன்மைதிகழ்கச்சிநகர்க்கச்சியப்ப னளிர்கடல்போனவின்றதிருக்காந்தந்தன்னைத், தன்மைதிகழ்சம்பந்தசரணாலயன்றகச்சுருக்கிறனதனிற்சுருக்கமாகப், புன்மைதிகழ்புன்மொழியேன்சுருங்கச்சொன்னபுன்கவிதையைப்புலவோர்கள்ழுக்கவென்னும், மென்மைதிகழ்கவிக்கிதுவேயெடுத்துக்காட்டா மதித்தவர்கைக்கொள்வரென வழுத்தினேனால். (௨௯)

பாயிரம் முற்றிற்று.

---

## நாட்டுச்சிறப்பு.

பணிமுகில்பரவிப்பரவைநீர்பருகிவொன்றெருநெந்திமால்வரையை
நணியொழுக்கருவியாறுபாய்ந்தோடிநலங்கிளர்கச்சிமாநகரை
யணிகொளத்தழுவியகன்பணைமருதமாதியவைந்திணைவளர்த்துப்
பணிமுடிக்கிடந்தபார்புகழ்பாலிபாலித்ததொண்டைநாடாமால். ()

---

## நகரச்சிறப்பு.

மந்திகளுலவிப்பொழில்வளஞ்சிதைப்ப மள்ளர்கள்வலையெடுத்தோச்சப்,பந்தெனப்பிடித்திட்டவர்மிசையுந்திப் பலாக்கனிச்சுளைகள்குன்றெறியச்,சிந்தையின்மகிழ்வுற்றவைநகர்களிப்பார்செய்வினைமறப்பர்கண்மள்ளர், முந்தியவளத்தின்சீரெலாநிறைந்துமொய்த்துளகாஞ்சிமாநகரம். (௧)

மறுகுறதென்னம்படப்பையினிருன்மேன்மதிதவழ்ந்திழிமதுவொழுக்கை, நறுமலர்க்குழலியொருத்திகண்காட்டநாயகன்வேற்றுமையுணரா, துறுகலையளவிப்பிழிந்தவன்விடுப்பவுய்ந்தனனுய்ந்தனனென்றுப், பெறுகதியறிந்தேமதிபுறஞ்செல்லும்பெருமைசேர்காஞ்சிமாநகரம். (௨)

தொண்டைநாடதுவேநிலமகடனக்குத் தூமதிவதனமாமென்றுங், கெண்டையங்கண்ணுந்திலகமுமுலைமேற்கிளர்மணிவடமுமாமென்றுந், தண்டமிழறிஞர்வகுத்திடவளங்கூர்தாவில்சீர்க்காஞ்சிமாநகரி,னண்டர்கள்புகழுங்கச்சபேசுரன்வாழாலயமழிவிலாதொளிரும்.

ஆகத் திருவிருத்தம் - ௨௭.

# நைமிசாரணியச்சிறப்பு.

சோதியாலயத்துமுனிவர்கணண்ணிச்சோதியைநீதியோடேத்திப், போதில்வாழ்பவனைப்போற்றியார்தவங்கள்புரியிடம்புகலெனவலனு, நீதிசேர்தருப்பையொன்றெடுத்திதுவோடாய்க்கின்றிடமாமெனவிடுத்தான், மாதவரதன்பின்வரவதுநின்றவளத்ததுநைமிசாரணியம்.

# நூல்வரலாறு.

அந்தமாவனத்திலருந்தவர்வேள்வியாற்றினரறிந்தருஞ்சூதன், வந்தனன்றவர்களெதிர்கொடுவணங்கி மணிபணைமுனிவனையிருத்திச், சிந்தைமாலகன்றுசிறியரேமுய்ந்துதிகழ்கதிபெறுமுறைசெய்வேண், முந்தைமாக்காதைமொழிகெனப்பணிந்தார்முனிவனுமுகமலர்ந்திசைப்பான். (௧)

மதிதவழ்சடிலச்சங்கரனருளும்வள்ளறன்காதையைப்படிப்போர், விதிதரப்பொருளைவிரிக்குநர்கேட்போர்வினைக்கடல்கடந்துவான்முத்திப், பதிபுகுந்திடுவரன்னநற்காதை பரிவுடன் வினவுதற்கிசைந்தீர், கதிதவமுடையீர்காதலாக்கேண்மின்கழறுவனெனமுனிகரைவான். (௨)

பண்டரன்மொழிந்தமறைகளோர்நான்கும்பயிலடிமுடிதடுமாற, விண்டலர்முனிவர்நரர்களும்பிறரும்வீறியவறிவுபோய்மயல், கொண்டுழற்கண்ணன்றனையறந்தளவில் கொடுமறமாற்றினர்வீறக், கண்டருள்விண்டுவேதியனண்டர்கைலையையடைந்தனரன்றே. (௩)

வேறு.

விண்ணவரைநந்திவிடவிமலன்பாற்போய்விரைமலர்த்தாண்முடிசூடிவணங்கவெம்மா, னண்ணுமரசரிமையெயவனென்னமாயனுரைதவுனதின்னருளினடந்ததிந்நா, ளண்ணலெமக்கின்றுமொன்றளித்தல்வேண்டுமன்னதுகேளவனிமிசையாந்தரெல்லாம், உண்ணரினதடிமறந்துமறமேற்கொண்டார் மற்றவர்க்கின்பதஞ்சேரும்வகையேதென்றான். (௪)

வள்ளலுளமிகமகிழ்ந்துமாயனேநீமண்ணினிடைவியாதனெனத்தோன்றித்தீதி, றெள்ளுமறைக்கடலையொருநான்கேயாகச்செய்தெவருங்கதியடையப்புரிதியென்று, முள்ளுமறைதெரித்தமுளந்தெருளாதார்க்கு முணர்வுறவொண்பஃதிரட்டிப்புராணம்பண்டே,

வெள்ளவிளாநந்தியொடுமிசைத்தேமன்னு னெழிற்சனற்குமாரனுக்க ங்கிசைத்தான்கேட்டி. (ரு)

என்னவரனியம்புபணிகொண்டுவிண்ணோ ரியாவரையுமிருக் கைபுகவிடுத்துமாயன், றன்னுதவப்பராசமுனிதவத்திற்றோன்றித் துகளிலாவெதிரிகமாம்வனத்துண்மேவி, மன்னுமறையாவுமுணமு ணர்வாற்றேர்ந்துமண்ணினிடைமாணுக்கர்பரவவைகி, யன்னசன ற்குமாரரிடைத்தேர்ந்தமேன்மை யமைபுராணங்களெனக்கருளக் கேட்டேன். (சு)

ஆங்கவற்றுட்பூங்கொன்றைக்கடவுட்கீரைந் தருந்தளபத்தார் மாயற்கீரிரண்டு, பூங்கமலற்கிரண்டழற்கொன்றலரிக்கொன்றுபுகல் புராணங்களிலெம்பரமன்காதை, யோங்குபத்திற்காந்தமதிற்சரணர் போற்றுமுயர்குமரன்சரிதமதைவினவினோர், தீங்ககலுங்கதியணு குங்கேண்மினென்றுசிறந்தபுகழ்ச்சூதமுனிசெப்பலுற்றான். (எ)

நூல்வரலாறு முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௰௫.

---

# உற்பத்திகாண்டம்.

சீர்கொண்டகைலைமலையுதன்கட்சோதிச்சினகரஞ்சேரரியணை யிற்றிறைவன்றேவி, யார்கொண்டமகிழ்விலுடனுறையுங்காலையம்மை யெழுந்திறைவவுனையெண்ணுத்தக்க, னேர்கொண்டமகளென்னு நாமநீங்கவெனக்கருடியெனவிறைஞ்சவிமவானுன்னை, நீர்கொண்ட தன்மகளாட்பெறுவான்வேண்டி நிகரிலாப்பெருந்தவத்தைநிகழ்த்து கின்றான். (க)

மற்றவன்பால்வளர்ந்திடுதியாம்வந்துன்னைமணத்துமெனவிடை கொடிமவரையிற்சேர்ந்தங், குற்றமலர்த்தடத்தினிடைக்கமலமீதி லொப்பிலுமையொருகுழவியாகிமேவ, நற்றவங்கள்புரிந்திலகுமிம வான்கண்டுநாயகியையெடுத்துமனைநண்ணியேனை, யெற்றுதுணைக் கரத்தளிப்பவளித்தானையாண் டிலகுமுமைபரனையுறத்தவமிழைத் தாள். (உ)

அக்காலையழனுதற்கட்பெருமான்விண்ணோ ரனைவர்களும்பரவ வரமீந்தவாற்றாற், சொக்காருமகேந்திரமாமூதூர்தன்னிற்சூரனரசா

ண்டிருந்தானீது நிற்கத், தக்காரெண்சனகாதிமுனிவர்நால்வர் சங்கரன்றனடிவணங்கியாங்கடைந்து,மிக்கானகதியடையவருள்வாயென்னவிமலனவர்தமைமுன்னாவிருத்திப்பின்னர். (௩)

சங்கையில்சீர்நந்திமுகநோக்கிவிண்ணோர்தானவர்தாபதர்வரினும்விடுவாயல்லை, பைங்கணைவேள்வரின்விடுதிபோதியென்னவாங்கவனேகினன்முனிவர்க்குணர்த்துமாறு,பொங்குமொருகரமுரத்திற்சேர்த்துநாதன்புரிஞானமுத்திரையாங்குறியைக்காட்டித், தங்கினனோர்கணப்போதியோகமாகித் தவமுனிவர்களுமுணர்வையுணர்ந்துநின்றார். (௪)

அந்தமுனிவரர்ஞானமுணர்ந்தின்பப்பே ராழியிலாழ்ந்தனர்களிறைப்போதெம்பெம்மாற், குந்துகடற்புவிமாக்களமரர்கட்குமுலைவிலுகமாயதுயிர்க்குயிராய்நின்ற, முந்துபரனுமையவளைச்சேராதுற்றமுறைமையினலைவர்களுமரிவைபார்தோள், சந்தமுறப்புணர்தலிலாதிருந்தாரேதன்றான்விதிக்குமுறைமாறிற்றாயகாலை. (௫)

காரவுணக்கொடுஞ்சூரன்செய்யுந்துன்பங்கடக்கரிதாய்வானவர்கோன்மாதினோடுஞ், சீரணங்குஞ்சுரர்குழுவுஞ்சூழப்பாலின்றிறத்தொளிருங்கைலைமலைமேவித்தேவனேரிணங்குமலரடியையேத்தவாய்க்காவியல்பதனான்மேருவிடைக்கூடியாங்க, னாரிணங்குஞ்சயந்தனொடுகடவுளோனாகவிலசுரர்சிறையிலிட்டதன்மைகேட்டான்.()

கேட்டளவின்மலைச்சிறகைக்கொய்தவரைக்கிளர்படையோன்பெருந்துயரங்கொண்டேயண்ண,றாட்கமலஞ்சிந்தித்துத்தவங்களாற்றத்தவளவிடைமேற்பரமன்றோன்றிநீயென், வேட்டதுகேளெனவறியான்போன்றுகேட்ப வெஞ்சூரைக்காய்ந்தளித்தல்வேண்டுமென்ன,நீட்டுபுகழானீங்கள்வருந்தலெல்லா நிகழ்தக்கன்மகத்துற்றதீமையென்றான். (௭)

என்றுபரனியம்பியொருமகன்வந்துற்றேயிகலவுணர்களைச்சாடிப்புரப்பானென்ன, நன்றுபெறவாய்மலர்ந்துபரன்சென்றானானாவிறையயிராணியென்னுநாமத், தன்றுணைவியைப்பொன்மனைதன்பால்வைத்துச்சதுமுகன்பாலடைந்தசுரர்செய்யுந்துன்பும், பின்றுகளிலரனுறையுங்கூறவேதன்பினாகியடிக்கக்கைத்தோற் குறைத்துமென்றான். (௮)

போதனரிசுரரோடுமால்பாலெய்திப் போர்தவாறுணைக்கவரிவிதியைநோக்கி, நாதனருண்மாதவர்தம்பொருட்டாலியோகநண்ணி

னன்மேற்றவிர்ந்திமவான்மகளைவேட்டோர், காதலனையுடனளிப் பன்காமன்றன்னைக்கடிதின்விடுகென்னவயனுகரோடு. மாதரவினொ ருபாலுற்றலரோன்வேளை யகத்தினிடைநினைக்கமதன்வந்தானன் றே. (௯)

வந்தவனைநோக்கியரன்யோகநீங்கி மலைமகளைமணம்புரியநின் கைவாளி,சிந்திவருகெனக்கரத்தாற்செவியைப்பொத்திச்சிவன்பெய ருச்சரித்துப்பல்விதத்தினுலு, மந்தமொழிமறத்தறையவலரோன் சிறியறைந்திடுவென்றுளெள்ளனவேளுபங்தா, விந்தவசைசுமப்பதி லுமரன்பாலெய்துமிருப்பழிமேசக்கதெனவிசைந்துசென்ருன். ()

தென்றலெனுமிரதமிசையிரதியோடுஞ்சென்றுபரன்மாலைல கண்டுபோற்றி, வென்றிகொளிக்கைக்குழைத்து மலரம்பைவிரனந் திசிறமலர்வாளிவான்மே, னின்றமதனடிவணங்கவரவேதென்னகீ ழ்ந்தசொலக்கேட்டணிமேல்வாயிறன்றூற், சென்றிடுதியெனப்போ ந்தங்கரன்மேல்வாளிசிந்தவரன்விழிதிறக்கவீழ்ந்தானன்றே. (௧௧)

பின்னிரதிவீழ்ந்தயர்வுகொண்டாணிற்கப்பிரமன்முதலோர்வே வின்செய்கைகாண்பான், மன்னுகிரிப்புறத்தடைந்துமதனன்பட்டு மாய்ந்தவாறறிந்துள்ளம்வருந்திநாதன், றன்னடிபோற்றிடயோகநீங் கிநந்திதனைநினைக்கவரனுமரிமுதலோரிங்கு,தன்னைவிடுகெனவிடுச்க வேண்டுமாறுசொல்லுமெனமனக்களிப்போடுரைப்பாரன்றே. (௧௨)

கந்தமலர்க்குழலுமையைவிமலவேட்டோர்கான்முளையையளி த்தருளவேண்டுமென்ன, வெந்தையதற்கிசைந்தவுணாவிடுத்துச்சீர் கொளிரதிதனக்குமையையணந்தனதுவேங்கைத், தந்திடுதுமெ னமொழிந்துசனகராதிதவமுனிவர்தமைவிடுத்துக்கன்னிசெய்யு, முந் துதவங்காணமுதுமறையோன்போல முதல்வியிடத்தடைதரக்கை கூப்பிநின்ருள். (௧௩)

நின்றவளைமறையவன்பார்த்தென்னைவேண்டி நீடவநீபுரிதலெ னவன்னையென்றும், பொன்றிலரன்றனைப்புணருமாறென்ருெநப் புகழரனையிழித்துரைத்தேயின்றிங்குனை, மன்றல்செயவந்தனெ னப்பிராட்டிசிறிமதியிலாவேதியனேபோதிபோதி, யென்றுரைக்கம றைந்துமறைகாணுநாதனெழில்விடைமேற்ருென்றியுமைகாணநின் ருன். (௧௪)

சாதலுறும்பரம்பரனையெதிர்கண்டம்மைசரங்கூப்பியேனழியறி யாதுவெஞ்சொ, லோதியவெம்பிழைபொறுத்தாளென்னநாதனு

ளாத்தவெலாந்துதித்தனவாக்கொண்டோரானை, நீதிமணம்புரிந்திடு வந்தவீங்கென்றநிகழ்த்தியகன்றிடச்சைலவேந்தன்கேட்டு, மாதை வருகெனமனையின்வந்தாளம்மைவள்ளலுமொண்மைசேர்லைமையன்னி றனே. (கரு)

வேறு.

ஆதிசோதிபணிவரைதங்கியேழ்
நீதிமாதவர்தம்மைநினைந்திடக்
காதலாயவர்வந்துகழுமுழத்
தீதிலாப்பரன்செப்புதன்மேயினான். (கசு)

இலங்குவெற்பணியேந்தலைக்கண்டவ
னலங்கொள்கன்னியைநல்கிடக்கேண்மெனப்
பொலங்கொளக்கிரிபுக்கினர்மாதவர்
தலங்கொணல்லிமவானெதிர்தாழ்ந்தனன். (கஎ)

அந்தமாதவர்க்காதனமீந்துநீர்
வந்தவாறுரைப்பீரெனவள்ளல்சொன்
முந்தக்கூறிமொழியவனேற்றல்கொண்
டெந்தைபாலுற்றிசைத்தனர்யாவுமே. (கஅ)

வள்ளலுள்ளமகிழ்ந்தனர்நிற்கவான்
கொள்ளுநல்வரைக்கோவுமயற்கொடு
தெள்ளுதன்வரைசீர்பெறச்செய்தவ
னுள்ளுமன்பொடரனிடையுற்றனன். (கசு)

ஆதிபாதமதன்புடனேத்தியென்
மாதைமாமணஞ்செய்திடவம்மினென்
றோதிஞனிமவானரனுன்னலுங்
காதலானந்திவந்துகழுமுழா. (உ0)

சம்புநந்தியொண்டாதைமால்விண்ணவ
ரும்பர்பாதலர்பூதலத்துற்றுளோ
ரெம்பெருங்கடிகாண்டரற்கெய்துமென்
றெம்பிரானுணவெய்தினர்யாருமே. (உக)

நந்திதன்பணியானயந்தேத்திரு
ரந்தவேலையயன்முடியாதியாஞ்
சந்தநற்பணிதந்திடமற்றவை
யெந்தைபூண்டெழின்மால்விடையேறினான். (உஉ)

அந்திவேலையனைவருஞ்சூழ்தர
வெந்தைமால்வரைநீங்கியிமகிரி
வந்துமாமறுகுற்றிமவானுறுஞ்
சந்தக்கோயிலின்வாயிலிற்சார்ந்தனன். (௨௩)

மாதவங்கொளம்மேனையுவந்தரன்
பாதபங்கயம்பண்பொடுபூசியா
வேதமின்மனைபுக்கனனெம்பிரான்
காதன்மன்றற்கவினணையேறினன். (௨௪)

வேறு.

இந்தவாறுநீலவேலையாளுமுண்டவெம்பிரான்
கந்தநாறுமோதியைக்கவின்மணஞ்செய்காட்சியை
முந்துமார்வமோடுகாணமுற்றுமங்கணெய்தமண்
ணந்தமாறிநிற்றல்கண்டுநம்பர்கும்பமுனிவனை. (௨௫)

இந்தவேலையிம்பராச்சமஞ்செயற்கிடைந்துநீ
சிந்தனைசெயாதுபொன்னியோடுசெல்கவென்னலும்
விந்தம்வில்வலன்வதாவிவீறழிந்திடச்செயாச்
சிந்தையற்புதத்தினோடுதென்மலைக்கணுற்றனன். (௨௬)

படிபொருந்தவுமையைவீறுடணிகளாற்றிருத்தியே
கடிகொள்வண்ணமிருடைகொண்டகமலயாதர்கைதர
வொடிவிலன்னையாங்கணுற்றணிகள்செய்யவுற்றர
னடிவணங்கவுமையைநாதனரியணைக்கண்வைத்தனன். (௨௭)

மாசில்பூசரத்தனீரைவள்ளலத்தம்விட்டரற்
காசிலென்புதல்வியையளித்தனென்றனன்பொனின்
றூசுடையமாயனாதிசூழ்ந்துளோர்களார்த்தனர்
பேசுநாரதாதியோர்பிறங்குகீதமேத்தினர். (௨௮)

வேறு.

மறைமுடிக்கடவுளுரைப்படிபிரமன்மங்கலச்சடங்குதொடங்கிக்
குறைவறநிறைந்தமங்கலநாணைச்சோதிலாப்பரன்கரங்கொண்டே
பறையறைமுழங்கப்பார்ப்பதிமிடற்றிற்படவொளிவிரித்திடத்தரித்து
நிறைவலஞ்சுழிகொளழல்வலங்கொண்டுநிகரிலாவரியணையிருந்தார்.

அமலனுக்கின்பமாயமுதளிப்பவையனுஞ்சண்டருள்புரிய
நிமலமாகியவப்பரிகலமோடுநிதிகள்பாதமஞ்சனமு [காய்
மூமலநீங்கிடமாயவன்முதலோர்கண்முறைப்படியுண்டபினடைக்
விமலமாதவர்க்கும்வேதியர்தமக்கும்வெறுப்புறவெறுக்கையீந்தருளி

பின்னரெம்பிரானைப்பிராட்டியோடயன்மால் பிறருளோரேவரும்பணிந்தார், மன்னியவிரதிவணங்கிவேடன்னைவள்ளலேயளித்தருளென்ன, வுன்னினன்மதனன்றோன்றவெம்பரமனாளிரதிக்குருவனாய்மற்றோர்க், குன்னருமருவனாதியென்றோதியுரிமையோடவனுடன்விடுத்தான். (௫௧)

இலகியமதனைவிடுத்துமையோடு மெழில்விடையேறிவான்வெள்ளி, மலையடைந்தெவர்க்கும்விடைகொடுத்தருளிமழவிடையிழிந்தணையேறி, யுலகுயிர்தழைக்கப்பிராட்டியோடெந்தையுறுசுகானந்தமுற்றிருந்தா, னிலவியபின்னரொருதினமயன்மானிகழ்சுரர்கயிலையையடைந்தார். (௫௨)

அடைந்தெழினந்திவிடைகொடுவிண்ணோரண்ணறனடியிணைபோற்ற, விடந்தருமன்யோமெக்கெதுவேண்டுமிசைத்திடுமென்னவெஞ்சூரன், கடுந்துயர்புரியவருந்தினோநின்போற்கருதுயோர்மகவளித்தியாங்கள், படுந்துனிதவிர்த்தல்வேண்டுமென்றிறைஞ்சப்பரனறுமுகங்களோடுற்றான். (௫௩)

பொருந்தியவாறுமுகங்களிலுற்ற பொங்கெழில்விழிகளிலாறு, திருந்தியபொறிகடெறித்தலகெங்குந்திரிந்திடவுமையவளெழுந்து, விரிந்தொளிர்சிலம்புபுலம்பிடவேகி விருப்புறுமிருக்கையுட்புகுந்தாள், வருந்தியேயமரர்வள்ளலைவேண்டமற்றரனொருமுகமானான்.()

ஒருமுகமாகியுன்னவப்பொறிகளோராறுபொறிகளாய்மன்னி
வரவரநோக்கிவாயுவோடழலைவதனமோர்ந்தஞ்சலீரிதனைத்
திரைபொருகங்கைதனில்விடுமென்னச்சென்றவர்விடுக்கவக்கங்கை
சரவணந்தன்னினுய்க்கமான்முதலோர்தகுதிசையிருந்தவர்புரந்தார்.

அப்பொழுதாறுவதனபோதரோறத்தமோடலர்கமலத்துச்
செப்பருஞ்சிவமேமுருகனென்றிட்சீர்திகழ்வதையண்டர்கள்கண்டு
துப்புறுகுழவிதனைவளர்த்திடுவோன்றாயறுமீன்விடவுதசண்
டொப்பறமாறுகுழவிகளாகவுறுமடவார்புரந்தனரால். (௫௭)

ஓதிதநிற்கமுன்னரேயெழுந்தங்கோர்டியவைப்பிகைதிருப்பி
யாதிதன்னிடையுற்றரியனைபேவவணிசிலம்புடைந்தசன்புன்வீ
ழேதினன்னவிமாமணிகளிற்சாயலெய்தலுமொன்பதுமடவா [தார்.()
ர்தல்கண்டண்ணலருளொடுமுன்னவர்களொண் கருப்பமதடைந்

கருப்பமதடைந்தமாதரைக்கண்டுகவுரியுமிகச்சினங்கொண்டு
விருப்புறுமதுகருப்பயவாதுமெலிகுவீரென்வுரைவிளம்ப

வருத்தமுற்றனர்களுமையருளொருநாள்வழங்கலுமுயர்நவவீரர் [ர்.
திருத்தமாயுதிக்கவவர்வெயர்வதனிற்றிகழுமோரிலக்கர் வந்துதித்தா

விழுமியவீரவாகுவும்வீரகேசரிவீரமாகேந்த்ரன்
செழுமியலுடையவீரமாகேசன்றுதிகொள்வீரேந்திரன்மற்றை
முழுமிடலுள்ளவீரரார்க்கதனுமுரண்கொளும்வீரமார்த்தாண்டன்
பழுதில்வீராந்தகன்மலிவீரம்பயில்வீரதீரனும்பெயரோர். (கக)

மற்றிவர்தம்மையுமையவள்பார்த்திம்மைந்தர்களாரெனவுள்ள
லுற்றிடுமெமதுசெல்வரென்றுரைக்கவுவப்பினோடன்னையுமரனு
மற்றமில்வீரர்தங்களைநோக்கியடல்செழுமிலக்கர்களுடனே [ர்.
வெற்றிகொணமதுசேய்பணியாற்றி விளங்குவீரெனவிடையளித்தா

படர்கொடுவீரரிருந்தபின்பரமன் பன்னியோடிடபமதேறிச், சுடர்முடியமரரொடுஞ்சரவணத்திற்சூழ்ந்தெழின்மாதினை நோக்கித், தொடர்ந்துமென்றாறுருவுடைச்சேயைத்திக்கவேயெடுத்திடென் றியம்ப, நடைகொளொற்றுமையாலெடுக்கவோராறு நகைமுகமு டையனுயிருந்தான். (சக)

அப்பொழுதம்மைதனத்துநின்றிழிபா லருத்தினமைந்தன்றனை நாதன், றப்புறழ்கரத்திற்றரவெடுத்தையன்சோதிமார்புறவணைத்து மையோ, டொப்பறவிடையினிடையில்வைத்தாங்கணுறுபடவார்க் கருள்புரிந்தே, தப்பறுஞ்சுரனைவிடுத்தெழில்வெள்ளிச்சைலமேலரி யணைசார்ந்தான். (சஉ)

வெந்திறற்கொண்ட விலக்கர்களொன்பான் வீரர்கள்கந்தனைப் போற்றச், சுந்தரமைந்தனவர்களோடெழுந்துவிளையாடலைத்தொ டங்கி, மந்தரகிரியைப்பம்பரமாக்கிமாவுரகனைக்கயிறாக்கொண்,டுந்தி யுந்திசைகொள்கரிகளையெடுத்துமொன்றினோடொன்றைவிட்டிடித் தும். (சங)

திசைப்படு கிரிகளனைத்தையுமெடுத்துச் சிறியகந்துகமென வெறிந்தும், விசும்புறுகொண்டறருதனுவளைத்துவில்லுடுக்களையு ண்டையாக்கி, யசைவறுமமரர்சிரமுரங்களினுயடித்தலுமன்னவர் யார்கொன், மிசைபடப்புரிவரெனவவரிருக்கும்விலங்கலையலைத்த னன்கண்டார். (சச)

விண்ணவர்க்கிறைவன்கண்டிவன்றானேயன்னவர் விளைத்தவனு மென், றெண்ணிநன்மதனையெரித்தவன்சுதனையெதிர்ப்பனென்றி சைந்துநல்வேள்வி,யண்ணலுஞ்சுரருமவர்தமைச்சூழ்ந்தே யடுக்கனே

யுய்த்தனரவைக, டண்ணியமலராச்செய்யவேளடியிற்சார்ந்தருச்சனையெனப்பொலிந்த. (௪௫)

பிள்ளைவெண்மதியைத்தரித்தவன்பிள்ளைபிறங்கியவொருகணைதன்றேல், வெள்ளைவாரணத்தைத்தடிந்தனன்விண்ணோர்வீறியகணைபலதொடுக்க, வள்ளலொண்கணைகள்விடுத்தவர்வருந்திமயக்கமுற்றுணங்குறவியற்றிக், கள்ளமிலுள்ளக்கந்தவேள்களத்தைக்கண்டவனிருந்தனனன்றே. (௪௬)

கண்டெல்விபஞ்சிவல்லமாமுனிவன்கடவுளர்குருவினுக்குரைக்க, வண்டர்கள்வாழ்க்கைமுழுவதுமின்றேயற்றதுகொல்லெனவேங்கித், தண்டருகடம்புக்கிறையிடத்தடைந்துசண்முகநினையுணராமன், மண்டமர்கொண்டவண்டர்கள்பிழையைமனங்கொளா தளித்தியென்றிரந்தான். (௪௭)

வேறு.

அத்தனருளத்திதனைக் கிளையசெவ்வே ளறுமுகவனுளமிரங்கியமரர்தம்மைச், சித்தமிசைநினைக்கவவருயிர்த்தெழுந்துதேவவுனையுணராமற்சிறியேமிங்குனைத்துப்பிழைபொறுத்தருளென்றிறைஞ்சக்கந்தனியம்புவானென்றன்னைச்சிறுசேயாவுள், வைத்தமர்செய்தீர்களினியெனதுவண்மைகாண்மினெனநீள்வடிவமன்னி நின்றான். ()

எம்பெருமானின்றளவிலமரர்போற்றவெழிலோங்குமுல்வடிவமாகக்கண்டே, யும்பரிறையின்பொடுநின்விளையாட்டாலிக்குற்றமைவேறுனமையான்முன்புபோலத், தம்பதம்பெற்றிடவருடியென்றிறைஞ்சத்தகைபெறவவ்வகையருளச்சதமகன்று, னம்பிகைமைந்தனைக்கொடுவெண்கைகளையோர்பா லடைந்தருச்சனைபுரிந்தானமரர்குழு. (௪௯)

சுரர்கந்தன்றனைப்பூசித்திடுதலாலச்சுடர்க்கிரியுங்கந்தகிரியென்னுநாம, மருவுமவண்முருகேசன்வீரரோடேவதிந்திருக்கநாரதமாமுனிவன்வேள்வி, புரியவதிலொருசெச்சையெழுந்தஞ்சிப்புகழ்முனிவர்வானவருங்குகன்பாலெய்தித், திருவடியைத்தொழவுங்கட்கிங்கல்வந்ததீங்கேதுசெப்புமெனச்செப்புகின்றார். (௫௰)

அண்ணலெழினாரதமாமுனிவன்வேள்வியாற்றினனங்கதிலோர் வெந்தகர்வந்துற்றே, விண்ணுலகு மண்ணுலகு நடுங்குமாறுவீறிவருமதனைவிலக்கென்னவீர, வண்மைதிகழ்வீரவாகுவினைநோக்கிமற்றதனைக்கொணர்தி யெனக்கொணர்ந்து போற்றத், திண்மைதிகழ்பரியெனக்கொண்டண்டமெங்குந் திரிந்திருந்தானரனருளுஞ் செவ்வேண்மாதோ. (௫௧)

பின்னொருநாள்வீரரொடுவேளும்வெள்ளிப்பெருவரையின்வழி
யில்விளையாடப்போதன், றன்னிவணங்காதகங்கொண்டிற்றான்கண்
டுதூயவனீயாரெனயான்வேதனென்ன, வன்னபெயருனக்கமைதலா
லேநான்காமருமறையின்பொருளுரையென்றுரைக்கவோளா, மன்னுத
லாற்சிறைப்படுத்த வானோரோதவள்ளல் விடநந்திவந்துசிறைச்சென்
றான். (௫௨)

நந்தியடைந்திறைக்குரைக்கநாதனேற்றினணிக் கந்தவரைபுகு
தக்கந்தன்போற்றச், சிந்தைமகிழ்ந்தலர்விதியைவிடுவாயென்னத்திக
ழ்மறையின்பொருளுரையான்விடுக்கேனென்ன, வந்தமொழிநீயுணர்
ந்தாலுரையென்றையனணிகொள்சவாமிசைவைத்தேயறையக்கே
ட்டு, முந்தைமறையவன்சிறையைமீட்டுச்சென்றார் முருகேசன்வீர
ரொடுமிருந்தானங்கண். (௫௩)

பின்னொருநாட்குடமுனிக்குப்பிறங்குஞானப்பெரும்பொருளை
யுபதேசித்திளையராகித், தன்னுநவவீரரொடுமிலக்கரோடுஞ்சுந்தர
ஞ்சேர்கைலைவரையடைந்தானெந்தை, யன்னையொடும்பணிந்தவர்க
ளிடையிலேயா றானனங்கொளண்ணல்வதிந்திருந்தார்வீரர், மன்னு
மணிகுயின்றொளிசெய்கடையினூடு மருவுபுகழ்க் காப்பாகிநின்றார்
மன்னோ. (௫௪)

வேறு.

அப்பொழுதயன்மாலமரர்கள்கைலையடைந்தெழிற்பரமனைப்போ
ற்றி, வெப்புறுவஞ்சச்சூர்புரிதுன்புவிளம்பலுங்குமரனைநோக்கி, மை
ப்படியவுணன்றன்னைநீவென்று வருகெனமற்றவனெழுந்தே, யிப்
பொழுததனையியற்றுவன்யானென்றியம்பினன்றொழுதனனின்றான்.

பார்புகழ்பதினொருருத்திரர்தம்மைப் பதினோராயுதமெனவரு
ளிக், கூர்கொள்வேலெனவேசத்தியைக்கொடுத்துக் குணமிகுவீரர்
கடமக்குத், தார்பயில்வடிவாள்கத்திகேடகமுந் தந்துநீர்சந்தனோடே
கிக், கார்கொள்வெஞ்சூரன் குலமுழுதழித்துக் கடிதினில்வருகென
நவின்றான். (௫௬)

வேறு.

இவ்விதநிகழ்ந்தபின்னரெழிற்சணமோர்நூற்றெட்டும்
வெவ்வலியுடையபூதவெள்ளமாயிரத்திரட்டி
தெவ்வடுவடிவேற்கந்தன்சேனையாச்சென்மினென்று
திவ்வியமனோவேகப்பேர்த்தேரையுமளித்தானெந்தை. (௫௭)

இந்தவாறையனீந்தேயேசேனைலமாய்வந்து
சுந்தரப்பதந்தாழ்கின்றதுயவேற்குமரன்றன்னை

யந்தமிலன்பினேடிமொர்புறவணைத்துரிவிச்
சந்தணிமுலையாளத்தந்தந்தணன்சுடலையாடி. (௫௮)

வாங்கியவுமையும்பெற்றவயிறுாவலை த்துநீவி
யோங்கியவுச்சிமோந்தேயொப்பிலென்கண்ணேயென்று
ளோங்கிபவிமையோர்தங்களிடர்தவிர்த்திடுவான்சென்று
தூங்கிருளவுணக்காட்டைத்தொலைக்கெனவாழ்த்தினுளே. (௫௯)

இன்னவாறுமையுங்கூறவிருவர்தாட்பணிந்துபோற்றி
மன்னுநல்விடைபெற்றேங்குமாவிரதத்திலேறித்
துன்னியவீரரோடுந்தூயநிண்ணிலக்கர்தாமும்
பொன்னுலகத்தார்பூதவெள்ளமும்புடைநெருங்க. (௬௦)

சாற்றுமெய்ப்புகழ்பெற்றுள்ளதவமுனிவரருள்குழப்
போற்றுசூரியன்பொற்றேரிற்புவிமிசைவந்தவாபோற்
ரேற்றுமொண்கைலைவெற்பைத்துறந்துபாரடைந்துசெவ்வே
ளேற்றவிண்ணவரைக்காக்கவியம்பலகலிக்கச்சென்றான். (௬க)

வானவர்களிப்போடாடவயங்கொள்கந்தருவர்பாடக்
கானமர்மயில்களன்னக்கன்னியர்நடனமாடத்
தானவர்வாடியோடத்தனியெழிற்கைவேலாட
மானவெம்படையினேடும்வளர்குகக்கடவுள்செல்வான் .(௬உ)

தாதலர்கொன்றைவேணிச்சங்கரனருளைப்பெற்றே
பூதலமீதிற்கர்தன்பொருந்தியபடையினேடுங்
காதல்கொண்டேகுங்காலைக்கரிமுகத்தவுணன்வாழுங்
கேதமதடைந்தவானேர்கிரவுஞ்சகிரியைக்கண்டார். (௬௩)

கண்டனர்பயந்துவாடிக்கலங்கினர்மனதிலச்சங்
கொண்டனர்தேவரெல்லாங்குலைகுலைந்தலறியோடித்
திண்டிறற்குமரவேடுஞ்சேவடிவணங்கிநிற்கக்
கண்டுநாரதனுந்தாரகாசுரன்வண்மைசொல்வான். (௬௪)

இக்கிரவுஞ்சப்பாங்கரினியமாயாபுரத்தைப்
பக்குவமாகவாற்றிப்பயில்கின்றுெருவனுங்கண்
டக்கசூரற்குப்பின்னர்ச்சனித்ததாரகனுட்வெய்யோன்
றெக்கவெஞ்சேனைசூழத்துணிந்தரசாளுகின்றான். (௬௫)

தார்புனையிரண்டுருக்கடரித்துமோர்வடிவமான
காருடலவுணர்தம்முட்கடையவன்கனங்கொண்மாயன்
போர்புரியாழிதன்னைப்புனைந்தவன்புரந்தரேச
னூர்நுறந்தொளிப்பவிண்ணேருயிருணுங்கூற்றமாவான். ()

இவன்றனைவெல்லின்யானுமேவருமுய்வேமாதிச்
சிவன்றனதியலுமுன்றன்சீர்த்தியும்பெருகுமேனை
நவந்தருசூரன்சேனைநான்குமேநேசிக்குமக்கா
லுவமையிலும்பர்சேனாபதியாதியெனவுணர்ந்தான். (௬௭)

விண்ணவரிடுக்கண்டீர்க்கவிரிகடற்புவியிற்போந்த
புண்ணியவடிவனானபுராரியின்குமாரன்றன்பி
னண்ணியவீரவாகைநயவருள்சுரந்துநோக்கித்
திண்ணியவவுணர்கோனைச்செறுத்திவண்வருதியென்றே. ()

சூழிவிழிப்பூதவெள்ளங்கூறுமாயிரமும்பின்றோ
ரழிவறுமிலக்கரோடுமவுணர்கோனகரைச்சூழ்ந்து
வழிவழியடைமயானவானவர்களித்துவாழ
விழியிமைத்திடுமுன்வென்றுவிடுமெனவிடுத்தான்செவ்வேள்.

ஓங்கியவீரவாகுவொற்றனைநோக்கிநீபோய்த்
தாங்கியபுகழுறுததாரகனிடத்தடைந்து
தேங்கடம்பணிதோட்கந்தன்செய்திகளனைத்துஞ்செப்பி
வாங்குதிண்புவியிற்போர்க்குவருகெனவழைத்தியென்றான். ()

அன்னவன்றனையிறைஞ்சியடல்கொடாரகனேர்சென்று
முன்னவன்மைந்தனானமுருகவேள்சேனையோடு
மொன்னலர்புகழவந்தானுனைச்சமர்க்கழைக்கவந்தேன்
றன்னிகரில்லாவேலன்றனாமிசைச்சாய்ப்பனென்றான். (௭௧)

வந்ததூதுவனைநோக்கிவண்டிறலவுணன்சீறிச்
செந்தழற்பொறிகள்சிந்தத்திகழிருகண்கள்சேப்ப
விந்திரனயன்மால்விண்ணோரிகல்செயவெருவிநின்றார்
கந்தனென்பவனேவெம்மைக்காய்பவனென்றெழுந்தான். ()

சண்முகன்படையினோடுந்தாரகனெதிர்ந்துசீறி
விண்மழைபொழிவதொப்பவெங்கணைமாரிதூர்ப்பத்
திண்மைகொள்வீரவாகுசெய்யவேளடியைப்போற்றி
யெண்மையில்சரங்களேவியேற்றனனசுரன்மீதே. (௭௩)

இருதிறப்படையுங்கூடியிகல்புரிந்திடுமக்காலை
யரியபாரிடர்கள்வெய்யவசுரன்றன்சேனையெல்லா
முருகவேளருளினாலேமுடிந்திடமடித்தாரங்கட்
கரிமுகத்தவுணன்கண்டுகலங்கினன்மயங்கிநின்றான். (௭௪)

மற்றிவனின்றுவென்றிவண்டிறல்வீரர்தம்மைச்
செற்றிடமுடியாதென்றுதீயமாயையினையுன்னிக்

கற்றதோர்விஞ்சையாலேகடத்துமென்றுயர்ந்தேர்மே
லுற்றனன்கிரவுஞ்சத்தினொளித்தனனுபாயங்கொண்டே. ()

ஓடினனொளித்தானென்றேயொட்பிலாவீரரெல்லாந்
தேடிநாம்பிடிப்போமென்றுதிண்கிரவுஞ்சம்புக்கார்
நீடியவசுரன்பெற்றநிகரின்மாயையினுட்பட்டார்
வாடினர்மதிமயங்கிமலையினுளிருந்தார்வீரர். (எ௬)

அவ்வணமானசாலையரியநாரதனறிந்து
செவ்வணமுருகவேடன்சீறடிமுடியிற்சூடி
மைவ்வணமிடற்றோன்றந்தமதலையேமனத்திற்கெட்டாக்
நைவ்வணவொளியேசெய்யகடம்பனேயென்றுசொல்வான். ()

திண்டிறல்வீரமொய்ம்பன்செவ்விநல்விலக்கரோடுங்
கண்டகனாந்தாரகாசுரனுடன்போர்செய்ய
மண்டியவவுணன்சேனைமடிந்திடவோடிச்சென்றான்
கண்டிவர்பின்சென்றன்னோன்கனத்தமாயையினுட்பட்டார். ()

என்றுநாரதனுரைப்பவெம்மையாளுடையசெவ்வே
ளன்றுநன்றெனச்சிரித்தேநாகவாசிகனைக்காக்கத்
துன்றியவடிவேலுந்திச்சொல்லினமட்டோதில்லெவ்வே
ணின்றெனக்களத்தில்வந்தானெதிர்ந்தனனசுரனங்கண். (எ௯)

கந்தனைநோக்கித்தாரகாசுரன்கழறுகின்றா
னுந்தையெம்மொடுபோர்செய்யவுணர்கிலானமரர்சொல்லால்
வந்தனைபோலுமங்கேசமாய்தியோவாளாவென்று
சிந்தைவெந்தழன்றுசீறிச்செருச்செயத்தொடங்கினானால். (அ௦)

சிலைகுனித்தவுணர்கோமான்செங்கடம்பணிதோண்மீதி
னுலைவுறாச்சரங்களேவவொப்பில்சண்முகன்சினந்தே
யிலைமுகப்பகழியேவவெதிர்நிற்கவஞ்சியோடி
மலையிடையொளித்தான்மாயன்மருகன்வேலினைவிடுத்தான். ()

தாரகற்கிடமதானதடவரைதனைவெந்தீயன்
காரவாமுடலைப்போழ்க்கக்கண்டெழுந்தனர்கள்வீரர்
சேரவான்கங்கைமூழ்கிச்சேர்ந்ததுவேல்வேடன்பா
லேரணியிளைஞர்போந்தேயிறைவனையிறைஞ்சினரால். (அ௨)

நின்றவருளங்களிப்பநீடருள்புரிந்துபின்னர்
வென்றிகொள்வீரவாகைவிளித்துத்தாரகனைக்கொன்ற
வன்றுதன்கையிற்கொண்டவான்படையவனுக்கீந்தா
னன்றில்சூர்க்குலங்கட்கெல்லாநமனெனவந்தவேலன். (அ௩)

கரிமுகத்தவுணன்சாய்ப்பக்காலனூர்புக்கார்தம்மை
வரிசிலைவீரமொய்ம்பன்வள்ளலைநினைந்தெழுப்பி
விரிதிரைக்கடல்போற்பூதவெள்ளமொடிலக்கர்சூழ
வரிமுதலிமையோர்போற்றவையனாசிரியன்செல்வான். (அச)

வெற்றிச்சங்கரிவாய்வைத்துவெய்யசூரஞ்சலூதச்
சுற்றிலுமமரர்சூழ்ந்துதுய்யமங்களங்களோத
வற்றமிலரம்பைமாதரணியசாமரைகள்வீச
வெற்றுநல்விரதமேறியெழின்முருகேசன்செல்வான். (அரு)

தென்றிசைநோக்கிச்சென்றுதிகழ்தேவகிரியினண்ணைத்
துன்றிருட்பகைவனைசூரியன்மறைந்தானங்கட்
குன்றுதலிலாதவேதாகுயிற்றியகோயிலொன்றின்
வெற்றிகொள்வடிவேலையன்வீற்றினிதிருந்தானன்றே. (அசு)

வேறு.

தேசுடையயிற்கரனைத்தேவர்புடைசூழ்ந்து
பூசனைபுரிந்தடிகள்போற்றினர்கணிற்க
வீசுபுகழ்த்தாரகனும்வீடியதுகேட்டு
மாசவுரியென்னுமனையாதுதுயருற்றாள். (அஎ)

அன்னவளுமைந்தனுமமர்க்களமடைந்தே
கன்னிகர்புயத்தனொடுகொங்கையழலுற்றாள்
பின்னசுரேந்திரன்பெருங்கடனியற்றித்
தன்னிகரில்சூரனடிதாழ்ந்தனனுரைத்தான். (அஅ)

வெம்பினன்வருத்தமெனும்வேலையிடைமூழ்கி
யம்புவியில்வீழ்ந்தலறியாகெடுவெனந்தோ
வெம்பியெனையேமுதலயாவரையும்விட்டு
நம்பியரமாதர்தமைநாடியகன்றாயோ. (அகூ)

வேறு.

இவ்வணமாகச்சூரனிரங்கியேதெளிந்துசீறிச்
செவ்வணமுருகவேளைச்சிதைப்பனென்றெழுந்தகாலை
யெவ்வமார்தருமகோபன்முதலினோரிசைத்தகூற்றாற்
பவ்வமார்திரையோய்ந்தென்னப்பார்புரந்திருந்தான்சூரன். ()

வானவரேத்தத்தேவகிரிமிசையிருந்தவள்ளல்
பானுவந்துதித்தகாலைப்பரமனையருச்சித்தேத்திச்
சேனையோடிளைஞர்சூழச்சென்றுதாரசலங்கண்ணுற்
றானமிலவிழுத்தங்கண்டுயர்பருப்பதஞ்சேவித்தான். (கூக)

திருப்பணிமலைகாளத்திதிகழ்வடாரணியங்காஞ்சித்
தருப்பயில்வேதஞ்சோணசைலந்தாழ்ந்தேத்திநீங்கி
மருப்பயில்விருத்தகாசிமழுவலத்தவன்வாழ்தில்லை
யுருப்பயின்மண்ணிச்சேய்ஞலூரிடைவதிந்தான்செவ்வேள். ( )

சேயவணரனைப்பூசைசெய்துபாசுபதங்கொண்டே
போய்மயிலாடுதூயதுறைபொழிலாரூர்க்கண்டு
மேயநான்மாடக்கூடன்மேற்றிசைக்குன்றங்கண்டு
தூயவர்வழுத்துஞ்செந்திற்றொன்னகரிருந்தானெந்தை. (௯௩)

செந்திலம்பதியில்வேதன்செய்தவாலயத்துண்மேவி
யந்தரர்முனிவர்போற்றவமர்ந்திடுமையந்தன்னிற்
கந்தனிந்திரனைநோக்கிக்கடுஞ்சினச்சூரனேனோர்
வந்தவாறுரைத்தியென்னவணங்கிநற்குருவுரைப்பான். (௯௪)

உற்பத்திகாண்டம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௨௯.

# அசுரகாண்டம்.

சுக்கிரன்மாவசுரக்குலமன்னவன்சுலத்தையெனுமாயையினைச்
சக்கிரிமகன்மகனேடனையென்றுரைசாற்றிவிடுத்திடலும்
புக்கிமயக்கியுயக்கிமுயக்கிப்புதுமைகொண்மாமதிலைய
நக்கிடுமண்டபமுற்றனைமீதினினண்ணியணைந்தனரே. (௧)

அணைந்திடுகாலையிலசுரகுலாதிபனாகியசூரன்வரப்
பிணைந்திடுசியவுருக்கொடுமற்றவர்பெருமயன்முற்றுதலுங்
கணந்திகழாயிரவதனமொடக்கணிதத்தையிரட்டியகை
யிணங்கியசிங்கமுகத்தனுதித்தபினியானையதாயினரே. (௨)

ஆகியவிருவருமன்பொடுசேர்தரவடல்பெறுதாரகனுற்
றேகையளித்திடவசமெனவன்னவருணர்வொடுபுணருதலும்
பாகமைவெறிமுகமோடசமுகியெனும்பாவியுதித்தனள்பின் [ரே.
வாகைகொள்வெயர்வினிலிருசதவெள்ளமொடெண்ணிலர்வந்தன

பின்பவர்மூன்றுருவெய்தினர்சூரனும்பின்னவரொடுமேவி
யன்பொடிறைஞ்சியமக்குறுநற்பணியறைகெனவம்முனிவ
னின்புறுநற்றவமுற்றரனீடருளெய்தியதன்மையினாற்
றுன்புறவருமியமன்றனைவென்றுதுறந்தனன்மார்க்கண்டன். (௩)

ஆசலின்மாதவமேபுரிவீரென்றறைந்திடுமவ்வேலை
காதல்செய்மாயையகன்றிடக்காசிபன்கண்டிளையுலைத்
தீககல்வேதியன்வந்துதெருட்டினன்றேர்ந்தனன்மாமுனிவன்
பூதலமீதொருபாலுயர்சூரனுறப்புகரோன்வந்தான். (௫)

வந்தவன்வேள்விசெய்வண்ணமுரைத்திடவண்டிறலவுணர்பிரான்
செந்தழல்வேள்விபன்னுயிரவாண்டுதிடத்துடனேபுரிய
வந்திலனெந்தையெனத்தளர்வெய்தியொர்வாள்கொடுவானேறிச்
சிந்தைவருந்தியொராயிரவாண்டுமெய்சிந்தியுய்வீழ்ந்தனனே. (௬)

வீழ்ந்தவனிளவலொராயிரவாண்டுகள்விலைழவொடுமெய்ப்புழுதும்
போழ்ந்தழலிட்டுயிர்மாய்ப்பவெழுந்திடுபோதொருவேதியனுச்
சூழ்ந்துனைதண்ணுமுறைத்தியலிச்சுமெனச்சுடர்சொற்றிடலுந்
தாழ்ந்தெனதண்ணனெழும்படியாரருடாவெனவோதினனே. (௭)

ஓதியசொற்படிவேதியனுன்னலுமுணர்வொடுசூரனெழப்
போதலையீன்றருண்மால்விடைமீதுபொலிந்தனனெந்தைபிரான்
காதல்கொடன்னவனடிதொழுதேயருள்கருதியவரமெனவே
யாதிதன்விச்சுவரூபமுணர்த்தியபின்னருணல்குவனால். (௮)

நல்கினனெட்டுடனாயிரவண்டநடாத்துமொராணையுமே
லொல்கலிலிந்திரஞாலமெனப்பெயருற்றசயந்தனமு
மல்கலிலந்தணனேமுதலாகியவமரர்தொழுந்தகையும்
பல்குமொரெட்டுடனூறுகமாயுள்படைத்தவொர்நித்தியமும். (௯)

நித்தியமாதியவைம்முகமோடுநிலைத்துவெலற்கரிய
வெத்துகொளத்தியுரித்தவன்சத்திவிளித்திடுமென்றருளி
யத்தனகன்றனன்சுக்கிரனோடிசைந்துறையலுமண்டவிய
மித்தலையென்றுவிரித்தபின்சூரனெழுந்தனனத்திசையே. (௧௦)

சூரனெழுந்துதிசாமுகமெங்குஞ்சயசெயமுற்றனுகி
வீரமகேந்திரமென்னுமொர்மாநகர்விரைவொடுதென்கடலிற்
பாரவிலங்கையொடெண்ணகர்சூழ்தரப்பண்டொடியற்றியதிற்
றீரர்வணங்கிடமகுடமணிந்துயர்தீயவனரசுறநாள். (௧௧)

அரசுசெய்மன்னவன்வடகடலிடையோராசுரமெனுநகரின்
முரணுறுவாகைகொள்சீயமுகாசுரன்முதிரடலுடனுள
விரைசெறியுங்கிரவுஞ்சவனாப்புடைவினைகொண்மாயாபுரத்திற்
புரசைமதக்கரிவதனனிருந்திறைபோற்றவும்விட்டனனே. (௧௨)

வேறு.

திருமுடிகொண்டசூரன்றிருமறுமார்பன்றன்னை
வருகெனவிளித்தகாலவருதியென்றுரைத்துப்பின்னர்

மருவுடைமலரோய்நித்தமதிகொள்பஞ்சாங்கமோதி
விரைவுடன்செல்கென்றேதிவிளம்புவான்பருதியோடும். (௧௩)

இந்நகர்தன்னிலென்றுமிளங்கதிர்பரப்புகென்றுந்
தன்னிகர்மதியேயுன்றன்றண்கலைகுறைதலின்றித்
துன்னுதியென்றுந்தூயகாலினைநகர்விளக்கி
மன்னுதியென்றுந்தீயைமலரெனவிருத்தியென்றும். (௧௪)

வருணனைநோக்கிச்சந்திவளம்படுபன்னீர்சேர்த்துப்
பருணிதர்புகழுமென்றன்பாரெலாந்தெறிநீயென்று
முரணுறுமமரரோடுமுனைகொளுங்குலிசவேலோய்
சரணெனவெங்குற்றேவல்சார்ந்துநீபுரிதியென்றும். (௧௫)

இவ்வணமாகச்சூரனேவர்க்குமேவல்சொல்ல
வவ்வுரைமறுக்காராகியவரவரேவல்கொண்டார்
பவ்வமின்மதிமுகத்துப்பதுமகோமளையோடின்னுந்
திவ்வியமாதராரைத்திருமணஞ்செய்துற்றானல். (௧௬)

விறலரிமுகத்தனுக்குவிபுதையைமணஞ்செய்வித்துத்
தறுகணன்றாரகற்குச்சவுரியைமணஞ்செய்வித்துத்
திறலிருவருக்குநான்காஞ்சேனைகள்பலவுநல்கி
யுறுமவர்க்கமைத்தவூரிலுவப்பொடுஞ்செலவுய்த்தானால். (௧௭)

தம்பியரகன்றபின்னர்த்தானவர்தமிற்சிலோரை
யும்பர்பாதலமெண்டிக்கோடொழிந்தமற்றெவ்விடத்தும்
வெம்பியபடைகளோன்றும்விரிந்திடவிடுத்தானல்ல
வம்பவிழ்மாலைவேய்ந்தவண்டிறலவுணர்கோமான். (௧௮)

பணிபுரிந்துழலுந்தேவர்தங்களைப்பார்த்துநாளு
மணியெறிகடலின்மீனைவாரிவந்தளிப்பீரென்னத்
துணிவுடன்செய்தேநின்றார்தொகுபதுமகோமளைக்குத்
திணிகிளர்சீர்த்தியெங்குந்திளைத்திடவுதித்தான்மைந்தன். ()

மைந்தன்வந்துதித்தகாலைமகிழ்வுகொண்டவுணர்கோமான்
றந்தபினசுரர்க்கெல்லாந்தமனியமணிகள்யாவுஞ்
சுந்தரத்தொட்டிறன்னிற்சயனையுய்த்திருக்குமெல்லை
வந்தெழுமிரவிக்காந்திவளர்மகன்மீதிற்றாக்க. (௨௰)

அந்தமார்மைந்தன்வானத்தாதவன்றன்னைக்கொண்டே
சந்தமார்தொட்டிலோடுந்தகவுடன்கட்டவேதன்
வந்துநீக்கியவோர்செய்திவாளவுணன்றான்கேட்டுப்
பந்தமாரிவனுக்குப்பேர்பானுகோபன்றானென்றான். (௨௧)

இப்பெயர்கொண்டமைந்தனிரவியைவெற்றிகொண்டர
னெய்ப்பிலக்கினிமுகத்தோனிரணியன்வச்ரவர்கு
மைப்பொலிகூந்தற்பத்மகோமளைவயிற்றில்வந்தா
ரப்பரிசேனைமாதரள்ளின்மைந்தர்களையின்றார். (உ௨)

சிங்கமாமுகனுநூறுசேய்களையின்றான்பின்ன
ரங்கரிமுகத்தோன்வென்றியசுரேந்திரற்றந்தானூற
றங்கசமுகிப்பேர்கொண்டாடவத்தருவாசனைச்சேர்ந்
தங்கண்வில்வலன்வாதாவியெனுமகாரரையீன்றாள். (உ௩)

அவ்விருமகாருமபன்னூளருந்தவமினிதினூற்றிச்
செவ்வியமறையோன்றாந்தசிறப்புறவரத்தாரூறாய
திவ்வியமுனிவர்கோலந்திகழவில்வலன்வாதாவி
கௌவைகொண்மறியாயுற்றோர்கவினுயிரருந்திநின்றார். ()

வேறு.

இன்னதன்மையர விருந்திகொலையயர் தமிழ்முனிவனுலிறந்தார்
பின்னதுநிற்கக்கொடுந்தொழிற்சூரன்பேரெழிற்சசியினைவவ்வித்
தன்மனையாக்கிக்கொள்ளவுமகவான்றனைச்சிறைசெய்யவுந்துணிந்து
மன்னியசேனைத்தலைவரிலொருவன்றனைநோக்கிக்கழறலுறல். ()

இந்திரன்றன்னைப்பிடித்திவண்கொணர்தற் கேகெனவுரைந்து
பின்கோடி, சுந்தரத்தகுவர்மாதரைக்கூவிச் சுருங்கிடைச் சசியினைப்
பற்றி, வந்திவண்விடுதிரென்றனனவர்கள் வானநாடெங்கணுநிறை
ந்தா, ரந்தரர்க்கிறைவனறிந்துதன்மனையோ டரும்புவியடைந்த
னனொளித்தான். (உ௬)

சென்றவர்விண்ணில் தேடினர்திசைகத்துத் திரிந்தனர்தெரிந்தில
ராகி, வென்றிகொள்சூர்[illegible]திலை சொல்லவிண் ணிறைசசியொடு
மிருக்கு, நன்றிகொளிடத்தை யறிகெனவிடுக்க நண்ணினன்சயந்த
னென்பவனே, நின்றதுகண்டேயொற்றன்வந்துரைக்க நெடுவொளுகி
வீற்றிருந்தான். (உஎ)

இந்திரனெழிற்சீர்க்கழுமலமடைந்தேயினையினர்தனைவனமிய
ற்றி, யந்தமிலன்பினரனடியருச்சித்தாங்கவன்பனையொடுமிருக்கச்,
சிந்தையிற்கொடுமையுற்றகுரோரற்றன்றேடுவதறிந்துளம்வருந்திச,சு
ந்தரச்சசியினொடுங்கழைவடிவாச்சோதிலையத்தொழுதவணிருந்தான்.
கழைவடிவாகிக்காழியின்வாழுங்கண்ணுதலிறையடிகருதி
மழைமுகிலூர்தியிருக்குமவ்வேலைவானவர்தகுவர்களியற்று
மிழிதுயர்பொறுக்கமுடிகிலராகியிந்திரன்றனதிடமடைந்தே [றார்.
யுழையணிகரத்தனிடந்தனிற்போய்நம்முறுதுயருரைக்குதுமென்

வேறு.

அவ்வணஞ்செய்துமென்றேயமரர்தங் குழுவினோடுஞ்
செவ்விகொள்சசியைநோக்கிச்சிவனிடத்தடைந்துமீள்வேர்
மெவ்வமிலையன்காப்பனென்றவனுழைவிடுத்துத்
திவ்வியவமரரோடுந்தேவர்கோன்கைலைசேர்ந்தான். (௬0)

மதிமுகத்தவள்சூர்த்தங்கைமங்கைமார்சூழக்காழி
செறிமலர்க்காவிலையன்சேனைநாயகன்றன்காப்பி
னுறசசிதனைக்கண்டோடியொய்யெனப்பிடிப்பக்காளன்
றறியெனவுடல்கம்பித்துத்தனையழைத்திடுதல்கேட்டான். (௬௧)

அரியும்வாட்படையோடெய்தியடைக்கலம்விடுதியென்னக்
கரிமுகற்கிளையாள்சீறிக்கடிந்தடற்சூலமேவ
வொருதிறலையன்செந்தீயுறழ்சினத்தவள்கைப்பற்றிச்
சுரிகையாற்றணித்துவெய்யசூரனூரேகவுய்த்தான். (௬௨)

நாரதனிசைக்கக்கேட்டுநாகர்கோனடைந்துசாத்தன்
சீரியகழல்வணங்கிச்செறிசெயலனைத்துங்கேட்டுப்
பூரணைகேள்வனுய்ப்பப்புரிகுழற்சசியினோடும்
பேரணிமேருவென்னும்பிறங்கலையடைந்தான்மன்னோ. (௬௩)

தானவர்தலைவன்றங்கைதடங்கரந்துணிக்கப்பட்டுப்
போனவள்சூரனோடும்போந்தவாறுரைப்பக்கேட்டு
வானவர்க்கிறைவனேவவழிபடுமவனோவன்ற
வீனமில்கரந்துணிப்பானென்றவன்சினந்தகாலை. (௬௪)

சோதியர்தவனைச்சீறித்தொட்டிலிற்பிணித்தோன்வந்து
தாதையைவணங்கியிந்தத்தாழ்வுசெய்தவனையின்னே
காதிவிண்ணவனைக்கொண்டுகடிதிவண்டருவனென்றே
யோதினனவுணர்கோமானுளமகிழ்ந்தனுப்பச்சென்றான் (௬௫)

திண்டிறலவுணச்சேனைசெறிதரச்சென்றுவிண்ணோ
டண்டினன்மகவான்மைந்தனந்தடற்றுணையோடு
மண்டிவந்தெதிர்க்கத்தீயன்வதைத்தலுஞ்சுரர்கடுன்பங்
கொண்டவரிருந்தாரன்றோர்கோமகனெதிர்த்தான்மாதோ (௬௬)

தந்தியினூர்ந்துபோகிதனன்வெங்கணைகள்கோடி
யுந்தினனெல்லைக்காய்ந்தோனுலப்பில்வெஞ்சரத்தாற்சாடச்
சிந்தைநொந்தனன்சயந்தன்சிந்தூரஞ்சினந்துசூரன்
மைந்தனதூரத்திற்பாயமருப்புகளிற்றுவீழ்ந்த. (௬௭)

மந்தமாவின்னல்கொள்ளவானநாடதனைத்தீயில்
வெந்திடக்கண்டுபின்னர்விண்ணிறைமதலையோடு

மந்தரர்தம்மையெல்லாமருஞ்சிறைபுகச்செய்தீண்டித்
தந்தையோடொப்பச்சூரன்றானுளமகிழ்ந்தானன்றே. (௩௮)

வீழ்ந்தவெண்களிறுவெண்காட்டீசனைவிருப்புற்றேத்திப்
போழ்ந்தவெண்கோடுநான்கும்புராரியினருளாற்பெற்று
வாழ்ந்தவணிருக்கக்காரிவண்டிறலொற்றன்றன்னாற்
சூழ்ந்திடவவனைத்தாழ்ந்தசொன்மைபோலிருந்ததம்மா. (௩௯)

அந்தவெஞ்சிறையின்வானோருருந்துயர்கொண்டுழந்தா
ரிந்தவாறிந்திரன்றேர்ந்தெழிறவம்புரிந்ததாதி
கந்தன்வந்துநித்ததீருக்கழறினன்வியாழப்புத்தேள்
வெந்திறலவுணர்காலன்விடுசுடர்வேலோன்கேட்ப. (௪0)

அசுரகாண்டம் முற்றிற்று.

ஆகக் காண்டங்கள் உ - க்குத் திருவிருத்தம் - ககூக.

# மகேந்திரகாண்டம்.

மூலைமதியிதழிமுடிமுடியுடையமுதலைனருளியசெவ்வேள்
விளைமதுப்பிலிற்றுஞ்செங்கடம்பணிந்தவித்தகன்வித்தகவூர்திக்
கிளையவனடியார்க்செளியவனரனோடெழின்முனிக்குளமுறைமையங்
களைதருகுரவன்கழற்றுணைபற்றிப்பிறவிமாக்கருங்கடல்கடப்பாம். ()

கந்தனங்கதனைக்கேட்டடல்வீரவாகுவைசூரனைக்கண்டே,யந்த
ரர்சிறையைவிடுத்திவண்வாழ்தியல்லவென்றுரைத்திடேனை, வந்து
னைக்கொல்வன்முருகனென்றேதிருகெனவிடுத்தனனவனுஞ்,சுந்த
ரப்பதத்தைப்பணிந்துசெவ்வேட்கொன்றுரியாநல்விடைகொடுசொல்வான்.

சென்றிடுவீரமொய்ம்பனைமகவான்செழுமலர்ப்பதந்தொழுதைய
நன்றியில்சூரன்சிறையிடைவருந்துநசைகொளேன்மகன்றனக்கருள்
ாய், வன்றிறலவுணர்க்குலாக்குநின்மாற்றம்வள்ளலேயெனுமவன்
றனையும், துன்றியபடைகளனைத்தையுநிறுவித்தூயவன்கந்தவெற்ப
டைந்தான். (௧)

அம்மலைக்குவட்டின் விச்சுவரூபமடைந்திடவென்றனைப்பொ
ருது, செம்மைகொள்பிலத்திலாழ்ந்திடவறுஞ்செவ்விகொண்மகே
ந்திரங்கண்டே, யெம்மையாளுடையகுகனடிதொழுதேயெகுவான்
பண்டுருவெடுக்க, மும்மைபோர்குன்றநிமிர்தரக்கடலைக்கடந்துமுன்
வாயிலினடைந்தான். (௨)

அவ்வடவாயிறனிலதிவீரனுயிரவெள்ளமோடிருக்க, வெவ்வலி வீரசிங்கனைஞ்ஞூறுவெள்ளமோடிருந்தனன்வானில், செவ்விகொள் வீரன்வருவதைச்சிங்கன்றெரிந்துதன்படையொடுமிவனை, வவ்வியா ன்றின்பனெனவெதிர்த்ததிர்த்துவளைத்தனன்வீரனைவானில். (௫)

வீரனுமுடைவாளுருவிமாக்குழுவின் வீறரியெதிர்த்தலைதகர்ப் பப், பாரினிற்குதித்துச்சிங்கனோடெதிர்த்துப் படைகளையழித்து மீண்டிலங்கை, யூரினிற்குதிக்கவடலதிவீரனுற்றனனவனையும்வெ ன்று, சீரியவடகோபுரத்ததிகோரன் சேனையைக்கண்டிவைநினைப் பான். (௬)

போர்புரிந்திவரைக்கொல்லினுமொழிந்தோர்புணரியிலொளிப் பர்களதன்பின், சூரனேவருவனவன்குகனிலனேற்றொலைவுறுமெ னவுனிக்குணதிக்,கார்வழிபுகுதுமெல்லையின்மேதிக்கண்ணனுமடல் வீரபானு, வாரிதியென்னவிருப்பதைநோக்கிவாகுவுந்தென்றிசைபு குந்தான். (௭)

ஆயிரமுகமீராயிரக்கரத்தோடவுணன்வந்தெதிர்த்திவனுயிரை, வாயினால்வவ்வித்தின்பனென்றுரப்பவாளினைவீரவாகுருவிப்,பாய்ந் தவன்றலையுந்துதிக்கையுமறுத்துப் பாரினிற்றள்ளியொண்பதத்தா ன்,மாய்வுறவுதைத்தேயணுவுருவெடுத்துமகேந்திரபுரியினையடைந் தான். (௮)

பானுகோபனக்கினிமுகனிரணியன்பகர்தருவச்சிரவாகோ டானதிண்மூவாயிரரகம்பார்த்தேயமைச்சன்வாழ்மனையிடைமேவி னானதுநிற்கச்சிறைப்படுஞ்சயந்தன்கனவினினண்ணினன்குமரன் வானவன்மகனீயாரெனவடிவேல்வயங்கியகரத்தனும்வகுப்பான். ()

வேறு.

பரமனருளியசுதன்யானுங்களிடரகற்றுதற்கிப் பாரின்மேவி, வருமிடையிற்றாரகனைவதைத்தெழிற்செந்திப்பதியின் வந்துசேர் ந்து, விரவுபுகழ்வீரவாகென்னுமொருதூதனையாம்விடுத்தோநாளை செருவியற்றிச்சூரனுயிர் செகுத்துங்கள்சிறைமீட்போமென்றுசெ ன்றான். (௧௦)

துயினீங்கிச்சயந்தனுடனமரர்களுமகிழ்வெய்தித்துன்னுங்காலை, யயிலோன்றனிளவல்விரைந்தசுரர்களைமயக்குவித்தங் கவர்பாலெய் தச், சயிலநிகர்தோட்சயந்தன்கண்டுதொழுதெதுவரத்துசழறுகென் ன, வெயில்வேற்கையுடையபிரான்விடுதூதன் வெஞ்சூரற்குரைக்க வந்தேன். (௧௧)

### வேறு.

என்னக்கூறிச்சயர்தனைநீங்கியே யெண்பதாயிரயோசனைநீளங்கொ, ணன்னகர்க்குநடுவிலோராயிர நண்ணும்யோசனைமண்டபந்தன்னிலே, மன்னுசிங்காதனத்திலவுணர்கோன் வதிந்திருப்பதைக்கண்டடல்வீரனுந், துன்னுவேலவன்மலர்ப்பதமுன்னினான்றாயவாதனம்வந்தவணுற்றதே. (கஉ)

கந்தனெந்தையருளெனச்சென்றதிற் கவினும்வீரனுமேவியிருந்தனன், வெந்திறற்பெருஞ்சூரிதைக்கண்டிவன்வித்தைகற்றவனென்றுமுனிந்துநீ, யெந்தவூருனையென்றனன்வீரனுமிமையவர்கொளிடுக்கண்டவிர்க்கவே, செந்தின்மேவியகந்தன்விடுத்திடச்சேர்ந்ததூதுவனென்றுரைசெப்புவான். (கங)

அண்டர்தஞ்சிறைவிட்டிடவெண்ணுதி யண்டமெங்கும்பயின்றரசாளுதி, கண்டகத்தான்மறுத்திடின்மாளுவை கந்தனீதுகழறினனென்னலுங், கொண்டசீற்றங்கொதித்திடச்சூரனுங்குலவுபன்முளையாதசிறுவனோ, மண்டிநம்மையெதிர்ப்பவன்கூறெனுமருவுமுன்னுயீர்ந்தனன்போவென்றான். (கச)

சோதியாகிச்சுயஞ்சுடராகிய தூயவாறுமுகவனைப்பாலனென், றோதினையவன்கீர்த்திகள்கேளெனோவோதினானவன்மேன்மையனைத்தையுங், காதிச்சூரனிவனைப்பிடித்திவண்கட்டுவீரெனவாயிரந்தீயர்கடிலான்றனைச்சூழ்ந்துவளைத்திடச்சீறியன்னவர்மாய்வுறச் சாய்த்தனன். (கரு)

பின்னர்நூறுமுகமுடைச்சூரனும்பெருகுதானையுடன்வந்தெதிர்த்திடச், சின்னபின்னப்படவமராற்றினான்சென்னியாயிரங்கொண்டவுணர்க, டுன்னிவந்துவளைத்திடவாங்கவர் சுடர்முடித்தலைபோக்கினன்றஞ்சினார், மன்னுமாளிமுகத்தரெதிர்த்திடவாகைமொய்ம்பனுதைக்கமடிந்தனர். (கசு)

இன்னவாறுதகுவரைச்சாடிப்பி னெண்ணின்மண்டபமாளிகைகோபுர, மன்னுதாளாலுதைத்துத்தகர்த்தனன்மருவுசோலைத்தருக்களொடித்தனன், றுன்னுமேரிகுளங்களழித்தனன் சூரனூர்தனைப்பாழ்படவாற்றிப்பி, னன்னதீயனகரையழற்குணவாக்கினனறுமாமுகன்றூதனே. (கஎ)

இப்பரிசவனுக்கியவீரனோ டேற்றவச்சிரவாகுயிரொண்சிர, மொப்பப்போக்கிவென்றண்டினைவாங்கியே யொளிர்சிகரியிலேறியென்கந்தவே, டுப்புநேருஞ்சடிலர்க்கொருமொழிசொன்னவன்வடி

வாம்பிகைதந்தவன், மைப்புயல்வடிவான்றன்மகனைமுன்வன்சிறைக்கண்வருந்தவகுத்தவன். (௧௮)

ஆயவேலற்கிளவலுமாகுவனுதிநாயகற்கன்பனுமாகுவ
னேயசேனைக்கிறைவனுமாகுவனிறையியீந்தசெங்குந்தனுமாகுவன்
நீயராகியதானவரேயிதைத்தெளிவீரொடுணர்வீரெனச்செப்பியே
சேயமர்ந்தசெந்திப்பதிசேர்ந்தவன்சேவடிபணிந்தாடினன்பாடினன்.

கந்தவேளடிதாழ்ந்தெழுவீரனுங்கடியசூரனகரினிற்சென்றது, மூந்துகாவலசுரரைமாய்த்தது முரண்கொள்சூரனைத்தண்ணுமும்விள்ளலு, மிந்திரன்றனெடுஞ்சயந்தன்செயலியம்பியாங்கணிருந்தனன்வீரனும், வந்தவொற்றன்மடித்தனன் வச்சிரவாகுவையென்றறிந்தனன்சூரனே. (௨௦)

விதியைநோக்கிவிழுந்தவசுரரைவிதிக்கவென்னவிதித்தவனேகினான், பதியினுள்ளோர்பயந்துகலங்கியே பாவிசூரன்முன்பற்பலர்தூதனா, லதிர்ந்ததிந்நகர்நாளையென்செய்வரோவமரர்தங்கள்சிறையகற்றென்னலுங், கொதித்துச்சீறியசூரனைநோக்கியேகோதில்சிங்கமுகன்மதிசெப்புவான். (௨௧)

நல்லமைச்சருமிங்கிலையிங்குளார்நன்குணர்ந்திலர்துன்மதியோதுவா, ரல்லலோடமரர்ச்சிறையிட்டனராழ்ந்தயூகமறிகிலர்யாவரு, மல்லன்மச்சஞ்சுமக்கவுமண்டரைவைத்தனர் மரபோர்ந்திலர்நல்வளம், புல்லநாமுன்வரம்பெறுங்காலையிற்போந்தவாதிசொல்வாக்கைமறந்தனை. (௨௨)

நூற்றொருடெட்டுகமாண்டுநெடும்வேலினா னுங்குவீரென்றுரைத்தனராங்கவை, சாற்றுங்காலங்கழிந்தனவாகலிற்குரகன்றனைக்கொன்றதும்வேலினாற், போற்றும்வேதியர்பூவையர்விண்ணவர்பொருந்துதேசிகர்மாமுனிவோர்சிறா, ரூற்றமோடிவரைத்துயர்செய்குவாருறுவர்பாழ்நரகென்றிவையோதினான். (௨௩)

அண்டரைச்சிறைவிட்டிடலின்றெனினடல்கொள்வேற்கரன்வெல்லுவனங்கவன், மண்டுவேலினிறந்திடுவோமிதுவாய்மையென்னவழுத்தியதம்பியைக், கொண்டசீற்றங்கொதித்திடப்பாலகன்கொல்லுவானெனவஞ்சினைமுக்கணன், பண்டைநாட்சத்திவென்றிடுமென்றதும்படர்நங்காலவிறுதிபகர்ந்ததும். (௨௪)

கேட்டதில்லையிப்போதுநீபொய்யுரைகிளக்கவல்லவனாகினையென்றுபின், னொட்டமூன்றுடையான்சத்திவேறதோநம்மைப்பாலகனேகொல்வனென்றனன், கோட்டுசிங்கவதனன்முன்னோன்முகங்குறித்

தவ்வாறுமுகவனைச்சேயென, நாட்டினாயவன்மேன்மையைக்கேளொ
னாநவிலக்கேட்டனனன்கில்வெஞ்சூரனே. (உரு)

செய்யவைந்துமுகங்களினாலுநீர்சிதைவுறீரெனச்செப்பியவாய்மையாற், றுய்யவாறுமுகமுமுந்நான்குளதோளுமாறிரண்டாகியொளிவிடு, கையுமாகவிளங்குமொர்காளையைக்கருணைசெய்தரனுய்ப்பவக்கொள்கையோ, டையன்வந்தனனம்மையழிக்கவேயஃதறிந்திலைபாலகவென்றனை. (உசு)

என்னச்சீயவதனன்சொனன்மொழியிருசெவிக்கணுறுதவெஞ்சூர்சம,ரின்னலுற்றிடவெந்தையொடாற்றியேயீடழிவதற்கெண்ணினனிற்கமுன், மன்னுவீரரொடுஞ்சுரர்சூழ்தரவடியயிற்கரனுணசெவ்வேள்குகன், றன்னுநல்வளச்செந்திலின்மேவியசோதிமைந்தனியல்பினிச்சொல்லுவாம். (உஎ)

மகேந்திரகாண்டம் முற்றிற்று.

ஆரக்காண்டங்கள் ரு - க்குத் திருவிருத்தம் - [illegible].

---

# யுத்தகாண்டம்.

அமராவதியுந்தருநிழலுமமரர்க்காக்கியவுணர்பிரா
னிமிராவிருந்தமகேந்திரத்தையிறைநீர்க்காக்கியவையவர்க
டமரர்விருக்கமடப்பிடியைத்தனக்கேயாக்குஞ்சண்முகனை
யெமராய்த்தந்தையெனக்காக்கியென்றுபேதத்திட்டணந்திடுவோம்.

வேறு.

மணிமுடியமரர்சிறைக்களங்கடந்துவானநாட்டணிநகரெய்தத்
திணிவடிவவுணர்மகேந்திரந்துறந்துசெங்கனல்விழிக்கடைசொரிய
நணிவருமறலிநகர்குடிபுகுதநாமவேறடக்கரமெடுத்தே
யணிகிளர்தணிகைவெற்புறையொப்பிலப்பனையனுதினந்துதிப்பாம்.

வேறு.

வந்துவாகுவுரைத்தவைகேட்டுநல் வளங்கொள்செந்தியின்மேவியகந்தவேண், முந்துவானவர்பூதருஞ்சேனையுமொய்ம்பின்வீரரும்வெள்ளமுஞ்சூழ்தரச், சுந்தரத்திருத்தேரினிலேறியேதூயசாகரந்தாண்டிவெஞ்சூரனூ, ருந்துமொண்கடவாயிலடைந்தொளிரொப்பிலேமகூடத்திலிருந்தனன். (க)

வந்தவாறவுணர்க்கிறைதன்னொடும்வணங்கிவாவுதலைலாற்றர்கள
சொற்றிட, முந்துதானைத்தலைவர்கடம்மொடுமொய்ம்புசூரனியம்பு
வன்முக்கணன், மைந்தனனைம்மொடும்போர்செயவாகைவீரரும்
வெள்ளவெம்பூதருந், தந்திரச்சுரர்யாவருஞ்சூழ்தரச்சார்ந்துளானெ
ன்றிரவிலுசாவினன். (௪)

இன்னவாறங்கிருந்திடுமெல்லையிலிரவிவந்துதித்திட்டனன்வே
லையிற், றன்னுபானுப்பகைவனின்றஞ்சலிர்தூயவேலனைப்பூதனா
வீரனைச், சின்னபின்னம்படவமராற்றிடச்சென்றுமீள்குவனென்று
தன்றாதையின், பொன்னடித்துணைபோற்றலுந்தீயசூர் புகலுகல்வி
டைகொண்டனன்போகின்றான். (௫)

சென்றுவண்படைதுன்றியமாளிகைசேர்ந்துபூசைதிகழுறச்செ
ய்துபின், வென்றியாயிரமாக்களைப்பூட்டியேவீறுதேரினிலேறினன்
வீரருந், துன்றுமானையுஞ்சேனையின்வெள்ளமுந்தூயசாகரமென்ன
வரும்பொழு, தின்றியாதுகதிவருமோவெனவிரவியஞ்சவிரைந்து
செலுத்தினான். (௬)

வேறு.

இந்தவாறுவருதல்கண்டேகினாரதன்சொல
வெந்தையானகந்தவேளிலங்குவீரவாகுவோ
டுந்துதீயவவுணனார்முனுற்றதையுணர்ந்துதன்
மைந்தனைப்பதாதியோடுமெண்டமர்க்குவிட்டனன். (௭)

இன்றுதானைதுன்றவேகிவென்றியொன்றியெய்துகென்
றொன்றுமானனங்களாறுகொண்டவண்ணலோதலும்
வென்றிகொண்டவீரவாகுவேலனைப்பணிந்துபோய்த்
துன்றுநல்லிலக்கர்சூழத்துய்யவையமேறினான். (௮)

வெந்திறற்கொள்பத்துநூறுவெள்ளமானபூதருஞ்
சுந்தரங்கலந்திலங்குதூயவீரரெண்மரு
முந்திலக்கவீரரோடுமுடிவிலேமகூடம்விட்
டெந்தையானகந்தவேளையென்றுமுன்னுசிந்தையான். (௯)

திண்மைகொண்டவீரவாகுசேனைசூழச்சூரனார்
வண்மைகொண்டமாமதிற்புறத்துவந்திறுத்தலு
மெண்மைகொண்டபானுகோபனேற்றசேனையோடுநே
ரண்மைகொண்டபூதரெண்ணிலம்புமாரியேவினார். (௧௰)

திரைகடற்குநேரெனத்திரண்டிரண்டுசேனையும்
விரவியோதைகாட்டிநின்றுவெய்யபோர்புரிந்திடப்

பரவிநின்றபூதரும்படரடற்றகுவரு
மருவுசாரிவாரியாகமட்டிலார்கள்பட்டனர். (௧௧)

வெந்திறற்கொள்பூதர்சீறிவெய்யவன்றன்சேனையிற்
சிந்துரத்தினோடுசிந்துரத்தையுய்த்துரஞ்சிதைத்
தந்தமானவையய்வாரிவையமீதடர்த்துமற்
றிந்தவாறியற்றனோக்கியெண்ணிலார்களோடினார். (௧௨)

அந்தவேலையவுணர்தம்மிலனலியென்னுமன்னவன்
வெந்திறற்கொள்பூதர்மீதுவெங்கணைகளேவலு
முந்திநின்றபூதர்தம்மின்மொய்ம்புகொண்டசிங்கனும்
வந்தெதிர்த்தவனலியோடுமண்டியின்னசெய்குவான். (௧௩)

மற்றவன்றன்வையமோடுமருவிநின்றபுரவியைச்
செற்றமோடுதண்டினாற்சிதைத்தல்கண்டுதீயவன்
வெற்றிகொண்டகணைகடேவவெய்யவன்றன்வையமுற்
றெற்றலன்கைவில்லைநூறவொப்பில்சிங்கன்சீறினான். (௧௪)

வீறுகொண்டவனலிசிங்கன்மீதுதண்டின்மோதலு
மாறுகொண்டுசிங்கன்வெய்யன்மார்பகத்திடித்தனன்
பாறுகொண்டபோர்க்களத்திற்பட்டிறப்பச்சண்டன்கண்
டேறுகொண்டசிங்கன்மீதெதிர்ந்துபோரியற்றினான். (௧௫)

சீறிச்சிங்கன்சண்டனின்றதேரைவாரிப்பாரின்மேன்
மாறிச்சாடச்சண்டனொந்துமண்ணின்மீதிறந்திடத்
தூறுகொண்டவவுணரூடுதுய்யவெய்யமாயனிவ்
வாறுகண்டுவந்தெதிர்க்கவந்துநீலன்மண்டினன். (௧௬)

மண்டிநின்றநீலன்மீதுமாயன்சூலமேவலுங்
கண்டுநீலன்றண்டினாற்கடிந்ததைத்தடிந்துபின்
னண்டலன்றனிரதம்வாரியாழிசேரவாக்கினான்
மண்டலத்துவீழ்ந்துநொந்துவாடிமாழ்கிச்சாம்பினான். (௧௭)

அன்னகாலையவுணன்மைந்தனனிகமோடுநணுகியே
மன்னவீறுபூதர்மீதவன்சரங்களேவலுந்
துன்னுசண்டன்கண்டுடன்றுசோர்வில்வெய்யன்றனையச்
சின்னபின்னமாக்கலுந்தெரிந்தனன்சூர்மைந்தனே. (௧௮)

இரவியைத்தளைந்தளானெதிர்ந்துகோல்சொரிந்தனன்
பரவிநின்றபூதர்கள்பரந்திரிந்துடைந்திடத்
திரமொடுக்கவீரதீரன்றீயனூர்ந்ததேரிலார்
புரவிதுஞ்சிவானமீதுபோகுமாறுபோக்கினன். (௧௯)

விண்டலத்தினிரதமோடுவெய்யசூர்மகன்செலா
மண்டலத்துவீழ்ந்தெழுந்துமாறிலுக்ரவீரனைக்
கண்டுமெண்டிவன்றிறற்கொள்கையினாற்பிடித்தவான்
கொண்டிடும்படிக்கெறிந்துகோதில்வையமேறினான். (௨௦)

மாசிலுக்ரவீரனைமுவானுலோகங்கண்டுபின்
றாசில்பூமிதன்னின்மேலசுழன்றுவீழ்ந்திருந்திட
வாசில்பானுகோபனேனுமண்டிமண்டிவண்டிறற்
பூசல்பூதர்போரினைப்புரிந்துடைந்துபோயினார். (௨௧)

கண்டிலக்கர்வந்தெதிர்ந்துகாதியம்புமாரிபெய்
தண்டலன்றனிரதமுற்றழிக்கவேறுதேரின்மேற்
கொண்டுகோற்சொரிந்திலக்கர்கொண்டவிற்களையும்
விண்டிடத்துணித்தல்கண்டுவெருவியோடிவாடினார். (௨௨)

இன்னவாறுகண்டுவீரகோளரியெதிர்க்கமேற்
றன்னலன்விடுத்தகோலெருலைத்தவன்சரீரமுற்
றின்னல்சாளரத்துவாரமிட்டபோதில்வையமீ
துன்னினின்றவெய்யன்வாளியோய்விலாமலேவினன். (௨௩)

வீரகோளரிக்கெழுந்தவெஞ்சினத்தின்வெய்யன்மேன்
மாரியன்னவாளிதூவமற்றவன்சினந்துவெங்
கோரமோடுகணைகளேவக்கோளரிவருத்தினன்
வீரராந்தகன்றெரிந்தெதிர்ந்துபோர்விளைத்தனன். (௨௪)

பானுகோபனுட்சினந்துபத்துநூறுகோல்களைச்
சோனைமாரிபோல்விடுத்துயர்ந்தவீரராந்தகன்
றானவன்சமர்க்கணைதளர்ந்துநோதல்கண்டடற்
றானலங்கொள்வீரமாமகேந்திரன்றொடர்ந்தனன். (௨௫)

மண்டிநின்றவண்டலன்றன்வையனையவாளிக
டிண்டிறல்கொடேவநோக்குதீயனானசூர்மக
னண்டிவேறுதேரிலேறியாசுகங்கள்வீசிடக்
கண்டுவீரமாமகேந்திரன்கலங்கியோடினான். (௨௬)

துன்றுமைந்துவீரர்வந்துதுட்டபானுகோபனோ
டொன்றிநீடுபோர்புரிந்தடைந்துடைந்திரிந்தபின்
வென்றிவீரவாகுகண்டுவெய்யனோடெதிர்க்கலுங்
கன்றுதீயன்வீரன்மீதுகணைகளெண்ணிலேவினான். (௨௭)

பின்னும்வெய்யன்றய்யன்மீதுபெருகுமேக்களேவினான்
மின்னுவீரன்கோல்களேவிவெய்யன்வையநொய்யதா

வின்னலுற்றிடச்சிதைக்கவேறுதேரிலேறியே
மன்னிநின்றருஞ்சரங்கண்மட்டிலாதுவிட்டனன். (௪௮)

அடும்படிக்கடர்ந்துபண்டனீகவாரியைப்பினை
தொடர்ந்தடற்கொள்வீரனுசங்கடொட்டெறிந்திடக்
கடுந்தொழிற்கொடியனெண்ணில்கணைகளைவீரனுந்
தொடுஞ்சரங்கண்மட்டிலாததொட்டவற்றைமாய்த்தனன். (௪௯)

முந்துசூரன்மைந்தனோடுமொய்ப்பின்வீரவாகுவு
முந்துபல்வகைச்சரங்களுய்த்தியாவுமற்றிடச்
சிந்தைநொந்துகந்தவேளைச்சிந்தைசெய்தெழுந்தபின்
றந்தைதந்தசந்தவாளைத்தானெடுத்துவீசினான். (௫௦)

வாளைவீசிவெட்டவெய்யன்மன்னுசென்னிமண்ணின்மே
லூளையோடுவீழ்ந்துசோரியோதமென்னவோட்டினான்
வேளைவென்றகண்ணன்மைந்தன்வெற்றிகொண்டுசுற்றியே
காளைமார்கடானைசூழக்கந்தன்முன்புவந்தனன். (௫௧)

வந்துநின்றவென்றிமொய்ம்பன்மார்டறத்தழீஇக்கொடே
யந்தமின்மகிழ்ச்சியோடுமறுமுகத்தனுற்றனன்
மைந்தன்பட்டிறந்தசெய்திவந்தவொற்றுரைத்திட
முந்துசூரனிடர்கொளாழிமூழ்கிமாழ்கிச்சாம்பினான். (௫௨)

அன்னசூரனவரைநோக்கியண்டலாரைவென்றியான்
வென்னிடாதுவேள்விசெய்துவீயுமென்றன்மைந்தனை
மின்னுமாவியோடெழுப்பிவீறுறச்செய்வேனுட
றன்னைப்பாதுகாப்பிரென்றுசாற்றியன்னசெய்குவான். (௫௩)

ஓங்குதூதர்தம்மைநோக்கியோதுமாயரஞ்சிரங்
தாங்குகின்றவிளவலைத்தருதிரென்னவன்னர்போய்த்
தீங்குசேர்ந்தசிங்கவானனத்தனோடுசெப்பலு
மாங்கவன்றன்சேனையோடுமண்ணன்முன்னர்நண்ணினன். (௫௪)

என்னையிங்கழைத்ததென்னவென்னவண்ணலிளவலோ
டுன்னிமுன்னடந்தவாறுரைத்தறுமுகங்கொளோ
ரொன்னலன்பகைத்தெதிர்க்கவுற்றனானவனைநீ
துன்னவென்றிகொண்டுசேர்தியென்றுசூரன்சொற்றனன். (௫௫)

முந்துசூரனடிபணிந்துமுடுகுசிங்கமுகவனு
மந்தமாமனைக்கணேகியன்னமுண்டொராயிரங்
கந்துகங்களூற்றதேர்கடாவிநாற்புறத்தினு
முந்திலக்கந்தானைசூழவுவகையோடுமுற்றனன். (௫௬)

## வேறு.

சுரர்கண்டுதுயர்சொண்டுமுருகன்றனடிநன்றுதொழுதெந்தையே
யரியென்றமுகன்வென்றியனிகங்களொடுநெய்பொடமராடவே
வருகின்றதுணரென்னவயிலெந்தைசினநண்ணிவளிவெஞ்சமர் [ன்.
புரிகின்றமெனயுன்னுபொழுதின்கணடன்மொய்பணிதுகண்டன

மகமேநநிகராகவளர்தோள்கொள்வடிவேலனடிவாழ்த்தியின்
றகமேவிவருதீயன்முடிசாடியதவேந்னருணல்கெனக்
குகனீயும்விடையோடுசகரேர்ந்துகுலவீரர்புடைநீடவாண்
டகைவீரனெனில்சேனையொடுசிங்கமுகன்மீதுதகவேற்றனன். ()

கடலோடுகடன்மோதிவருமோதையெனவீறுகனசிங்கமா
மடலேறுமுகனீடுபடையோடுமணிவீரனதிபூதரார்
படையேயவியமராடியசுரேசர்புயவீரர்படவாடலுங்
கடிதானவவருடுவெளமேவுகனதண்டனிதுகண்டனன். (௩௯)

எதிர்மண்டுகதைகொண்டுபொரநொந்துமிகுபூதரினைவெய்தலுந்
ததிகண்டுதடிகொண்டுவருசிங்கனவர்தங்கடலைசிந்திடக்
கதியொன்றுயடிசாடவலிசிந்துகனதண்டனமர்விண்டன [னன்.
னிதுகண்டுதசமொன்றுமுகன்வென்றியொடுதுன்றியிகல்கொண்ட

திடமெய்துபடையேவவெதிர்சிங்கன்கதைகொண்டுசெறிகோல்களை
யொடிசெய்துதசமொன்றுமுகன்மார்புபொரமன்றவுயிர்சிந்தினன்
புடைநின்றதகுவன்றன்படைவீரரிகல்கொண்டுபொரமண்டலு
மடறுன்றுமொருலக்கரவர்தம்மிலுயர்சுத்தனதுகண்டனன். (௪௧)

இகல்கொண்டுகணைசிந்துமவர்தங்கடலைசிந்துமெழின்மொய்பினு
னுகமாரிநிகரானகணைமாரிவிடவாவியுகுதானவர்
மிகவாடவடலேறுமுகனீடுவடிவேலைவிழைபூதர்மேற்
றிகழ்கோடிகணையேவவதுகண்டுசெறிபூதர்திறலோய்ந்தனர். (௪௨)

அதுகண்டவடல்வீரனறிவென்றபடையேவியரிமாமுக
னிதமாயைகெடனுறவிதுகண்டவவுணேசனேவாயிரங்
கதியோடுவிடவீரனெழில்வாளியொருகோடிகடிதேவவுட்
குதலின்றிவரநொந்துசமர்விண்டியலுமேனிகொண்டோடினன். ()

அதுபோதிலரியோடுமெரியாகுமுகனேடியமர்மண்டலுந்
ததியூடுமொருகோடியனைமாறுகொடுவீசவவைதானென்
கதுமெச்சினெதிர்காற்றிலிலவாகும்வகைசெய்துகடிதோட்டியோர்
பதினூறுகணையேவவெதிர்பூதரடலீறுபடவோடினர். (௪௪)

வேறு.

அதுதெரிந்தடல்கொளிலக்கர்களெதிர்ந்தேயமர்புரிந்திடவரிமு
கத்தன், கதமொடுஞ்சிலையைக்குனித்துநாணேற்றிக்கணைகளையிலக்
கர்மேல்விடலும், புதியவெம்படைகள்பொருக்கென வெடுத்துப்
பொழிந்தவன்றேர்சிலையறுத்தார், கதுமெனப்புவியிற்குதித்தவனவ
ரக்கணமீதெறியவீழ்ந்துடைந்தார். (சரு)

வேறு.

வீறுகொண்டநவவீரர்தம்மிலெழில்வீரகேசரியவுணன்மேன்
மாறுகொண்டுகணைமாரியாகவிடமாண்டவண்டலனும்வாளிக
ளூறுகொண்டுவிடவாசுகங்கள்பலநொடியில்வீரகேசரியுட்விட்
டேறுகொண்டவவனிரதநூறிவிடவிடியெனப்படியினீடினுன். ()

நீடுமாவுணனீறிலாதவிறனீண்டவீரகேசரியைவிண்
ணுடுமாறுவிடவாண்டுமன்னமரர்நாடதோடுபலநாடுகண்
கூடதாகநனிகண்டுவாரிபுடைகுலவுபூமியில்விழுந்ததைத்
தோடுலாவுமலர்மாலையாடுபுயவீரர்கண்டுதுயர்கொண்டனர். (சஎ)

நாடியோடியவன்வீடுமாறுகொடுநாவிரண்டடல்கொள்விரர்க
ணீடுகோல்கள்கொடுசாடவேயவனுநெடியபாரிடைவிழுந்தபின்
வாடியோடுமுயிர்போகவாகைகொண்மடங்கன்மாமுகனும்வெஞ்சம
ராடவேயுனிவிராவுவீரர்களையண்டிமண்டமர்புரிந்தனன். (சஅ)

கொடிகளாடுமுயர்சகடமேறிவருகொடுமடங்கலெனும்வதனன்பேல்
வடவைநீடுவிழிதடியினுடுமிதழ்வடிகொள்பாரிடர்கணெடியிலே
படியிலேர்கொளருவனைகள்கோடிகொடுபடவடங்கலும்விடுத்திடக்
கொடியனுடியதைநிலவுசாரதர்கள்குலையுமாறுசெயவாடினர். (சகூ)

கரடமோடுமிபவவையினூடறுகுகதழ்வினுற்றதெனவானமூ
டுருவிநீடிரதமின்றியொன்றுபுகழுற்றபாரிடர்கணங்களைப்
பெருகுமாங்கனிபிழிந்திடற்குநிகர்பெட்பினுற்கொடுபிழிந்துபின்முன்
னுரியகோதுகளைவீசல்போலவர்களுடல்கண்மண்ணில்விழவீசினு

சுற்றியுஞ்சிலரைவிண்புகும்படிசுழற்றியுஞ்சிலரைவன்கரம்
பற்றியுஞ்சிலரையெயிறுகப்பதைபதைக்கவுஞ்சிலரையிவ்வணம்
வெற்றிகொண்டுசிலபூதரைக்குறுகிவீறுமேவுமவராண்டைய
கற்றிநின்றவர்பதங்களைக்கடிதுகைப்பிடித்துதறிவீசினுன். (ருக)

விண்ணினூடுசிலர்மண்ணினூடுசிலர்வேதனேடுபுருகூதனூர்
நண்ணுமாறுசிலர்கண்ணனூடுசிலர்நாடுமாறுபுயன்மண்டல

மண்ணுமாறுசிலரம்புராசியிடையணுகுமாறுசிலராகவே [னர்.
திண்ணமோடவுணன்வீசவெள்ளமுறுதிறல்கொள்பூதர்கள்சிதைந்த

வேறு.

வண்டிறல்கொள்பூதனாவதைத்தகளமீதே
யண்டுமிரதத்திலரியானனனிருப்ப
மண்டடல்கொள்பூதர்களில்வலிகொளொருமேலோ
னண்டலனொடண்டியமர்கொண்டிடவணைந்தான். (௫௩)

கண்டவுணன்வெங்கணைகணக்கறவிடுக்க
மண்டியெதிர்பூதனவைமாய்வுறவியற்றித்
திண்டிறல்கொடேர்கடவித்தீயவன்சிரத்து
மண்டுகதைகொண்டடல்கொண்மார்பினுமிடித்தான். (௫௪)

சீயமுகனுங்கதுதெரிந்துதிறலோனை
யேயசிறுபந்தெனவெறிந்துவிடவிண்போய்
மாயமொடுமீட்டுமவன்வையமிசைநின்று
ளாயிரம்யோசனையகன்றவுடன்மீதே. (௫௫)

சிரத்திருகரத்தொளிதிரண்டகுவவுத்தோ
ளுரத்திருபுறத்துயருடம்பினிடமெங்கும்
வருத்துறவுதைத்திடலுமாமசகமீதென்
றுருத்தவனசட்டையுடனொய்யெனவெறிந்தான். (௫௬)

வீசிடவிழுந்தயர்வுமேவவது கண்டு
தேசுலவுபூதர்சிலர்தெவ்வனொடெதிர்ந்தே
பேசரியவாளிகளைவீசியமர்பேண
நீசனமராடவவர்நீங்கினருடைந்தார். (௫௭)

வேறு.

இன்னதறிந்தடலிலக்கரெதிர்ந்து மண்டியேதிலன்மேற் பலகணைகளேவவன்றோன், கொன்றுனைவெம்படைகள்பலகொண்டுவீசக்சோதிலாவிறலிலக்கர்கொதித்துச்சீறி, மன்னுமழைமாரியெனச்சரங்கடூவிமையொடுடாகனையுமழிக்கக்கண்டு, தன்னிரதச்சூதனைவேறிருக்கக்காட்டிக்சுரர்நடுங்கப்புடவியிடைக்குதித்தானன்றே. ()

குதித்தவனையெதிர்த்திலக்கர்கதைகள்கொண்டுகொடுமுடியினடற்சேரளிர்குலவுமார்பிற், கதித்தமுதுகதன்மீதுங்கரங்கண்மீதுங்கரியவுடலதன்மீதுங் கால்கண்மீதும், விதித்தபிடரியின்மீதும் விண்ணோர்சாலவியப்புறவாங்காங்குமிடித்தடித்துமோதக், கொதித்தவுணன்வீரர்களைக்கடல்களாதி குலவுபலவிடத்தெறியக் குலைவுற்றாரால். (௫௯)

வாடியதையெண்மர்களுங்கண்டுசென்றுமடங்கலானனன்மீது
கணைகளேவ, நாடியவன்றேர்புகுதவீரரோடிநண்ணவொட்டாதிழுத்
தவனிமீதிற்றள்ளி, நீடியவெம்புயங்களின்மார்பதனில்வாயினெடு
மூக்கிலொளிவீசுங்குந்தமாதி, யோடுறுதிண்படைகளினாலிடித்து
மோதியூறுசெயாவிரதமிசைநின்றார்வீரர். (௬௦)

அடலவுணனுட்சினந்துவீரர்தம்மையணிமணித்தேர்களினோ
டும்வாரிவாரிப், புடவியிடத்திடித்தடிக்கவுடைந்தார்தேர்மேற்புகு
ந்துவிறலரிமுகவனின்றபோது, திடமுடையபூதர்களுமிலக்கர்தாமு
ஞ்சிறந்தகுணத்தம்பியருமுடைந்தசெய்கை, வடிவுடையவடிவேலற்
கிளையவீரவாகுவுணர்ந்துடனவனோடெதிர்ந்தானன்றே. (௬௧)

சிலைகுனித்துப்புங்கவங்கள்பலகொண்டேவித்திறலவுணன்சே
னைகளைச்சிதைத்துவீரன், கொலைபுரியவரிமுகவன்செய்கணாறுங்
கொதித்தடல்கொள்படைகள்பலவிடுக்கத்தூயோ, னுலைவிலடுவாளி
களைச்சூறையென்னவுந்தியவருடற்றுணிக்கவுயிர்கள்சிந்தித், தொலை
யமிகுபுகழுடையசூரன்றம்பி நாயகந்தன்றம்பியுடனெதிர்ந்துசொல்
வான். (௬௨)

கொண்டலெனுங்கண்டனருள்கந்தனல்லைகோதிலாவெண்மரி
லோவிலக்கருளோ, மண்டுமெமதூரில்வருந்தூதனல்லான்மற்றெவ
ன்கொல்சாற்றுகெனவாகையண்ண, லண்டர்சிறைகொண்டவனோ
டுமைப்பானதியருள்குமரனடிக்கடிமைபூண்டதூது, கொண்டுமது
பதியலைத்தோன்யானேயென்று குலவுறுதன்றிருப்பெயருங்கூறி
னானால். (௬௩)

கேட்டவுணன்வெகுண்டுனையுமுனைக்குக்கோணைக்கிளருமவன்
றனையுமிறைப்போதிற்றானே, வீட்டிடுவேனென்றுசிலைகுனித்தான்
வீரன்விளங்குபலவாளிகளைவிடுத்துத்தேரிற், பூட்டிடுவெய்பரிகளை
நீள்கொடிகடம்மைப்பொலிசூதன்றனைவியவழித்தகாலை, நாட்டுபுக
ழிலாக்கொடியன்வேறுதேரினண்ணியடுங்கணைகள்பல தொடுத்தா
னன்றே. (௬௪)

கொடியன்விடவருசரங்கள்பொடியாக்கண்டுகொலைபுரிதன்ப
டைகளிலேபாதிகாறும், விடவதனாற்சாரதியின்சிரமறுத்தேவெய்ய
வன்றனுரத்தழுத்தமாயைப்பாசந், திடமுடனேதொடுத்திலக்கர்வீர
ரெண்மர்திறல்வீரவாகுவையுஞ்சேர்த்துவிண்ணிற், படர்வுறவேயுத
யகிரிசேரக்கண்டுபெதறியுளநடுநடுங்கிச்சோர்ந்தார்விண்ணோர். (௬௫)

சுரரடைந்துமுருகனடிமுடியிற்சூடிச் சொல்லநாவெழாமை
யினனடுங்கவேலோன், வெருவலிர்நீருனையுமெனவுரைக்கக்கேட்டு

வெகுண்டிரதமூர்ந்துகணைவெள்ளஞ்சூழ, முரசினெடுமுழங்குபல சின்னமார்ப்பமுந்தசுரர்குலகாலனுற்றகாலைக்,கரியவுடலவுணனடற் படையினோடேகெந்தனடற்படைகளும்போய்க்கலந்தமாதோ. (௬௬)

காரவுணவீரர்களும் பூதர்தாமுங்கதித்தபெருஞ்சமர்புரியவவுணவீரர்,சீரழிந்துசிரமழிந்துகரங்கள்சிந்திச்சிதைந்ததசண்டரிமுகவன்சிறியின்னே, யோரவிழாவயின்றிடுவேனெனக்கைநீட்டியுறுபூதர் யாவரையுமகட்டிற்சேர்க்க, வேள்முருகன்றனித்தசெயறாதரோடியிறைசூரற்குரைக்கமிகமகிழ்வுபூத்தான். (௬௭)

மகிழ்வுகொடுசிகரிமிசைமன்னித்தம்பிமண்டமர்கண்டகமகிழ்ந்து சூரனின்றான், றிகழ்குமரன்சிலைகுனித்துக்கணைகடுவிச்சியமுகனை சடத்தனைக்கிழிக்கப் பூதர், புகுவழியினெழவவுணன்கரத்தானீவிப் பொருந்துறவைத்தறுமுகனோடுரைப்பான்வானோர், மிகவெங்கள் பகையாதல்கண்டன்றோரைமெலிவுறயாம்வதைபுரிவோமவர்களல்லால். (௬௮)

பகையலைநீயமர்புரியவந்ததேதோ பகருகெனவிண்ணவரைமெலிவுசெய்து,தகையரசுபுரிந்திடுமப்பரிசால்வந்ததன்மையெனச்சண்முகனுரைப்பக்கேட்டு, நகையுடனேயெளியோர்கட்கேவல்செய்ய நண்ணினவன்வெல்லையமர்புரிவாயென்று, மிகைபுகன்றுகரம்புடைத்துப்பழிக்கவெங்கள்வேலவனுமனங்கொதித்தேயினைசெய்வான்.

ஒருபடையைக்குறித்துதயகிரியிற்சென்றேயுறுமெனதுசோதரனைத்தருகென்றேவ, விரைவினுடன்சென்றவைக்கொண்டுமுன்புவிடவெண்மரிலக்கர்களும்வேலன்பாத,மருவவருள்சுரந்துமற்றோர்சரத்தைவிட்டுமாற்றலன்றனைகடைக்கப்பூதரெல்லாம், வருவதைக்கண்டருகிருத்திமகிழ்ந்தானெனத்தையனங்களித்துவிழிகளித்துநின்றார்விண்ணோர். (௭௦)

சிங்கமுகன்சுரர்நடுங்கச்சிலையைக்கோட்டிச் சிலீமுகங்கள்பல விடுக்கச்செவ்வேள்கண்டு,பொங்குபலபல்லவங்கள்பொழிந்துதீயன் பொருந்திரதச்சுதனையுமழிக்கவெய்யன், றங்குதிறற்புவியிறங்கித் தண்டுகொண்டுசண்முகவன்றனைகளைச்சாடச்சாட, வெங்கள்பகைத் தொடக்கறுக்கப்புவியிற்போந்த வெழிற்குமரன்மிசைச்சினங்கொண்டெழுந்தானன்றே.. (௭௧)

கொடியர்குலகாலனெனநிலவுவேலைக்குறித்தாளிமுகவனுயிருண்டமீண்டு, கடிதினிவண்வருதியெனவெந்தையேவக் கதிரயில்

போயவுணனூராமீதிற்பாய்ந்து, நெடுமுதுகைப்பிளந்துசெலக்குருதி யோட்டீடுபெரத்தொடுமெடியக்கூர்வேலுகைம், படிநதியின்மூழ்கியரன ருளவந்தபரகுரவன்கரஞ்சேர்ந்தபண்டுபோல. (௭௨)

விண்ணவர்கண்மகிழ்ந்துமலர்மாரிதூவிவேலனருட்புகழ்பாடிக் களிப்பினூடச், திண்ணியநல்லிலக்சர்களும்வீரர்தாமுந்தீதிலாப்பூதர் களுஞ்சேனையாவு, மண்ணலடிமுடிசூடியுவகைமீக்கொண்டகக்களி ப்போடொருபாலினின்றாராங்கு,நண்ணரிமாமுகனிறக்கச்சிகரிமே வுநன்மையிலாச்சூரனொடுதூதர்சொல்வார். (௭௩)

வேறு.

நின்றம்பியானவரிமாமுகத்தனெடிதாடல்செய்துபடியிற்
பொன்றிக்கிடக்கவுயிர்போயதென்றுபுகலுற்றபோதசிகரி
துன்றுற்றசூரன்றறைமேல்விழுந்துசுரரங்குகண்டுமகிழ
நன்றற்றவாயையகலத்திறந்துநலிவுற்றழுங்கியழுதான். (௭௪)

வேறு.

துயர்நீங்கியொருகோடியுடனூயிரங்கொண்டதூதனைவிளித்து விளைவிற், செயிர்நீங்கியாயிரமொடெட்டளவையண்டங்கள்செறி சேனையாவுமுறையில், வயமோங்கவழைமின்களெனவாங்கவர்கடா னையண்டண்டமெங்குமுலவிப், புயலேங்குநிறவாளவுணர்தானைய வைகொண்டுபோந்தார்களண்டவழியால். (௭௫)

வேறு.

ஆதிபதியும்பர்பதியாவையுநிறைந்தவனிசத்திரள்பராகமெனி லென், ஞேதுவதிவ்வாறெளிகொடானவர்கடானையுறவொற்றர்கள் விரைந்தவுணர்கோன், பாதமுடிகொண்டிதுபகர்ந்திடவுளூற்றறல் படிந்தபினராரவடிசி, லாதரவினுண்டுதிருநீறுநுதல்கொண்டுமணி யாரமுமணிந்தனனரோ. (௭௬)

கூளிபதினூயிரமெஞளிபதினூயிரமொண் கோடைபதினூயிர மொரேட, வாளிரதமேறவுணர்வாளவுணர்கோளவுணர்மன்னுபடை துன்னிவரவே, காளியுடனுடிமகளேனுடுசெமராடவருகாலையதுகண்டு வெருவித், தாளூலவுபோதனரிவானவர்செவ்வேளினடிதாழ்ந்திவை யுளைத்தனர்களால். (௭௭)

கேட்டகுமரேசனரியூர்ந்துவரவீரர்புடைகிட்டிவரபட்டில்படை க, ணீட்டுபுகழ்சாரதர்களோட்டியடனீடசுரர் நேரிலமராடினர்க ளால்,வேட்டவுணராலிலகுவாட்படைகொள்பூதரிறவீரர்களுமெண் மர்களுமாக், கோட்டியமராடிவலிபொன்றினர்கள்வீரன் முனை கொண்டவுணரோடுபொருதான். (௭௮)

மண்டுகணைகொண்டுசிலைப்பொரவவற்றவர்மடிந்திலருணார்ந்துமுருகன், கொண்டதனுவிற்கணைகணக்கிலதொடுத்தொளிருலாவவனிவானகமுமா, வண்டமெவுணப்படைபிணக்குவைபடும்படியனித்தமிலியாற்றவதனைக், கண்டெயருமண்டசடகத்துருவினின்றபடைகந்தனெதிர்வந்தபொழுதே. (௭௯)

எங்கண்முருகேசன்வருதானவர்படைக்குளிரதஞ் செலவியற்றுகெனவே, பொங்குதிறன்மாருதியுநன்றெனவிசைந்துபுவி போதவுயரம்பரமுமாய்த் துங்கமொடளக்கரின் விடுக்கமுருகேசன்வருசேனையெனவாளிகள்சொரிந், தங்குறைகுவோருயிர்துறந்துபிணமாம்வகையருஞ்சமர்புரிந்தனனரோ. (௮0)

ஏழுதிரைவாரிதியுமாகமொடுதேவர்களிருந்தவுலகுந்தகுவர்கள், சூழவருதானைபிணமாகிவிழவேபுலவுசோரியெனுமாறுபிலமா, மேழினுடனெண்டிசையுமண்டலமும்விண்டலமு மெங்கணுநிறைந்தொளிரவே, வாழிமுருகன்றகுவர்மண்டிவருமண்டவழிவாளிகொடடைத்தருளினான். (௮௧)

பன்னிருபுயத்தனழலோடுமெழுவேலேயுலவு பன்னிருகணும்பொலியவே, மன்னவுணர்மாய்ந்தகளநோக்கவுயர்சோரிநிறை வற்றியபிணக்குவியலாய்த், துன்னியவைநீறுபடவாங்கதனைநோக்கியரிசூழ்ந்தவிமையோர்குமரனைப், பன்முறைவழுத்தினர்களெம்பரனுளங்கொடுபடர்ந்தனன்மகிழ்ச்சியுடனே. (௮௨)

எந்தையிவணுற்றியதுணர்ந்தவடரூனவர்களேந்தலும்வெகுண்டழிவிலா, வந்தமிதுகந்தனெதிருந்திரதமோடுகடுவெந்தெனவணைந்தபொழுதிற், றந்தியுரிகொண்டவிறை தந்தருளுமைந்தனெதிர்சார்ந்தவனையேற்றருளினான், முந்துசுரர்வெஞ்சிறைவருந்துதுயர்கடவன்முனிந்திவை மொழிந்திடுவனால். (௮௩)

வேறு.

மதியணிகடவுளுவந்தருள்வரத்தின்வலியினான்மாய்ந்திடேன்வாழ்வேன், கதியெனவெனதேவலைப்புரியமரர்கழறியநம்பிவந்தெதிர்த்தாய், முதுகுகாட்டிடினுமுன்றனைவிடுக்கேன்முன்னிலையரினெனைமதித்தாய், மதியிலிபோபோவெனமதியில்லான்வள்ளல்புன்னகைபுரிந்துரைக்கும். (௮௪)

உம்பரைநாளும்வருத்துவெங்கயவவுணைத்தனைவம்புரையுடலிற், செம்புனல்பெருகயாம்விடும்படைகள் செயிர்க்குமுன்மதிசிலதெரிப்பே, நம்புகவெனவெங்கொடியவன்சினந்துகாணொலித்தம்புகளை

ய்தான், பம்பியபூதரவைபடவுடைந்தார் படர்ந்தனரிலக்கரொன் பதின்மர். (அரு)

சிலைகுனித்தவன்மேற்கணைவிடவவைசாஞ்சென்றுபற்பலபொடியாக, நிலையிலிகோடிகணைகளாலவர்கணைகடிந்திகிரியும்வில்லுந்தகர்த்துத், தொலையிறு நூறுயிங்கணைவிடுக்கத்துயர்ந்திடுமிலக்கரெண்மர்களு, மலைதராதிரியவிருந்திறல்வீரவாகுவாள்கரத்தெடுத்தடுத்தான். (அசு)

வாள்கொடேயவுணனீள்சிலைதுணிக்கவள்ளலுக்கிளையனையசுரனீள்கரமதனுன்மார்பிடையடித்துநெடியவாளெறிதலுமென்னையாளுடைக்கடவுளருகுவந்துற்றுனறுமுகனேடவனெதிர்ந்துகோளமரியற்றிக்குமரவேட்டீற்குலவியகொடிகளையறுத்தான். ()

கறுத்துளங்குமரன்கொடியவன்விடுத்த கணைகளைச்சிதைபடச்சிதைத்துச், சுறுக்கெனவேழுகணைகொடுசூரன்றுன்னியதேர்கொடிமுழுது, மறுத்துவார்கடலினெறிதலுமமரரரிகரம்புடைத்தனரொலித்தார், குறித்துவாளவுணன்றேரொடும்விசும்பிற்கொண்டவர்வருந்துறப்பொருதான். (அஅ)

இன்னவையுணர்ந்தவெம்மையாளுடையோனிருவிசும்பிடையிரதத்தின், மன்னிநின்றவுணனேடமரியற்றிவானவையடுபடைமுடித்துப், பின்னும்வெம்பிலத்துநிலத்தும்வாரியினும்பெருவரைதமினும்விணகத்தந், துன்னிடமெங்குமிரதமோடிவர்கள்சுற்றியுமீண்டனர்பலகால். (அகூ)

இத்தகையிருவரேறியவிரதமெங்கணுமுலாவுபோதவுண, னத்திரம்பலகொண்டண்ணறன்றேறையழித்திடவறுமுகன்கணைகளுய்த்துவெஞ்சூரன்கணைகணீறுக்கியுறுத்தலுந்துண்ணெனவவுணன், மத்தகமுகத்தோற்கிளையவன்முன்னர்வாசிலையோடும்வந்துற்றுன்.

நீள்சிலையவுணன்கோட்டிவெங்கணைகணித்தன்மேல்விடுத்தலுமெம்மை, யாள்பவன்கணைகள்பலகொடுவெய்யனடற்குவவுப்புயந்துளைக்க, வாள்வடிவேலன்மீதவன்விடுக்க வந்தவெந்தடிபணிந்தகலக், கோள்கடுவென்னவவன்படைவிடுக்கக் குமரனுமவைசிதைத்தெறிந்தான். (கூக)

வேறு.

வையமிசையுற்றவுணன்வாளிபலகொண்டெம்
மையன்மிசையுய்ப்பவவையாறுமுகன்மாற்றி
வெய்யன்மிசைவேறுகணைவிட்டனன்வெகுண்டே
துய்யன்மிசைநூறுகணைதூர்த்தமர்தொடுத்தான். (கூஉ)

பின்னவுணன்மண்விண்ணொடுபேசுபிலமேழும்
பொன்னசலம்வெள்ளிமலைபோதனுலகாதி
மன்னியமராடவருள்வள்ளலுமுருத்தே
துன்னுமிடமெங்கணுந்தொடர்ந்திரதமாய்த்தான். (௯௩)

தேரழியவீசனருடேரின்மிசையூர்ந்தே
காரவுணர்வேலுடையகந்தனிடைவந்து
போரடரவெம்படைபுகுத்தமைமைசயன்
வார்படைகண்மட்டிலவிடுத்தவைமாய்த்தான். (௯௪)

இந்தவகைகண்டவுணனெந்தையருளாழி
கந்தன்மிசையேவவவர்கண்டுகைபிடிக்க
வந்தமறுபல்லுருவடுத்தவுணனண்ட
வெந்தையறிவென்றபடையேவியவைமாய்த்தான். (௯௫)

வேறு.

அப்பொழுதசுரன்றனித்துவந்தெதிர்த்தேயறுமுகனேடமரியற்றிச், செப்பருந்துயர்கொண்டாயிரகோடிசெறியுமண்டங்களிற்புகுச, மைப்படிகண்டன்சதனைதக்கண்டுவன்பு கொண்டெங்கணும்பொரவே, யொப்பருமவலத்தவனியினடைந்தேயுளத்திடையுன்னினனனையை. (௯௬)

நினைவுறப்படியின்வந்தனளசுரனிகழ்ந்தவைகூறியாங்கிறந்த
வனைவருமெழவிங்கருளெனவமுதவனைபடுமிடமறைந்தகன்றுள்
பினையரனருளுமரிமிசைமருவிப்பீடுசேர்போரிடைமாய்ந்த
தனையருந்தம்பியரிமுகன்முதலோரொழச்சுரர்சாரதர்தளர்ந்தார். (௯௭)

ஈதறிந்தெம்மையாளுடைக்கடவுளிருந்திறற்படைவிடவதுவெந், தீதுறுமவுணர்தலைமையெலாமழித்துத்திறற்குகன்கரத்துறச்சூர, னேதமிறேரைவிடுத்தசுரர்களோடிருவிசும்பேகவேன்முருகன், காதுவெம்படைவிட்டவர்செலாதழிக்கக்கந்தன்மாட்டடைந்தனரசுரர்.

பற்பலவிதமாப்படுகொடுஞ்சூரன்பரனருள்பாலனோடெதிர்க்க
வற்றமின்முருகனவையவைதுணிக்கவாழிவாயசுரனோர்கொக்காய்
நிற்றலும்வேல்விட்டன்னதையழிக்கநிருதனீடியவுருக்கொளலுஞ்
சிற்பரன்வேல்சென்றவனுடலிரண்டாச்செய்துமீண்டுற்றதுமாதோ.

வேலதுபிளக்கமயிலுடன்சேவல்வீறியவடிவுகொண்டுறலுங்
காலனைக்காய்ந்தகடவுடந்தருளுங்கந்தனுங்கண்டுளங்களித்தே
கோலமாமயிலைவாகனமாகக்கோழியைக்கொடியதாக்கொண்டு
சீலமாரிளையனும்வீரவாகுதேவனைக்குறித்திவைமொழிவான். (௧௦௦)

வெந்திறற்சூரனிடச்சிறைபட்டவிண்ணவர்தமைத்தருகென்ன-
வந்தமார்வீரன்கொணர்ந்திடச்சயந்தனாதியவமரருஞ்சூழ
முந்தியவசுரனூரினைமுந்நீர்மூழ்கிடச்செய்துபினெடுமான்
செந்திருமார்பன்முதலியோர்பரவச்செந்தியின்வந்தணைந்தனனே. ()

யுத்தகாண்டம் முற்றிற்று.

ஆகக் காண்டங்கள் ௪ - க்கு திருவிருத்தம். ௨௯௭.

---

# தேவகாண்டம்.

---

ஏதமிலெந்தையிரும்புகழ்பாடியிமையவர்சூழாங்களிப்பெய்தித்
தீதறுமின்பக்கடலிடைமூழ்கித்திகைத்தனர்பரவசமானார்
கோதறுமயூரமிழிந்துநற்சிகரக்கோயிலினரியணைகுறுகி
வேதனுதியர்களிருபுடைபரவவேலன்வீற்றிருந்தனனன்றே. (௧)

அப்பொழுதிரவிமறைதலுமமரராறுமுகனடிதொழுதுற்றார்
மைப்படிவஞ்சச்சூர்முதறடிந்தவடியயிலெனக்கடன்முகட்டின்
வைப்புறுமிருளைத்துரந்துநல்லருக்கன்வருதலும்வள்ளலைமுருக
னொப்புடன்பரவிமஞ்ஞைமீதூர்ந்தேயுயர்பரங்கிரியின்வந்துற்றான்

அம்மலையருகிலாலயமுதலாவணிமணிவீதிகளுலவுஞ்
செம்மையினெடியிற்கம்மியனியற்றச்சிகியினின்றிழிந்தரியணையி
னெம்மையாள்கடவுளிருந்தனனும்பரிளையவர்சாரதர்பிறருந்
தம்மனந்தளிர்த்தேயவரவரொருபாற்றங்கினரிந்திரன்புகல்வான். ()

வானவர்க்கிறைவன்மாலயன்முதலோர்வதனமோர்ந்தென்மகடன்னை
யீனமில்குமரர்க்கீந்தெழின்மணத்தையியற்றிடவென்மனத்தெண்ண
மானதையுங்கட்குரைத்தனனென்னவவர்களுநன்றெனவிசைப்பத்
தேனலர்கடப்பந்தெரியல்வேய்கந்தன்சேவடிதொழுதரிதெரிப்பான்

சங்கரனருளுஞ்சண்முகத்தலைவதமியரேந்துயர்தவிர்த்தாண்ட
வெங்குலதெய்வமணிவிளக்கொளியேயேழையேன்றிருமகடன்னைப்
புங்கமாமணநீபுரிந்திடல்வேண்டுமெனப்புரந்தரன்புகன்றிடலுங்[ன்
கங்கையின்சுதனுளக்கெனக்கேட்டுக்கடவுளர்க்கிறையுளங்களித்தா

வேறு.

அண்டர்தஞ்சிறைதீர்த்தருளெம்பிரானருமணத்திற்கிசையவம
ரர்கோன், மண்டுதூதரைநோக்கியிப்பார்புகழ் மன்னுமாமுசுகுந்தன்
முன்னாதியாக்,கொண்டவேந்தர்பலர்க்குமடுதிறற்கோவலேலர்க்குமா

மணநாளையென், றண்டிச்செய்தியறைமினென்றேவினனன்னதன்
பினரின்னவையாற்றுவான். (௬)

தெய்வகம்மியனலணிமண்டபஞ் சிகரகோபுரம் வாயிலுமுன்
றிலு, மெய்யரம்பையர்நாடகசாலையும் வேலன்மன்றற்கியைந்தநன்
மன்றமுஞ், செய்தவின்னமுநின்றிடமுன்னோர்நாட்சீர்வெண்விண்டு
வின்விண்டொடுகாவினி, லையம்பேந்தியையென்றகண்ணுளனெம்
மன்னையோடிமிருக்குமவ்வெல்லையில். (௭)

அந்தவேலைமுசுக்கலையொன்றுவந்தாதிமீதினுமம்பிகைமீதினுங்
கந்தமாரிலைசிந்தியபான்மையாற்கடவுளீந்தவரங்கொடுபூமியிற்
சந்தமார்கருவூரரசாண்டிடுந்தகைமைசேர்முசுகுந்தனிடத்தினி [ரோ.
லெந்தைவேலர்க்கருமணநாளையென்றியம்பினார்கள்புரந்தரன்றூத

கேட்டுநீடணிகத்தொடுங்கந்தன்வாழ்கிரியின்மேன்முசுகுந்தன்
வந்துற்றனனாட்டிலுள்ளவரசருநண்ணினார்நல்லமாதருமாடவர்யா
வருந், தோட்டமுந்தடவாவியுஞ்சோலையுஞ் சூழ்ந்துலாவித்திரிந்து
களித்தன,ரீட்டுசெங்கதிரோனுமறைந்தனனிருளடர்ந்தொளியெங்
கணுமின்றரோ. (௯)

ஆனகாலையிலப்பரங்குன்றில்வேலைத்தற்றுழ்ந்துமுசுகுந்தனுங்
குற, வேனைவேந்தர்களிந்திரனைத்தொழு திருக்கைமேவியிருந்திடு
வேலையிற், பானுமீண்டுமுதித்தனன்வேலையிற்பாவைமார்சுரர்வார
ணமாதினை, யீனமற்றமணிப்பணியாதியாலெழில்பெறப்புனைந்திட்
டனரென்பவே. (௧௦)

அந்தவேலையில்வேலையின்மேற்றுயிலரியயனொடமரர்செவ்வே
ளிரு, கந்தமாமலர்ப்பாதமதேத்திய கடவுள்வாரணமாதைமணஞ்
செய, வெந்தைவந்தருள்வீரெனமாமயி லேறியேர்நிறைவீதியிலே
புகச், சந்தமாதர்கவரியிரட்டினர்தருநிழற்சுரர்தண்மலர்தூற்றினர்.

பொங்குபல்லியமெங்குமுழங்கினபூரணத்திருமங்கலப்பந்தரிற் [த்
தங்குமஞ்சையிழிந்திடுவேலையிற்சசியுவந்துவந்தெந்தைதன்மாமலர்
துங்கநற்றிருத்தாளைவிளக்கினளேயவேலனரித்தவிசேறினா [ர்.
னங்கண்மான்முதல்விண்ணவர்யாவருமாறுமாமுகனேவலிற்றங்கினா

கோலவேன்முசுகுந்தன்முன்னாதியாக்கூறுமன்னர்கள்வேலனை
ப்போற்றினார், சாலவீரரும்பூதருஞ்சண்முகன்றாள்பணிந்தயறங்கின
ரப்பொழு, தாலமுண்டவன்மாதினொடெய்திடவண்ணல்சென்றவர்

தாள்கள்வணங்கினன், பாலன்றன்னையெடுத்துமகிழ்ந்தணிபரவுமா
மணப்படந்தருளெய்தினார். (௧௩)

ஆறுமாமுகன்றந்தையொடாயையுமன்புமீக்கொடருச்சனைசெ
ய்தபின், வீறுமாதனமேறினன்வேதியன்வெய்யசூர்விளிவத்தனுக்
கோதின, னீறிலான்மகிழ்ந்தின்புறுமன்றலையியற்றுகென்னவொரி
மகட்கொடு, ஆறிலாதசுயம்வணத்தவிசினிற்றூயனோடுறவைத்துக்களி
த்தனன். (௧௪)

மாமலைப்பகைசூர்ப்பகைதாள்களை மருவுபன்னிரன்னீர்விடவா
ட்டியே, தூமன்பூசைபுரிந்துதன்னொரணத்தோகைகைக்கொடுதோ
கையைப்பாலுடை, வாமன்காமுறுகாமர்குழவிகைவைத்தரும்புனல்
வாக்கியளித்தனன், காமன்வெள்குறுங்கட்டழசெய்திய காளையங்க
தையங்கரங்கொண்டனன். (௧௫)

வேதவேதியனங்குவிதித்திடும்வீறுமங்கலநாணினையாளைதன்
கோதில்கந்தரமீதிற்புனைந்தலர்கோதைசாத்தியும்வன்னிவலங்கொடு
தீதிலிந்திரன்மாதினடியமிசேரவைத்தினமன்றலியற்றியே
யாதியோடுமையாளைவணங்கலுமழிவிலாசிபுகன்றவரேகினார். (௧௬)

இன்னபான்மையியன்றபினெம்பிரானேதின்மான்முதலோரை
விடுத்தனன், பின்னர்வீரனைவாயிலிருத்தியெம்பிராட்டியோடுமிருக்
கைபுகுந்தவன், மன்னுமஞ்சமணைந்திபமாதுடன்மண்டருத்திமிகுத்
திடமண்டலங், துன்னுறக்கலவித்தொழின்முற்றினன்சுரர்கடத்தமி
ருக்கையிற்சேர்ந்தனர். (௧௭)

மன்னுமாமுசுகுந்தன்முன்மன்னவர் மண்ணிநண்ணுபுரங்களி
னண்ணினார், றன்னவெற்பினிலைம்பகலன்னையோடண்ணலுண்மகிழ்
ந்துற்றனன்மற்றதன், பின்னரோர்பகனீடு விண்ணோர்தொழப்பீடு
சேர்பரங்குன்றினைநீங்கியே, பொன்னின்மாமயிலேறிச்சுரரிறைப்
பூவையோடுதுறக்கமடைந்தனன். (௧௮)

நாகர்நாட்டைநற்கம்மியனாலணிநனிவிளங்குறச்செய்தபினிந்
திரன், போகசாகரமூழ்கிடப்பொன்மணிபொருந்துமாமுடிசூட்டுவித்
தெம்பிரான், றோகையோடெழின்மாமயிலேறியே தோகைபாகன
மர்கயிலைக்கணே, வாகைசேர்திறல்வீரர்கள்சூழ்தரவந்து சேர்ந்தனன்
சுந்தரக்கந்தவேள். (௧௯)

அந்தமாமலைமீதிலமர்ந்தருளாதியோடுமையாளைவணங்கியே [னி
தந்தைதாயின்விடைகொடுதண்ணளிதங்குவீரர்கள்சூழ்தரச்சென்ற

கந்தமாகிரிபோந்தடல்வீரரைக்கடைநிதீஇயரியாசனமேறியே
சுந்தரத்திருவாரணமாதுடன்சோதியேயலனிருந்துகளித்தனன். ()

வேறு.

கந்தமாகிரிமேவியகந்தவேண்
முந்துமேவன்முறைமுறையாற்றியே
சந்தநீடடிசந்ததம்போற்றியே
யிந்தவண்ணமிருந்தனர்வீரரே. (௨௧)

தேவகாண்டம் முற்றிற்று.

ஆக் காண்டங்கள் - ௫ - க்குத் திருவிருத்தம் - ௯௱௩௮.

---

# தக்ஷகாண்டம்.

வேட்டுமங்கையிருேட்டநறையுண வேட்டுக்கட்டழகாநெடுங் காட்டொரு, கோட்டியானைமுகனிருகோடுறக் கோட்டிக்காட்டிப மாய்வரக்கூட்டியு, மீட்டுமேகவுளத்திடைநாட்டவாய் வேட்டவேட் டவையீட்டவல்லானென, வீட்டுமன்பர்க்கெளியவனாகியவீறிலாமு ருகேசனைப்போற்றுவாம். (௧)

வேறு.

பண்டொருபகலிற்சத்தியவுலகிற்பங்கயனிருந்திடுவேலை
யெண்டருந்தனயர்தங்களிற்றக்கனென்பவன்றந்தையையணங்கி
யண்டர்கள்புகழுமூவரிற்சிறந்தாராரெனவரனெனவவனு [வால்.
மொண்டொடிபாகற்கேற்றம்வந்துற்றதுவாயெனவுரைத்தனன்பல

கேட்டுளமகிழ்ந்தேமானதவாவிகிளர்மணிக்கரையிடத்தடைந்து
நாட்டமூன்றுடையநாயகன்பாதநாடியேநற்றவமியற்றக்
கோட்டமிலமலன்குறுகிநீவேட்டல்கூறெனமூவரின்மேலாம்
வாட்டமிலரசுமுமையவண்மகவாய்வரவுநீமணக்கவும்வேண்டும். ()

என்னவென்னமலனீந்துநீநெறியாயிருத்தியே யிருக்குமென்ற கன்றான்,பின்னைதன்பிதாவுக்கிவையெலாஞ்செப்பிப்பெரும்பதியரு ளனவவனும், தன்னகரதனின்மிகுவளமியற்றித்தக்கமாபுரியென க்கொடுத்தா, னன்னதொன்னகரிற்றனியரசிருந்தானுயிரஞ்சேய்க ளையளித்தான். (௪)

மைந்தரைநோக்கிமானததீர்த்தமருங்கடைந்தருந்தவமியற்றி
யுந்தியசிருட்டிபெறுதிரென்றேவமுயன்றவரிருப்பதையுணர்ந்து

சுந்தரவிபஞ்சிமுனிவன்வந்தெய்தித்தூநெறியுரைத்தவர்தம்மை
யந்தரமுத்தியடைதரவிடுத்தானறிந்தன்னவருந்தினன்றக்கன். (ரு)

பின்னரும்பத்துநூறுமைந்தர்களைப்பெருக்கினீரருந்தவமாற்றி
யுன்னருஞ்சிருட்டிபெறுதிரென்றேவவுற்றவர்நற்றவமியற்றத்
துன்னினாரதனங்கவரையுமுன்போற்றூயவீடடைதரவிடுத்தா
னின்னவையறிந்ததக்கனும்பெண்களிருபத்துமூவரையீட்டயந்தான். ()

மற்றவர்தம்மைத்தருமனேமுதலாமாதவர்க்களித்தனன்பின்னும்
பொற்றொடிமடவாரிருபதோடெழுவர்பொற்புறவின்றுநன்மதிக்குக்
குற்றமில்வதுவையாற்றினற்கொடுத்துக்கோதையரிடத்துநீசமபா
வுற்றிடவிருத்தியெனவிடைதரலுமுவந்தவருடன்மதிவாழ்நாள். ()

சுந்தரமதியுமிருவர்பாற்காதல்சுரந்தனன்மற்றையர்சென்று [தான்
தந்தையோடுரைக்கத்தக்கனுஞ்சினந்துதண்கலைகுறைகெனச்சபித்
முந்தியகலைகள்குறைதலும்பிரமன்முன்னடைந்துரைத்தனனவனு
லந்தநற்கயிலையரனருள்பெற்றேயகற்றினன்சாபமாமதியே. (அ)

சுந்தரக்கயிலைச்சிகரமிசையேதூமொழிச்சுந்தரியோடுஞ், சந்
திரன்கலையைத்தரித்தநற்பரமர்தனித்துளமகிழ்ந்தினிதிருப்ப, வந்
தியமலையம்பிகையெழுந்தேயையனதிணையடிபணியா, முந்தியரனை
துமெய்ம்மையைப்புகல்வாய்முதல்வனேயெனவிறைமொழிவான். ()

தேமொழிமடவாய்செப்புவல்கேண்மோதிசைமுகனுதியதேவா
யாமொருவடிவினருண்மயமென்றயாமவரென்றமேயிசைத்து
நாமுயிர்தோறுநின்றசைப்பித்தனங்கைநிற்குணர்த்துதுமென்றைத்
தூமொழிப்பரமன்றொல்லுயிருணர்ச்சிதந்திடநீக்கினனிமைப்பில்

மாலயன்முதலாந்தேவர்கள்பாரின்மன்னுயிர்சடங்களாய்மாய
வேலையிற்கண்ணுள்விடலனேவேண்டவிரைந்துணருருத்திரனொன்னுஞ்
சிலர்வந்திருவிற்றிகழரிவட்டஞ்சேர்ந்தரனடியிணைப்பரவச்[தனவே.
சாலவெள்விடையன்வந்துயிர்த்தொகையைத்தானசைத்திடவெழுந்

உணர்ச்சிவந்தெழுந்தபிரமனுமாலுமுன்னினர்சிவன்செயலெ
ன்று, தணப்பருங்கயிலையமலனைப்போற்றித்தனிமறைமுறைபிறழ்ந்
திட்ட,புணர்ப்பரும்பாவம்போம்வழிபுகல்வாய் புண்ணியாவென்ன
லுமுமைபா, னணப்படுநீவிர்நாடொறுஞ்செய்யுநல்வினைபுரிதிரென்
றறைந்தான். (சஉ)

அதுதெரிந்தமலைபஞ்சியேயமலனடியிணைதொழுதிதுகழியும்
விதியதுபுகறியென்னலும்விமலன்விமலைநீதக்கனன்மகளா

ெதிதிவந்துன்னைமணந்துபின்கயிலைமால்வரைவருதுமென்றிசைப்பக்கதுமெனவெழுந்துகாளிந்திநதியின்கமலமேல்வளைவடிவானாள். ()

விதிமகனதிப்பால்வந்தனன்கண்டான் விருப்பொடுங்குழவியையெடுத்து, மதிமுகவல்லிமனைவிகைக்கொடுப்பவளர்த்தனளுமைதவம்புரிய, நதிமதிமிலைந்தோன்றான்மறையவனுநண்ணினனங்கைமுன்காணாத், துதிபுரியுமையைத்தொன்மணமுடிப்பேந்துறந்திடுதவமெனவகன்றான். (௧௪)

தவந்துறந்தம்மைதந்தைபாலுறைப்பத்தக்கனுமணவினைமுயன்றா, பவமறுஞ்சுரரும்பலமுனிவரரும்பரிந்துவீற்றிருந்திடுமமையஞ், சிவன்வரவுமையைச்சிறுவிதிபரன்கை சேர்த்தருந்தாரைநீர்ப்பெய்தா, னுவமையில்லவனேற்றணிமணமுடியா தொருவனுக்கயிலைபுக்கனனால். (௧௫)

மறைதலுந்தக்கன்மனங்களிப்பிலனாவானவர்தம்மொடும்வினவி, யுறைதலுமம்மையுயர்தவமியற்றவூர்விடைப்பாகன்வந்தணுகி, யிறைவியையெடுத்துவிடைமிசைவைத்தேயேகலுந்தோழியர்சென்றே, யறைதலும்விதிசெய்முனிவுகொண்டரனை யவமதித்திருந்தனனிப்பால். (௧௬)

சிறுவிதிச்சிவனையிகழ்ந்தனனழிவான்றிண்ணமே னமக்கிதுவருமாற், பெறுமறிவில்லான்றனைமிகத்தெருட்டிப்பிராற்குறவாக்குதல்பெருமை, யிறுதியுமில்லையெனச்சுரரவனையெய்தியேகயிலையிற்படரத், தெறுவலிக்கணங்களிகழ்ந்தனையரனைத்தீயனீவிடுக்கிலோமென்றார். (௧௭)

வாயில்காப்பாளர்தடுத்ததுமீசன்வார்த்தையேயெனமனஞ்சினந்து, போயினன்றக்கன்பதிபுகுந்திருந்தான்போதனோர்மகமதுபுரிவா, னாயினன்சுரரையழைத்தனனவரோடடைந்தனன்றக்கனுமாங்க, ணேயினன்சிவனுக்கவியிலையென்றேயெண்ணறுசலாய்விளைத்திட்டான். (௧௮)

வந்தவணிருந்தநந்தியுட்சினந்துமலரவன்மகன்முகநோக்கிப், புந்தியில்புலையாநின்றலைதுணிப்பேன்பொறுத்தனனரனருளிலையென், றெந்தையெம்பெருமாற்கவியிலையெனும்வா யிலங்கியதலையறப்படுவாய், முந்தியிம்மகத்துக்கெய்தியசுரர்கண்முரணுறுசூரனாலழிவார்.

எனக்கொடுஞ்சாபமீந்துவண்கயிலைக்கிறையிடத்தெய்தியீதிசைத்துத், தினம்புரிபணியினிருந்தனனந்திதிசைமுகன்மகஞ்செயவஞ்

சி, மனமயர்ந்திருந்தான்சுரர்களும்யாரும்வாழ்பதிபுகுந்தனர்பின்னா
ணினைவருமகங்கள்யாவருஞ்செய்யார்நிலையிலான் மகஞ்செயத்துணி
ந்தான். (௨௰)

தக்கனொண்வேள்விச்சாலையொன்றமைத்தான்சதுமுகனாதியாந்
தேவர், புக்கனரேனைமுனிவரர்யாரும் புகுந்தனர்புகுகிலாரில்லை,
முக்கணன்பெருமைமுழுதுணர்ததீசி முனிவன்வந்தயன்மகற்குறி
யா, விக்குவில்லவனையவித்தவெம்பரமற் கிலையவியென்பதென்னெ
ன்ன. (௨௧)

முன்னமென்மகளைமணஞ்செயப்புகுந்தான் முறைமையிற்றா
ரைநீரேற்றான், பின்னருஞ்சடங்குமுடியுமுன்பெயர்ந்தான் பெண்
ணையுமறுவலுங்கவர்ந்தா, னன்னவைபொறுத்தேயவனையான்காண
வணுகினனரனருள்வாக்காற், றுன்னியகணங்களெனைத்தடுத்திழித்
துச் சொன்னவையான்சொலப்படுமோ. (௨௨)

இந்துயர்கொண்டென்பதிபுகுந்திருந்தே னென்பிதாவேள்வி
யொன்றியற்ற, வித்தகச்சுரரும்வந்தனர்யானுமேவியேவிமலனாமரற்
குச், சுத்தநல்லவிப்பாலிலையெனத்தடுத்தேன் றண்ணெனநந்தியுட்
சினந்து, புத்தியில்சாபங்கொடுத்தனனதன்பின் புங்கவரஞ்சினரொ
ழிந்தார். (௨௩)

யானதுசெய்தேயரற்கவிகொடாம லரிதனக்களித்திருமுதலா,
வானவரிதுகொண்டாற்றவானுன்னி மற்றிதுபுரிந்தனனன்றி, யினை
யில்பலனையெண்ணினேனல்லே னெழிற்றவமுனிவனேயென்ன,
ஞானமாதவனுநன்றுநன்றென்று நகைத்திதுகவிறன்மையினாறல். ()

ஆதியாய்நடுவாயந்தமொன்றில்லாதண்டத்துமடங்கிடாதுற்ற,நீதி
யாய்மணியினொளியதாய்ப்பாலினிறை சுவையன்னதாய்ச்சுடரின்,
சோதியாயுயிர்கடோறுந்தொறுநிலவித்தன்னியவான்பொருடன்னை
யோதியாலுணரவரியதாமுலகிலும்பருமறிவரோவுண்மை. (௨௫)

நீரினிற்றண்மைநெருப்பினின்வெம்மைநீக்கிடப்பட்டதன்றது
போற், பாரினிற்பஞ்சபூதங்களுள்ளும் பரந்தவைத்திடுதலாலுலகு,
சீரினிற்றெளிந்தோருணர்குவரந்தோ தெரிவையோர்பாகமதாகி,
யேரினிற்சிறந்தசிவத்தையுஞ்சுரர்போ லெண்ணினையழகிதோபே
தாய். (௨௬)

சிவத்தினன்மேனிபாதியிற்கலந்த தேவியுமறிகிலளென்னிற்,
பவத்தொடக்குண்டபசுக்களாயுலையும் பான்மையாரறிதரப்படுமோ,

தவத்தினரேனுமவன்செயலறியார்சத்தியமெனமறைசாற்று,மிவற்றி
னைபுன்னையீன்றவனுரைத்துமெண்ணிலைபேதையாயினையால். (௨௭)

வேறு.

ஒப்பிலப்பொருளெங்குமுள்ளதென் றுயர்ததீசிமாமுனிவனோ
தினு, னெய்ப்பிலப்பொருளத்திவெண்டலை யிலகுநஞ்சுகூரெயிறு
டைப்பணி, வெப்புடைக்கரியுரிதரிக்குமோவிமலமங்கையைப்பக்கம்
வைக்குமோ, துப்புசெஞ்சடைமதிமுடிக்குமோசுடலையின்கணேநட
மியற்றுமோ. (௨௮)

சுடுபிணத்தினுரடலைபூசியேதுள்ளுவெள்விடையூர்தியாகுமோ,
தொடுகடற்படுவிடமெடுத்தொளி துளும்பவைத்தணிகளங்கறுக்கு
மோ, விடுசுடர்ப்படைமழுவுமானொடு விம்முகைத்தலமீதினேந்து
மோ, படுதலைக்கொடுகடைதொறும்பலி பற்றியெங்கணுஞ்சுற்றிமுற்
றுமோ. (௨௯)

வேறு.

என்னவேததீசியங்கவைவந்தவேதினையுரைக்கவேதக்க
னின்னவாமகிமைபலவிசைத்திடினுமீசனுக்கவிகொடேனென்று
னின்னதுவிதியோதவிர்வுறுதிங்ஙனீபுரியாகமுமுடியா
தென்றுகவென்றேததீசிமாமுனிவனோதியயகன்றனனிப்பால். (௩0)

வேறு.

இன்னதிவன்செயலிப்பரிசாக - மன்னியவெள்ளிவரைக்கிறை
யோனைத்-துன்னுமடக்கொடிதோகையெழுந்தே - யன்னவன்வேள்
வியையானறிவேனால். (௩௧)

என்னலுமண்ணலுமின்னகைகோட்டி - யுன்னையுமென்னையு
முன்னிலனங்கா - யன்னதோர்வேள்வியறிந்திடலாகா - தின்னல்
விளைந்திடுமேகலையென்றான். (௩௨)

பின்னையுமன்னைபிரானடிபேணி - யென்னைமுனீன்றவனேற்
றுயர்வேள்வி - தன்னையறிந்திவண்சார்வனிமைப்பி - னன்னரினின்
விடைநல்குவையென்றாள், (௩௩)

விடைக்கொடியண்ணல்விடைப்படிமேவி- யிடைக்கொடியாகு
மடப்பிடியேவல் - கடைப்பிடியன்னநடைச்சியர்காதன் - மடுத்திடு
மப்பணியாற்றினர்வைக. (௩௪)

தோழியரேழ்திரையாழியின்மேவ - வேழிசைவீணையரேழை
யர்பாட-வாழியவென்றரமாதர்கள்வாழ்த்த- மாழைநிகர்த்தநவமாது
நடந்தாள். (௩௫)

வந்தவளின்னமகத்திடைவந்து - முந்தியதந்தைமுகத்தெதிர்நி ன்று - எந்தமதுந்துமகந்தையவன்றன் - சிந்தையுள்வந்துபுகுந்ததெ ன்செய்வான். (ருசு)

சுந்தரிவந்தசுகந்தனைநோக்கான் - சிந்தையுள்வெந்துசினந்துமு னில்லேல் - வந்ததெவன்புகல்வந்தவழிக்கொண் - டேந்துதியின்சொ லுரைத்தனனென்று. (ருஎ)

ஓதினனேதியிலோனுரையுன்னிப் - பேதைமைமேம்படுபேய் மகனந்தோ - சோதியனேதியசொற்படியேதா - னேதிலனெத்தில னின்னதிசைத்தான். (ருஅ)

பேதைமையன்னையும்பெட்பிலளாகிக் - காதலினீண்டெனைக் காண்கிலளந்தோ - வாதலின்மற்றினலுற்றிவரழிவார் - நோதகவென் மனநோகுதென்செய்கேன். (ருகூ)

வேறு.

இன்னணமுமைமெயம்மன்னையிரங்கியேயெண்ணியெண்ணிப்
பன்னினள்பரந்ததேவர்பரிந்துபசரித்தாரில்லை
பின்னிதுசுடலையாகிப்பீடழிந்திடுகவென்றுண்
முன்னவன்முன்னிச்செய்யுமுடிவினைத்தவிர்ப்பாருண்டோ. (சு0)

பனிபடுகமலம்போலப்படரொளிமுகமும்வாட
நனிபடுமுளத்தின்மீதுநவைபடுசினமுள்ளாடக்
கனிபடுமிதழ்களாடக்கடவுடன்னிடத்திலேடி
யினிபடுதக்கன்யாகமிமைப்பினிலழித்திடென்றாள். (சுக)

முன்னவளுரைத்தமாற்றமுதல்வனுங்கேட்டுச்செந்தீ
யென்னவுட்சினங்கூர்ந்துள்ளவெழில்கொளாயிரமுகத்தோ
டொன்னலர்த்தெறும்வாளாதியோங்குபல்படைகளேந்தி
யுன்னருமண்டகோடியுடைபடவீரன்வந்தான். (சுஉ)

வந்திடும்வீரன்றன்னைவள்ளலுமகிழ்ந்துநோக்கி
யிந்திரன்முனிவர்வானோரிருசுடரிவர்கள்சூழ
முந்தியநமதுபாகமுறைதவிர்த்திடுவான்யாகந்
தந்திடுதக்கன்சென்னிதடிந்தழித்திடுதிவேள்வி. (சுரு)

என்றசொற்கேட்டுவீரனெரியெழுசினமீக்கொண்டு
மன்றலங்கடுக்கைத்தொங்கல்வனைந்தவன்றனையுமன்னன்
றன்றனித்தேவியாகுஞ்சயிலமாதினையுநோக்கி
யின்றுநல்விடையெற்கீதிரென்றுபெற்றெழுந்தானன்றே. (சுச)

வேறு.

முப்புரமப்பனழித்தவிதத்தினை முன்னினனப்பொழுதே
கைப்படைபற்றியடுத்தனனத்திசையெத்திசையுங்கதற
வெய்ப்பறவுற்றவிண்ணோர்களைமுனிவரையாரையுமெப்பரிசு
மப்படியிப்படிதப்பவிடாமலடர்த்தனெணப்படுமோ. (சரு)

செங்கதிருக்கொளிபற்களுதிர்ந்தனதிங்களுமொண்கழலி
னங்கணசுங்கினனங்கியுமங்கியழிந்தனனிந்திரனும்
பங்கியறுதியபுங்கவர்தோளறுபட்டனரங்குறைவோர்
தங்களிடுக்கணையிங்ஙனடுத்துரைசாற்றமெய்க்கெளிதோ. (சசு)

இவ்வணம்யாகவவிப்பெறவந்துளர்யாரையுமோட்டியபின்
றெவ்வெனயாகமியற்றியதக்கன்சிரத்தினைவீட்டியுடன்
மைவ்வளரும் மகையோடுபல்வேதிகைவாய்ந்திடுசாலையெலா
மெவ்வமுறுஞ்சுடலைக்கிணையாக்கியெழுந்தசினந்தணியா. (சஎ)

வேறு.

அணிகொளும்வீரன்சிறுவிதிதலையையகற்றிவேள்வியையழித்த தனைத், தணிவருங்கயிலைத்தலைவன்மாட்டோைப்பசங்கரனுமையொ டுமெழுந்து, துணிபடுமுடலார்யாகசாலையினைச்சுந்தரிக்கின்புடன் காட்டக், கணிதமில்சுரருந்தக்கனும்வீறுகழிந்ததுகண்டுமைகழறும்.

மின்னிகர்சடிலவித்தகாநினது மேன்மையையறிந்திடாதின் ஞோர், துன்னியமகத்தைவீரனூற்றொலைத்தாய்தூயதாமென்னினும் யான்முன், சொன்னதோர்வழியாலழிந்ததென்றலகோர்சொல்லுமப் பழியெனைத்தொடரா, தின்னவரெழுமாறருளெனவிறைவனிருந்தி றல்வீரனுமெழுப்ப. (சகூ)

பொன்னகர்க்கிறைவனுதியோரெழுந்துபுராதனனடியிணைபரவ, வன்னவர்க்கருளைப்புரிந்தனனெம்மா னலர்விதிமகனெழக்கருதிக், கன்னிதன்பாகன்கழறுமழுவெந்தைகடுந்திறல்வீரனுமைணை, துன் னியவருடைத்தலையளித்தெழுப்பத் தோன்றலைத்தொழுதவனிரப் பான். (நிo)

நன்னெறியறியாப்புன்னெறியுடையனாயினன்பிழைபொறுத் திரங்கி, நின்னையாளிகழ்ந்தபழியதுகழிய நித்தனேயருளெனவம லன், மன்னியகாசிநன்னகரெய்திவளர்சிவபூசனைபுரிந்தா, லின்னது கழியுமென்றருள்புரிய வெய்தினன்காசிமாநகரம். (நிக)

வாரணவாசிநன்னகரெய்திமறைமொழிப்பரமனையருச்சித்,தார ணன்மகனுமரும்பழியொழிந்தே யவன்பதம்பெற்றுவாழ்ந்திருந்தா,

ஞாரணனயனுமனமயக்கெய்திநனிமலைந்திடுபொழுதிறைவன்; பூரண
மழுவெற்படிமுடிதேடிப்புந்திபெற்றுய்ந்தனர்மாதோ. (ருஉ)

இலங்கொளிக்கயிலைவிலங்கரின்பாங்கரிணர்மலர்ப்பொதும்பரி
னிடையே, நலங்கிளரிமயமடப்பிடியுடனே நாதன்வீற்றிருந்தனன்
பொழில்வாழ், விலங்கெனுமுசுவொன்றமலனன்முடிமேல்வில்லநற்
றளிருதிர்பலத்தாற், றலங்கிளரவனிதனியரசியற்றித்தகுமுசுகுந்த
ன்வாழ்ந்திருந்தான். (ருங)

வள்ளிநாயகனையுள்ளியேவெள்ளிவாரத்தின்விரதமும்மதிசேர்,
தெள்ளியவாரவிரதமுஞ்சட்டித்திதியொடுங்கிருத்திகைவிரத, மொ
ள்ளியவிதியினாற்றழிக்குகன்வந்தனக்கெதுவேண்டுவதென்ன. நள்
ளியவுலகம்யானரசியற்றநற்றுணைவேண்டுமென்றிசைத்தான். (ருச)

அண்ணலுங்களித்தேயென்னுடன்றோன்றி யருந்துணையாகி
வீற்றிருக்குந், திண்ணியவீரர்புண்ணியசீலர்திறலினரறநெறிதவறார்,
கண்ணிமைபோலென்காவல்கொண்டுள்ளார்கருத்தினுக்கிசைந்தநட்
பாள, ரெண்ணியவிலக்கத்தொன்பதுவீரரிவர்முன்னேனெனக்கிணை
யாவான். (ருரு)

தனக்கிணையில்லாருனக்குறுதுணையாத்தருதநீயஞ்சலையென்று
புனக்குறமகள்சேர்புயத்தினனகலப்புகழ்முசுகுந்தனுங்களித்தான்
மனக்கினிதளிக்குங்கந்தவெற்பணுகிவணங்கியவீரனைநோக்கி [மோ.
யெனக்கினியார்களுங்களுக்கினியாரெனக்கொளுந்திறலினீர்கேண்

பார்புரக்கின்றமுசுகுந்தவேந்தல்படைத்துணையாகிவீற்றிருந்து,
நீர்புரிந்திருக்குநம்பணிபின்புநீங்கலிர்சென்மெனவருந்தி, யோர்புரிந்
திருக்குந்தேவயாக்கைகள்பெற்றேழைமானவனிடத்தாளா, வார்புரி
ந்திருக்குமவன்பணிகொள்ளோமண்ணணின்பதமலாற்பணியோம்.

என்றிவருரைக்கவெம்பிரான்சினந்தேயென்பணிமறுத்தலானீ
வி, ரின்றுதொட்டந்தமானவராகியேகுவீரெனவவரேங்கி, நன்றறி
கில்லேநலமிலேம்புன்மை நவையுறுதீயரேமெந்தா, யொன்றுநின்
சரணேயரணெனக்கொண்டோ முய்யுமாறருடியென்றிரந்தார். ()

தாயினுமினியவருளறுமுகனுந்தடம்புயவீரனைநோக்கிப், போய
வற்கினியகேளிராப்பொருந்திப்புவியிடைநங்குலம்விளக்கி, யாயின
பின்னர்நம்பதம்பெறுமென் றருள்விடைதலைக்கொடுசெல்லச், சேயி
னிற்குந்தன்வந்தெதிர்கொண்டு திகழுறத்தழீஇப்படர்ந்தனனால். ()

தம்பதிபுகுந்தேயன்னவரிருக்கத் தனிநெடுவீதிகளாக்கி, யும்
பரும்வியக்கத்தன்னுடன்பிறந்தா ளுயர்புட்பகந்தியென்றிசைக்கும்,

வம்பலர்கூந்தற்கன்னியைவீரவாகுவுக்கணிமணவிதியா, லிம்பரின்
யாருங்களித்திடவளித்தா னிறைமுசுகுந்தனென்பெயரோன். (௬௦)

சூர்க்குலங்களைந்தேபொன்னகர்க்கிறையைச்சுடர்முடிசூட்டி
வானுலகங், கார்க்குலவொலியிறெலித்தியங்கலிப்பக் களையர்நகர்
வலம்வரலுஞ், சீர்க்குலவரம்பைமாதர்களவர்மேற்செறிமயலறிந்தறு
முகவ, னேர்க்குலவீரர்புவியிடைநம்மையெழின்மணமுடிப்பரென்
றருள. (௬௧)

நற்றவப்பயனென்றரம்பையரொல்லாநாமவேலண்ணலையுன்னி,
யுற்றவரிருக்கமுருகவேளருளா லுயர்கருவூரினும்பலவூர், வெற்றி
வேலரசர்மரபிடைப்பிறந்தார் மெல்லியர்தமைமணம்பேசிச், சொற்
றிடுமணத்தின்விதிவழிவழாது தூயவர்வேந்தனுன்மணந்தார். (௬௨)

வளம்படுபதிகள்பற்பலகொடுத்தான் மனுக்குலத்தொன்றியே
பொருந்தி, யுளங்களிப்பெய்திவாழ்ந்தனர்வீர ரும்பர்கோனவுண னு
க்கஞ்சித், துளங்கியதூதர்தங்களைநோக்கித் தூமுசுகுந்தன்மாட்டெ
ய்தி, விளங்கிடத்தேற்றிக்கொணர்கெனவந் நவேந்தனுக்குரைத்திட
மதித்தான். (௬௩)

திண்ணியவீரவாகுவோடரிமைச் செவ்விகொள்வீரருந்தானும்,
விண்ணகர்க்கிறையைக்கண்டுளந்தெருட்டி விரைந்துசென்றவுண
னேடெதிர்த்துக், கண்ணிமைப்போதிலவன்படையாவுங்கதிர்ப்ப
டைவீரர்கண்முடிக்கத், துண்ணெனவவுணன்வந்தெதிர்ப்பட்டான்
சுரர்பதியவன்றலைதுணித்தான். (௬௪)

அடுபடையவுணர்க்கஞ்சியான்பட்டவருந்துயரகற்றினையரசே,
சுடரிலைநெடுவேலண்ணலுநீயுஞ்சுரர்க்குறுங்கேளிராயினிரால், வி
டலருந்துணைவரினக்கெதுவேண்டும் விளம்பெனமன்னவன்விண்வி
த், தொடுகடலுலகிற்றியாகநாயகனைத் தொழுதிடற்கருளெனவிர
க்க. (௬௫)

இந்திரன்வருந்திமூவிருதியாக ரீந்தனனிவையலவென்றுச் [தான்
சுந்தரவிடங்கத்தியாகரைக்கொடுக்கத் தொழுதனன்வாங்கினன்வந்
முந்தியவாரூர்முதலெழுபதியின்முதல்வரைப்பதித்தனன்றொழுதான்
மந்தரநிகர்தோள்வீரரோடுளவி மன்னவன்பின்னருஞ்செய்வான். ()

சீரியவாரூர்த்தியாகருக்குரியதிருவிழாநடாத்தியபின்னர்
வீரியவீரர்தாங்கெழீஇத்திக்குவிசையங்கள்செய்தனர்மீண்டா
ரேரியவீரமொய்ம்பனின்றருளுமேந்திழைசித்திரவல்லிப்
பேரியமாதைமணவிதியாற்றூற்பேர்முசுகுந்தவேட்கீந்தார். (௬௭)

கற்பினின்மிக்கசித்திரவல்லிகருணையின்வளர்த்திடுங்கிளியைப்
பொற்பினின்மிக்கதெனநமன்மனைவிபுடையுறுதூதராற்பறித்தா
ளற்பினின்மிக்கவருங்கிளிகாணுதையர்வுழியரசனுமறிந்து
பொற்பமைவீரமொய்ம்பனுக்குரைக்கப்புகுந்தனர்நேடுவொன்வீரர். ()

மறலிதன்மனைவிமலர்க்கரம்வைத்தேவளர்ப்பதையறிந்தனர்சி
னந்து, விறலினர்நமனுக்கெழுதியேநிருபம் விட்டனரவன்விடாமை
யினாற், றிறலொடுஞ்சென்றேயவன்பதிவளைத்துச் செய்யமர்க்கஞ்சி
யேகிளியை, யறவுருவானீர்கொண்மினென்றளிக்க வதைக்கொடு
மகட்கையிற்கொடுத்தார். (௬௯)

சீரளகத்துச்சித்திரவல்லிசெழுங்கருப்பங்கொளாமையினாற்
கேரளதேயத்தரசன்வைத்திருக்குங் கிளைத்தசந்தானமாங்கனிக்கங்
கேரளவற்றபெருமையினோலையெழுதினரவன்கொடாமையினாற்
பேரளவற்றசேனையொடேகிப் பெயர்த்தனர்கொணர்ந்தனர்தருவை.

முரணினர்தருவையரணுறவைத்துமுதிர்கனிகாரிகைக்கீந்தார்
பருணிதர்புகழுங்கருப்பமதடைந்தாள்பைந்தொடிகனிகளுக்குவந்தா
டரணியின்மலைநாட்டுள்ளதென்றறிந்துதரும்படியொற்றரைவிடுத்
ரரணினரவரைத்தடுத்தனர்வந்தேயறைதலுஞ்சினந்தனர்வீரர். [தா

கேட்டலும்வீரர்படையொடுஞ்சென்றே கிரிக்குறுமன்னரைவி
ளித்தே, வாட்டலுமவர்கள்வணங்கியாமடிமைமலைபடுநாடுமதென்
றே, தீட்டலும்பெற்றேயவர்தமைக்கொண்டுசெழுங்கனிவகைவகை
யாகக், கூட்டலுங்கொணர்ந்து குமரிகைக்கொடுத்துக்கொற்றமும்
வேந்தனுக்கீந்தார். (௭௨)

செழுமலர்க்கோதைச்சித்திரவல்லிதிங்களோர்பத்துமேநிறைய,
முழுமிடலுடையமுருகவேளருளான்முந் தியமைந்தனைப்பயந்தாள்,
பழுதறுமங்கிவன்மனென்றொருபேர் பகர்ந்தனன்பார்த்திபன்மகிழ்ந்
தே, விழுமியவீரவாகுவுமிரண்டுவிளக்கநேர்குமரரைப்பயந்தான்.

மற்றையரிலக்கத்தெண்மருமீன்றார் மகாரிலாரொருவருமில்
லை, யுற்றவச்சிறார்க்குச்சிறுமிகட்குரிய மணவினைமனுக்குலத்துதி
ற்றி, முற்றியபின்னர்ச்சித்திரவல்லிமொழியிருபெண்மகவீன்றாள்,
சுற்றியகடல்போனம்மினமெங்குஞ் சூழ்ந்ததென்றிறையுளங்களித்
தான். (௭௪)

விண்ணகர்க்கிறைவன்றியாகனையிழந்தவினையினாற்புலையுருவு
ற்றே, நண்ணிநல்லாரூர்நெடும்பகலங்கணுதனுக்கணிபறைமுழக்கிப்,

புண்ணியப்பலனுற்புலேயுருமாறிப் பொன்னகரடைந்தரசாண்டான்
றிண்ணியமொய்ம்பனெனுமுசுகுந்தன் செயலினேயுசாவினனெரு
நாள். (எரு)

புண்ணியப்பலனுற்பார்புரந்தளித்தோம்புத்திரர்வழிவழிப்பயந்
தோ, மெண்ணறுகாலமிருப்பினுமெங்கட்கிருப்பிடமீதலகயிலே, ந
ண்ணியிங்கியற்றனம்பணியலவே ஈாதனேத்தொழுதனம்பணியாந்,
திண்ணியவுலகைச்சிறுவர்மாட்டிருத்திச் சேரிடஞ்சேர்தலே திண
ணம். (எசா)

என்றுயராறிவினுய்ந்தறிவுறுத்தி யிதுபுரிந்திடுதுமென்றெழுந்
தே, யன்றெழிற்பகலினக்கினிவன்மற்கருமணமுடித்திடற்கெண்
ணித், துன்றியமொய்ம்பர்வழிவருமகளேத்தூமணமாற்றினர்விதியா,
லொன்றியவனகசனகனுக்கரச னுதவியசிறார்கொடுமணந்தார். ()

பின்னரோர்பகலினக்கினிவன்மற் குயர்முடிபீடுறப்புனேந்
தே,யின்னநற்கருவூரிருந்துபார்புரத்தியெனச்சொலியனகனேயணி
சேர், நன்னகர்காஞ்சிப்பதிக்கரசாக்கிநவிலருஞ்சேனயிற்பாதி, யன்
னவற்களித்தேயடல்கெழுவீரரவர்பெருஞ்சிறாயுங்கூவி. (எஅ)

பதிமுசுகுந்தன்யாரையும்பார்த்துப்பரனருள்வரத்தினல்வலியா
ல், விதிவழியவனிபுரந்துவண்சிகியூர்வேலவனருள்பெறவுவந்தீர்,
சதிருடன்யாமுமொருமையினிருந்தோஞ் சந்ததியெவரையும்பெற்
ரு, மிதின்விழைவுற்றேயிவ்வணமிருக்கின்றுதிவந்துறுவது திண
ணம். (எகூ)

அன்றியுநமக்கோவிருப்பிடங்கயிலேயரன்மகன்விடைகொடுவர்
தோ, நன்றிஃதென்றுநாமிவணிருந்தா ஞதனுக்கெவர்பணிபுரிவா
ரொன்றியபேயுங்கயிலேவிட்டகலா துண்மையென்றறிஞர்களுரைப்
பார், துன்றியவதைவிட்டிருப்பதாற்றீயேந் தூயரேற்போவதே
துணிபாம். (அ0)

என்னவேவிளம்பியிறைமுசுகுந்தனிளஞ்சிறார்தங்களேநோக்கி
யென்னினியுரைப்பதுன்முனேர்யானுமெப்படியிருந்தனமதுபோற்
றுன்னிநீர்வாழ்மினென்றறிவுறுத்தித்தோன்றலுங்கைலேபுக்கிருந்தா
ன், பன்னருமீரர்கந்தவெற்பணுகிப்பராயினர்கந்தவேளடியே. (

வேறு.

பரமனுருருவுகொண்டபன்னிருபுயனேபோற்றி
யருமறைப்பொருளாய்நின்றவாறுமாமுகனேபோற்றி
யிருசுடர்க்கொளிகணல்குமீறிலாமுதலேபோற்றி
கருதருமபரமானந்தக்கந்தனேபோற்றிபோற்றி (அஉ)

வேறு.

சுடரிலைவடிவேற்கையனேசரணந் துங்குணக்குன்றமேசரணந், தடநெடும்புயத்திற்கடம்பணிந்தொளிருஞ்சண்முகதேவனேசரண, மிடர்தவிர்த்தாண்டவெந்தையேசரண மேனையேற்கரணனுய்சரண ம், படர்சிறைமஞ்ஞைப்பாகனேசரணம்பரமசற்குரவனேசரணம். ()

இரவிதன்பகைஞனெனுங்களைக்கணங்கணியாவையு மெடுத்தொரு கணையாற், பரவியவாழிக்கிரிப்புறக்கடலிற் படுத்திடவீழ்ந்துயிருண ங்க, விரவியகருணைகூர்ந்தொருகணையை விடுத்ததைமடித்தெமை யெடுத்தே, யுரவியலளித்துணர்வுதந்தாண்ட வொருவநின்சரண மேசரணம். (அச)

கும்பம்வந்தவனுமிடருறவியற்றுங்கொடுங்கிரவுஞ்சமுட்பட்டு, வெம்புவெந்துயரக்கடலிடைமூழ்கிவினையரேமுணங்கியகாலைப், பம் பியகருணைத்தொளிர்வேலாற் படுத்ததைக்கெடுத்தெனைப்புரந் து, தம்பியரென்னுந்தகவினைக்காட்டுந்தலைவநின்சரணமேசரணம். ()

கொடுந்தொழிலவுணக்கடல்புடைபரவக்கொலுவினிற் சூரன் வீற் றிருக்கு, மடுந்திறலவைக்கணரியயன்முதலோரனுகுதற்கஞ்சியே விலகி, விடுந்திறனுணர்ந்துமஞ்சிடாதேகும்வீறுடனுதனமீந்து, கடுந் தரச்சூர்முன்பிருக்குமாறளித்த கந்தநின்சரணமேசரணம். (அசு)

வேறு.

சுடரிலைநெடுவேலேந்துஞ்சுந்தராபோற்றிவானோ
ரிடர்தவிர்த்தருளவந்தவெந்தையேபோற்றியாங்கள்
படர்துயரொழித்துக்காக்கும்பரமனேபோற்றியெங்க
ளடலினுக்கடலாய்நின்றவப்பனேபோற்றிபோற்றி. (அஎ)

வேறு.

கண்ணிமைபோலவெங்களைக்காக்குங் களைகணேபோற்றியா முன்பு, பண்ணியதவத்தின்புண்ணியவசத்தாற் பாங்கனுய்வந்தவா போற்றி, தண்ணளிசுரக்குந்தந்தையுந்தாயுந்தமையனுமாயினுய்போ ற்றி, யெண்ணியவெங்களெண்ணமீடேற வின்னருள்புரிந்தவாபோ ற்றி. (அஅ)

எனத்துதிசெய்தேயிரங்கவெம்பெருமானினியபேரருளொடு நோக்கி,மனத்துயர்நேர்ந்ததுளதுகொன்மகியின் வழங்குவீரென்ன லும்வீர,ருனற்கருமன்னன்பதந்தொழுதெந்தா யுனதடிதணையென

வென்று,நினைப்பவர்தமக்கோருறுகணுமுறுமோ நித்தனேயெனப்புகன்றிரங்க. (௮௯)

பருதிநேர்கதிர்வேற்பண்ணவனிளைஞர் பரிபவந்துடைக்குமாறுளத்திற், கருதலும்பண்டைவடிவுவந்தெய்தக்காளையர்கந்தவேளடியை, விரவியவன்பின்வேண்டலுமையன் வீறியநம்பணிமுன்போற், புரவுகொண்டியற்றியிருமினென்றருளப் போற்றிவாழ்ந்திருந்தனர், வீரர். (௯௦)

சுடரிலைநெடுவேலண்ணலுமொருநாயேநற்றணிகையிலிருந்து கடிமலர்க்கூந்தற்கானகக்குறத்திகனியிதழமுதுணவிரும்பித், துடியிடைத்தெய்வயானையைத்துறந்து தொண்டைநாட்டணிவளையணுகி, யடியவரெண்ணமுடியுமாறருளுமப்பனோர்மூப்புருவெடுத்தான். ()

முதிர்வடிவெடுத்துமொய்வனத்திடையேமுள்ளினுங்கல்லினுநடந்து, கதிர்மணிமுறுவற்கயற்கணிகுறத்தி கவணெறிந்தோச்சியவிசைச்சொ, லதிர்கடலமுதினினியதேயென்னினதரத்தின்சுவையஃதெற்றோ, புதிதிதுபுதிதேயெனவுளமுருகிப்பொறிமயிற்குமரனுங்குற்றான், (௯௨)

தள்ளியநடையுங்கள்ளியமனமுந்தலைப்பனிப்பொடுதடியூன்றி, வள்ளிவாழ்பரணின்மருங்குறவரலுமற்றவள்யாரெனவள்ள, றுள்ளியமறிமானுள்ளவிக்கானிற்றொடர்வழிதவறியிங்குற்றேன், கள்ளியகுழலிகரடிவெம்புலிவாழ்கானிடையென்னைநீகாத்தில். (௯௩)

என்னலும்வள்ளிபுன்னகைகாட்டியெங்ஙனம்போவதென்றிசைப்பப், பின்னதுசொல்வேன்பசியெனக்குளதுபிடியனமளித்தியென்றிரப்ப, வன்னமிங்கில்லைபிண்டியுண்டளிப்பேனையநீதின்னென்றுவளித்தா, ளின்னதுதின்றாலென்குரலடைக்குமென்செய்கேன்பேதையேயென்றான். (௯௪)

இன்னதின்பாங்கரெழிற்சுனையுளதங்கெய்திநீர்விட்டிதைப்பிசைந்து,தின்னுதியென்னச்சேயிழைநின்சொற்றேனதுவெனினுநின்முலைபோற், றுன்னியமலைத்தேனளித்தியேற்பிசைந்துசுவைபடச்சுவைப்பனென்றிசைத்தான், கன்னிகைகவுளில்வைத்திதுவென்முன்கழறுவதழகதோகிழவா. (௯௫)

என்னவக்கிழவனேந்திளங்கொங்கையிளங்கொடிநுடங்கிடைமடந்தாய், முன்னதுகதையொன்றுளததைமொழிவேன்முனிவுறேல்கேட்டியென்றிசைத்தான், பின்னையுமென்னைப்புகழ்ந்துரைக்கின்று

ய் பெட்புள்ன்போலுநீயென்மே, லன்னதுமதுவேயாகுநீயப்பா லக லெனவகன்றிடான்கிழவன். (௯௬)

சொன்னதிற்குற்றய்யாதுநீசொல்வாய்தோகையேயென்னலு மடந்தை, யென்னிடையழகைக்கொங்கையினெழிலையிடைவிடாது ணைத்தனையன்றி, யன்னதற்கொப்பநினதுகண்ணென்னை யடிக்கடி நோக்குவதென்கொ,லின்னதேகுற்றமேகுதியப்பா லிங்குனைவிளித்த தாரென்றாள். (௯௭)

செங்கனித்துவர்வாய்ச்சேயரிநெடுங்கட்சீரிளம்பிடிநடைமடந் தா, யிங்கெனக்கீந்தபிண்டியையெடுக்கவென்கரம்விதிர்ப்புறலறிவா ய், பொங்கொளிகமலக்கரங்களாலென்வாய்புகட்டுதிபுசிப்பனென்றி சைப்ப,வங்கவளனதுபாங்கியீங்ககன்றாளவள்வரினருத்துவளென் றாள். (௯௮)

கிளரொளித்தரளவடங்கிடந்திமைக்குங்கிரிநிகர்தனங்களாலி லைத்துத், தளரிடைக்குவளைவிழிமடமயிலேதகைபெறுபாங்கிவந்தி ருத்து, மளவும்வெம்பசிநோய்பொறுக்கிலனங்தோவாம்பல்வாய்த்தே னொடுமலர்க்கை, யளவியின்னமுதின்வாயிடைப்புகட்டினருந்திவெ ம்பசிப்பிணிதவிர்ப்பேன். (௯௯)

என்னவக்கன்னிபுன்னகைகாட்டியிலவிதழமுதமுன்சொட்ட நன்னயமொழிகள்பன்னியப்பிண்டி நாண்மலர்க்கரங்களாலேந்தி, ய ன்னவன்வாயிற்பெய்தனளருந்தி யானந்தமெய்தியதறைதற், கென் னளவாமோவெம்பிரானல்லா லேவரேயிசைத்திடவல்லார். (௧௦௦)

கன்னலிற்பாகிற்கனிந்தமென்சொல்லுங்காரிகையுளக்குறிப்ப றிவு, முன்னவன்முன்னிமுடிந்தது நமதுமுந்தியவெண்ணமென்றெ ண்ணி, யன்னவளறியவிழிமலர்திறப்ப வருங்குரல்விக்கலுங்காட்டிப், பன்னருமறைகணேடியுந்தேறாப்பதமலர்கரங்களும்விரித்தார். (௧௦௧)

பழிவழிவந்ததென்செய்கோவென்றுபதைபதைத்துளமிகமரு ண்டு,கழிபெருந்துயரத்தொடுகரநெரித்துக் கவின்வயிற்றடியிடைப் பிசைந்து,விழிவழிப்பொழிநீர்முலைமுகட்டிழியமென்மலர்க்கைகளா லெடுத்துத், தழிவழிக்கொடுபோய்த்தடஞ்சுனையடுத்துத் தண்ணிய புனல்புகட்டினளால். (௧௦௨)

கிள்ளைமென்மொழியாளள்ளிநீருட்டக்கிழவனுங்களைதெளிந்த ணிவான்,பிள்ளைவெண்மதியார்செஞ்சடைக்கடவுட் பிரசமார்மலரடி பேணிக்,கள்ளவைம்புலனைக்கடிந்தமாதவன்போற்காட்டிநின்றவண்

முகநோக்கி,யுள்ளவெம்பசிநோய்தாகநோய்தணித்தா யோங்கியகாம
நோய்தவிர்ப்பாய். (௧0௩)

குடமுலைப்பாரஞ்சுமந்தொசிமருங்குற்கோதையேயெனதுளக்
காமங், கெடவருள்புரிவாயென்றவளடிப்பங் கேருகம்வீழ்ந்துநின்றி
ரப்ப, மடமயிலவளுங்கேட்டுளம்வெருண்டு மறமலிபுலியொராவி
ன்றோ, லுடல்படப்புனைந்ததொக்குநின்வேட முணர்விலாய்போதி
யென்றகன்றாள். (௧0௪)

உரைத்தவளகலவறுமுகங்கரந்தோ னும்பன்மாமுகமுனோன்றன்
னைக், கருத்திடைநினைக்கவொருத்தலாயவண்முன் காரொலித்தென
வொலித்தெதிர,விரைக்கருங்கூந்தன்மெல்லியன்மருண்டுவேந்தநின்
னுளத்தெணமுடிப்பே, னிரைத்துவந்தெழுமிக்கரிதுரந்தளித்திடெ
ன்றனளிறையுளங்களித்தான். (௧0௫)

கடம்பணிதடந்தோட்கந்தவேளெந்தைகாரிகைகைவசப்படலா
ற்,றிடம்பெறுமதமாவாகியதமையன்சென்றிடநினைத்தனன்செல்லக்,
குடம்படுகொங்கைமடந்தைகண்காணக் குமரவேடுவனெனத்தோன்
றி, யடங்கருங்காதற்கடல்படிந்தவளை வணங்கினையணைக்குமாறணை
ந்தான். (௧0௬)

படவரவல்குற்பைந்தொடிமடந்தைபணைமுலைதுணைப்புயத்த
ழுந்தக்,கடலமுதனையபவளவாயமுதங் கருத்தளவிசைவுறப்பருகிக்
குடங்கையினகன்றவிழிமடமாது கோட்டியதவப்பயனெய்த, வடங்
கலருயிருண்டவிர்வடிவேலோ டையனுந்தொல்லுருவெடுத்தான். (

ஆறுமாமுகமும்பன்னிருபுயமு மருள்பொழிவிழிகளீராறுங், கூ
றுமாமறைகள்பழுத்தசெவ்வாயுங் குழையொளிர்செவிகளுந்துலங்க
வீறுமாவடிவேலேந்தியகரமும் விண்ணவர்நிதந்தொழும்பதமு,நாறு
மாமலரின்றொடைபுனைகூந்த னங்கைகண்டுளமிகக்களித்தாள். (

கண்டுளங்களித்துக்கண்கணீர்சொரியக்கனியிதழமுதவாய்துடி
ப்பப்,பண்டையவசம்போய்ப்பரவசயாகிப்பரிவுடன்கண்டுகண்டுருகி
யண்டருங்காணாமலநின்வடிவ மடியவள்காணுதற்கெளிதோ, கொ
ண்டவிக்கோலங்காண்டலெத்தவமோ குமரனேயெனவடிதொழு
தாள். (௧0௯)

இந்தநற்கோலமுந்துறக்காட்டிலின்னனவின்னலேனெய்தும்,
பந்தெனப்பணைத்ததுணைமுலைநினது பணைப்புயத்தணைத்திடப்படா
தோ, வெந்தவிக்கானிலுடல்வெதுப்பெய்த விளைத்ததெனெந்தைநீ

பென்ன,முந்துநின்றவத்தின்வந்தியான்மொழிந்த மொழிவழிமுடித் தனனென்றான். (௧௧௦)

தண்டளிர்மேனித்தரளவெண்மூரற்றதைமலர்க்கூந்தல்செங்க னிவாய்ப், பண்டருமிசையாழ்ப்பான்மொழிபணைத்தோட்படவரவல் குல்சீரயில்வேற், கெண்டையேர்கணைமான்விழிமடமயிலே கிளர் மணித்தணிகைமால்வரையி, லண்டர்கள்புகழவாழ்திவாவென்றே யவட்கொடுநடந்தனன்செவ்வேள். (௧௧௧)

மதிநிகர்வதனத்தோழிகண்டோடி மறவர்கோன்றனையடைந் தெழில்சேர், கதிர்மணிமுறுவற்கன்னிநின்மகளைக் கந்தவேள்கைக் கொடுநடந்தா, னதிசயமிதுவேயாமென்றுமறியே னையனேசெய்வ தென்னென்றாள், விதிநெறியறியாவேட்டுவத்தலைவன்வெகுண்டுத ன்படையொடுமெழுந்தான். (௧௧௨)

கொடுமரம்வளைத்தார்நெடுஞ்சரந்தொடுத்தார்குகன்செலும்வழி யினையடுத்தார், கடுவிடம்புலியிற்படர்ந்தெனப்படர்ந்தார் கான்வரை க்காடுகள்கடந்தார்,விடுசுடர்வடிவேலண்ணலை மகளைவேடர்கள்யாவ ருங்கண்டார்,வடுவகிர்நெடுங்கண்வள்ளியைக்கவர்ந்தாய் மதியிலாயெ னச்சொலிமறித்தார். (௧௧௩)

மறித்துவில்வேடர்வேடனை நோக்கிமறிவிழியான்மகடனைக் குறித்துவந்தெடுத்துக்கொண்டுபோகின்றாய் கொடியனேநின்றலையி ன்னே, தறித்திவண்படுத்துவிடுவமென்றெடுத்துத்தனுவளைத்தா ர்க்கனரெதிர்த்துச்,செறித்துவெங்கணைகள்சொரிந்தனர்செவ்வேடிரு வடிக்கிடுமலரான. (௧௧௪)

பிடிநடைமடந்தைகருத்தறிந்தெம்மான் பிடித்திடுங்கொடியி னைநோக்க, விடியெனமுழக்கமிட்டதாலெயினர் யாவருமயர்ந்தனர் வீழ்ந்தார். துடியிடைக்கன்னிசோர்வுகொண்டிறலுந் தோன்றலுமவ ளுளமறியக், கடிமலர்ப்பொழில்வாய்ச்செல்லவக்கோதை கண்டுளம் பெருதுடனடந்தாள். (௧௧௫)

நாரதன்சொற்கொண்டையரும்வள்ளி நாயகிக்கருளுமவன் போய்ப்,பாரதிற்கிடக்குந்தந்தையேமுதலாம்படையுடையினரை யெழுப்பச், சீரதிற்சிறந்தமுருகவேளருளைத் தேர்ந்தடிபோற்றிநின் றேத்தி, வீரமிற்சிறந்தகுமரனைமகளை விதியுளிமணஞ்செய்யட்டுந் தார். (௧௧௬)

## வேறு.

மருமணக்குழல்வள்ளியைவள்ளியோன்மணவிதிப்படிபற்றுத ன்ன்றெனத், திருமணத்திறுக்குற்றகிளைஞர்கள்சேர்வுறும்படிசிந் தையிலுன்னலு,மருமணத்தொடையிந்திரனுதியோ ரரியதம்பியரா நவவீரருங், கருமணத்தைசத்தகர்த்திடுமந்தணர்காதன்மங்கையரோடு வந்தெய்தினர். (௧௧௭)

ஆடலம்புயவீரன்மணவினைக்கரியநல்லணியாற்றிடவெண்ணி யே, தோடவிழ்மலர்ச்சோலையும்வாவியுந் தொடுமணற்படுபாணியுங் கேணியு, மாடமாளிகையும்மடப்பள்ளியுமாதரார்நடமாடரங்காதியுந், தேடருமணப்பந்தருஞ்செய்தனன்றேவர்சேனுபதியடிபோற்றினன்.

இன்னபான்மையறிந்தறுமாமுகனெழில்கொளூரதன்றன்முக நோக்கியே, கன்னிபாகனென்றந்தையயன்னையைக்கருதியேமண வெள்ளியையாற்றெனச், தன்னியன்னசடங்குதொடங்கினுன்றா ன்மாமணக்கோலங்கொண்டெய்தியே, யென்னக்காவணத்தூடுநுழைந் தறிர்மாமைசேருமணத்தவிசுற்றனன். (௧௧௯)

எட்டுத்திக்குளகாட்டுறைவேடுவரெழில்கொள்கற்புடைமங்கை யரெண்ணிலார்,கட்டுபூங்குழல்வள்ளியைக்கிட்டியுட்காதலான்மணக் கோலமியற்றினர், பொட்டுமிட்டுமைக்காப்பணியிட்டனர்போற்று மங்கலவாழ்த்தொலிவாழ்த்தினு, ரிட்டம்வைத்துறைகட்டழகன்பு டையேற்றினருளம்யாருங்களிக்கவே. (௧௨௦)

வேதவார்ப்பெழவிண்ணவரார்ப்பெழவீறுமங்கலவின்னியமார்ப் பெழக், காதலாயுறைகானவர்கோன்குலக்கன்னிகையைப்பிடித்திய வான்பெற, மாதுதங்தடக்கன்றிருக்கையினில்வைத்தருப்புனல்வார்த் துவழங்கினுன், கீதமார்த்தனர்கின்னரர்வானவர்களருமாமலர்மாரி சொரிந்தனர். (௧௨௧)

துங்கமன்றற்சடங்குமுடிந்ததுந்தூயனுறுமுகன்மலர்க்கைகளா ன், மங்கலந்தெறிமங்கலநாண்கொடுவள்ளிகந்தரத்தேற்றிக்கரம்பி டித், தங்கிவலம்வந்தவடன்னடியம்மிமைத்தேயருந்ததிநோக்கச் செய், துங்கரலிக்களியமுதுட்கொளத்தோகைமார்பலர்சோபனம் பாடினர். (௧௨௨)

வேட்டுமங்கைதனேட்டநறையுணவேட்டுநற்றணிகைக்கிரி யுச்சியிற், கோட்டுதங்கச்சினகரப்பள்ளிமேற்கோட்டுமோர்குயவள்ளி யுந்தானுமா, வீட்டுமன்பினிறுகுறக்கட்டியேயிடையிறுக்கிடறோட்

வொனுன்னியாங், காட்டுசெந்தக்குயங்கள்புயங்களிலழுத்தியின்பக்க
டற்படிந்தானரோ. (௧௨௩)

வேறு.

நிறைவுறப்பூத்தகொம்பைநிகர்குறக்கொடியுமோர்நா
ளிறைவனை நோக்கியிந்தவெழிற்றிருத்தணிகைமேன்மை
யறைகெனவள்ளல்சேட்டேயக்கிரிமான்மியங்கள்
குறைவறவிசைக்கவேடக்குமரியுண்மகிழ்வுகூர்ந்தாள். (௧௨௪)

பின்னருமொருநாளந்தப்பெய்வளையணங்கினோடுந்
துன்னருங்கயிலைவெற்பைச்சூழ்கந்தக்கிரியையண்ணப்
பன்னருந்தெய்வயானைபரவலுபவளைப்புல்லி
புன்னருங்களிப்பினோடுமொருமையினிருந்தானோர்நாள். (௧௨௫)

ஆனதுகாலைதன்னிலருங்குறவள்ளியம்மை
மானவன்மகடன்பாதம்வணங்கலுமெடுத்துப்புல்லி
ாணிவண்டனிமைத்தாயநவையொழித்திட்டாய்நன்றே
ீனமதின்றிவாழ்மெமிருத்தியென்றிசைத்தாண்மன்றோ. (௧௨௬)

நருசங்கிழித்துவெற்றிதுன்னியவடிவேலைய
னருறுங்கூந்தன்மாதரிருவருமிருபான்மேவச்
ருழுமணிப்பீடத்துச்சேர்ந்துழித்தெய்வயானை
ாருறுங்குழலாள்வந்ததன்மையைச்சாற்றுகென்றாள். (௧௨௭)

ளிமொழியணங்குகேட்டிகிளரராவணையானின்ற
ளிரடிமடவீர்நீவிர்தடம்புயமணையவென்னை
ளித்தவநெடுநாட்செய்தீருங்களைமண்ணில்விண்ணி
லளிவரவளர்வீர்வந்தியாமணமுடித்துமென்றேன். (௧௨௮)

னதுமுறையானீபோயமரர்கோனிடத்துவாழ்ந்தாய்
ன்னதுநெறியின்வேட்டேன்முதிர்நகையிளையாள்பாரின்
ன்னதுவென்னுமானைமெய்ச்சிவமுனிவன்சேரப்
ன்னதுபெற்றவிந்தப்பேதையைவளர்த்தான்வேடன். (௧௨௯)

படர்கோன்வளர்க்கவள்ளிவெற்பிடையிருக்கயான்போய்
ருமாயஞ்செய்தநன்மணமுடித்தேனென்னக்
ருமகிழ்வாய்த்தெய்வகுஞ்சரிவள்ளியோடும்
ருமன்பினோற்செவ்வேடனைச்சேர்ந்துவாழ்ந்தார். (௧௩௦)

சூர்க்குலங்களைந்தவைவேற்சுந்தரன்சரிதஞ்சொல்வோ
ரோர்க்குறுமன்பிற்கேட்போரிசையின்வாசிப்போர்காண்போர்

MAHAMAHOPADHYAYA

சீர்க்குலமுழுதுஞ்செல்வச்சிறப்பொடுந்திருவினோங்கி
நீர்க்குலக்கடல்போனீடுநிலத்திடைநீடுவாழ்வார். (௧௯௧)

சுடரிலைநெடுவேலண்ணல்சுந்தரக்காதைகேட்போ
ரிடர்மிடிபிணிவன்றெய்தாரிகலினர்பகையைவெல்வார்
திடமுடன்செல்வமோங்கிச்சீரியசிறுவரையீன்று
தொடர்பவந்துரந்துவிண்போய்ச்சுரர்களாவாழ்வர்திண்ணம். (௧௯௨)

சூர்க்குலக்களையைப்போக்கிச்சுரர்குலப்பைங்கூழோம்புங்
கூர்க்குலக்குடுமிவைவேற்குகன்விளையாடல்கேட்போர்
பார்க்குளேவருங்கொண்டாடிப்பரவவீற்றிருந்தந்தத்தி
னூர்க்குமேலொண்ணுவேலனடியிணைநீழல்சேர்வார். (௧௯௩)

வேறு.

ஆறுமாமுகங்கள்வாழியாறிருபுயங்கள்வாழி
தேறுமாமயிலும்வாழிசேவலுங்கொடியும்வாழி
கூறுமாவடிவேல்வாழிகுலவியகருணைவாழி
வீறுமாவென்றிவாழிவிரைமலரடிகள்வாழி. (௧௯௪)

வேதமாறங்கம்வாழிவிண்ணவர்பதங்கள்வாழி
மாதமும்மாரிவாழிமன்னவர்செங்கோல்வாழி
யேதமிலறங்கள்வாழியிணையறுசைவம்வாழி
தீதறுதலங்கள்வாழிசெறிசமயங்கள்வாழி. (௧௯௫)

தேவிமாரிருவர்வாழிசிவனெழுத்தைந்தும்வாழி
மேவியவுருத்திராக்கம்வெண்டிருநீறும்வாழி
தாவிலாவடியார்வாழிதகுநவவீரர்வாழி
யோவில்சீர்ப்புராணத்தோடமோதுசங்க்ரகமும்வாழி. (௧௯௬)

திருச்சிற்றம்பலம்.

## கந்தபுராணச்சங்கிரகம் முற்றிற்று.

ஆகக் காண்டங்கள் ௬ - க்குத் திருவிருத்தம். ௪௫௬.

திருச்சிற்றம்பலம்.